# உதயன்

26 பக்கங்கள்

விலை ரூபா.25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 056 வள்ளுவர் ஆண்டு 2044 தை 08 திங்கட்கிழமை (21/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily





மழையில் கரைந்த வெற்றி 23

குற்றப் பிரேரணைக்கு ஆதரவளித்தோர் மீது நடவடிக்கை 17

நட்புறவுடன் செயற்பட பாகிஸ்தான் முன்வர வேண்டும் 08


# தமிழர்களின் போராட்டம் விரிவடைந்து வருகிறது

## மட்டக்களப்பில் சம்பந்தன்

களுவாஞ்சிக்குடி, ஜனவரி 21

தமிழர்களின் உரிமைப் போராட்டம் ஓய்ந்து விடவில்லை. மாறாக அது இரத்தம் சிந்தாத வழியில், வன்முறைப்பாதையைத்தவிர்த்து, இன்னொரு வியூகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இன்னும் தெளிவாகச் சொன்னால் எமது போராட்டம் முன்னரைக் காட்டிலும் இப்போது பரவலடையத் தொடங்கி விட்டது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில், தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.மு.இராசமாணிக்கத்தின் நூற்றாண்டு விழா நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார். அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களை மாத்திர

பார்க்க பக்கம் 04

"மிக விரைவில் கூட்டமைப்பு தீர்க்கமான முடிவொன்றை தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு எடுக்கவுள்ளது. இதற்கு சர்வதேசமும் உறுதுணையாக இருக்கும்."



## பிரபாவின் கனவை நனவாக்கவே அமெரிக்க மூவர் குழு இலங்கைக்கு

### சிங்கள தேசிய அமைப்புகள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.21

புலிகளின் தலைவர் பிரபாகரனின் கனவை நனவாக்கும் நோக்குடனேயே அமெரிக்கா தனது மூவர் அடங்கிய 'திரிசூலக் குழுவை' இலங்கைக்கு அனுப்புகிறது. இதனை ஜெனிவா இராஜதந்திரச் சமருக்கு அமெரிக்கா விடுக்கும் அறைகூவலாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

-இவ்வாறு தெரிவித்துள்ளது கடும் போக்குடைய சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர் மட்ட அதிகாரிகள் அடங்கிய இராஜதந்திரக் குழுவின் இலங்கைப் பயணம் குறித்து கருத்து வெளியிடும்போதே தேசிய அமைப்புகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளரும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவருமான கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அமெரிக்கா தற்போது நாளாந்தம் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது. அனைத்து

பார்க்க பக்கம் 04

## தொழில்நுட்பப் புலனாய்வே தோற்கடித்தது புலிகளை

கொழும்பு, ஜன.21

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் படையினர் வெற்றி பெறுவதற்கு, அனைத்துப் புலனாய்வுப் பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டமையே முக்கியமானகாரணம் -இவ்வாறு தெரிவித்துள்ளார் சிறப்பு அதிரடிப்படையின் முன்னாள் கட்டளை அதிகாரியான நிமால் லெவ்கே.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றில், எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இறுதிப் போரில் விடுதலைப் புலிகளைத் தோற்க

பார்க்க பக்கம் 04

## களனி என் உயிர்; உருகுகிறார் மேர்வின்

கொழும்பு, ஜன.21

களனி பிரதேசத்திலிருந்து அமைச்சர் மேர்வினை வெளியேற்றுமாறு வலியுறுத்தி தொடர் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுவரும் நிலையில், தான் அங்கிருந்து ஒருபோதும் வெளியேறமாட்டார் என்றும், தாமது அஸ்திகூட களனி ஆற்றில்தான் கரைக்கப்படும் என்றும் அமைச்சர் மேர்வின் நேற்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

களனி அரசியல் களத்தில் மட்டுமன்றி, மத்திய அரசியல் களத்திலும் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள அமைச்சர் மேர்வின் அண்மையில் களனித் தொகுதி அமைப்பாளர் பதவியை இராஜிநாமா செய்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் கௌரவத்தைப் பாதுகாக்கும் நோக்கிலேயே தாம் பதவியை இராஜிநாமா செய்தார் என்று நேற்று அவர் அதற்குப் புது விளக்கமொன்றை

பார்க்க பக்கம் 04

## பராக்! பராக்!! ஒபாமா



வோஷிங்டன், ஜன.21

பராக் ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது தடவையாக நேற்று உத்தியோகபூர்வமாகப் பதவியேற்றுக் கொண்டார். அவருடன் துணை ஜனாதிபதியாக ஜோய் பிடினும் தனது பதவியை வெள்ளை மாளிகையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

(மற்றொரு செய்தி 9 ஆம் பக்கத்தில்)

## சஜித்தின் பிரதித் தலைவர் பதவியில் பாதி ரவிக்கு?

கொழும்பு, ஜன.21

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக்கூட்டம் இன்று மதியம் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஸ்ரீகொத்தாவில் நடைபெறவுள்ளது.

அதன்போது பிரதித் தலைவர், உபதலைவர், தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட முக்கிய பதவிகளுக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

குறிப்பாக, உபதலைவராக ஜோசேப் மைக்கல் பெரேராவும், தேசிய அமைப்பாளராக தயா கமகேயும் மீண்டும் தெரிவுசெய்யப்படுவர் என ஐ.தே.க. வட்டாரங்களிலிருந்து அறிய வருகின்றது.

பார்க்க பக்கம் 04

## எரியுண்ட நிலையில் யுவதியின் சடலம்

முல்லைத்தீவு, ஜன.21

முல்லைத்தீவு விசுவமடுப்பகுதியில் இளம் யுவதியொருவர் எரியுண்ட நிலையில் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் சர்வோதயா வீதி, ஆவரங்கால் புத்தூரைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் பானுஜா (வயது 21) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த யுவதி கடந்த சில தினங்களாக அந்தப் பகுதியில் நடமாடியதை பொதுமக்கள் பலரும் கண்டுள்ளனர். நேற்றுக்காலை விசுவமடு 12 ஆம் ஒழுங்கையிலுள்ள பனை மரங்கள் நிறைந்த வளவொன்றில் உருக்குலைந்த நிலையில் இவரது சடலத்தை பொது மக்கள் கண்டுள்ளனர். பின்னர் இது குறித்து படையினருக்கும், பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர். இதனையடுத்து சம்பவஇடத்துக்கு நேற்று நண்பகல் சென்று விசாரணைகளை மேற்கொண்ட முல்லைத்தீவு பொலிஸார், சடலத்தை உடற்கூற்று பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

(ந-16-6-400)

## பல்கலை மாணவர்களின் கல்வியை சீர்குலைக்கவே சதி செய்கிறது அரசு

### குற்றஞ்சாட்டுகிறார் மனோ கணேசன்

கொழும்பு, ஜன.21

பல்கலைக்கழக மாணவர்களுக்குப் புலி முத்திரை குத்தி அவர்களைப் பயங்கரவாதிகளாகச் சித்திரிப்பதை மஹிந்த அரசு இன்னமும் கைவிடவில்லை. யாழ். பல்கலை மாணவர்களைத் தொடர்ந்து தடுப்பில் வைத்திருப்பதற்காக, அரச தரப்பினர் வாயில் வந்த வார்த்தைகளைப் பிரயோகித்து வருகின்றனர். ஜனாதிபதி மஹிந்த, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய, யாழ். கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க, உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. ஆகிய நால்வரும் வடக்கிலும், தெற்கிலும் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை இராணுவ மயப்படுத்தி சீர்குலைப்

பார்க்க பக்கம் 04

## ஈழத்தமிழர் கலாசாரத்தை அழிக்கிறது அரசு

### கதறுகிறார் கருணாநிதி

சென்னை, ஜன.21

இலங்கை அரசு திட்டமிட்டு தமிழ் மொழியையும், கலாசாரத்தையும் அழித்து வருவதுடன் தமிழ் மக்களது வழிபாட்டுத்தலங்களையும்

பார்க்க பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்கு ஆதரவாகச் செயற்பட மத்திய அரசை மாற்ற முனைய வேண்டும்

## தமிழக கட்சிகளுக்கு ராமதாஸ் வேண்டுகோள்

இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை குறித்து, மனித உரிமை ஆணையத்தில் தீர்மானம் நிறைவேற்ற வலியுறுத்தப்பட வேண்டும்.

இந்த விவகாரத்தில் மத்திய அரசை ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்பட வைக்கத் தமிழக கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கையில் போர் முடிவடைந்து 4 ஆண்டுகள் நிறைவடையவிருக்கும் நிலையில், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதற்கு இன்று வரை நீதி வழங்கப்படவில்லை. இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற உலக நாடுகளின் கோரிக்கைகளை இலங்கை அரசு தட்டிக்கழித்து வருகிறது.

கடந்த ஆண்டு ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில், இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக அந்தநாட்டு அரசே விசாரணை நடத்தி, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரும் தீர்மானம் கொண்டு வரப்பட்டு இந்தியா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

அதன்பின் ஓராண்டாகிவிட்ட நிலையில், இலங்கையின் மனித உரிமைச் சூழலில் எந்த ஒரு முன்னேற்றமும் தென்படவில்லை. ஐ.நா. மனித உரிமை ஆணையக் குழு இலங்கை சென்ற போது, அதன் விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்த ராஜபக்ஷ அரசு, மனித உரிமை ஆணையத் தலைவர் நவநீதம் பிள்ளையின் இலங்கைப் பயணத்துக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து தர மறுத்து வருகிறது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைதியான முறையில் மாவீரர்நாள் நிகழ்ச்சிகளை நடத்திய தமிழ் மாணவர்களைக் கைது செய்து கொடுமைப்படுத்துதல், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பத்திரிகையாளர்களை அச்சுறுத்துதல், தமிழ் பெண்களை கட்டாயப்படுத்தி இராணுவத்தில் இணைத்து அடிமைகளைப் போல நடத்துதல், தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் 10 மக்களுக்கு ஒரு இராணுவ வீரர் என்ற வீதத்தில் படையினரை நிறுத்தி தமிழர்களின் சுதந்திரத்தைப் பறித்தல், தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களின் அதிகாரத்தைப் பறிக்கும் சட்டத்துக்கு அனுமதி மறுத்த தற்காக இலங்கை உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியை பதவி நீக்கம் செய்தது, தமிழர்கள் வாழும் பகுதிகளை சிங்களமயமாக்குவது என்று இலங்கை அரசு தொடர்ந்து அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகிறது.

இலங்கை அரசின் இந்த போக்கை ஐ.நா. மனித உரிமை ஆணையத் தலைவர் நவநீதம்பிள்ளையும், ஏனைய உலகத் தலைவர்களும் கடுமையாக கண்டித்திருக்கின்றனர். ஆனால், இந்திய அரசு இதை இன்று வரை கண்டிக்காதது மிகுந்த வேதனை அளிக்கிறது- என்றுள்ளது. (வ)

# 307 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

## 13 இலட்சம் ரூபா அபராதம்

வடமராட்சி,ஜன.21

கடந்த வருடத்தில் வடமராட்சிப் பிரதேசத்தில் சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனை, போதைப் பொருள்களை சிறுவர்களுக்கு விற்பனை ஆதிய குற்றச்சாட்டின் கீழ் 307 பேருக்கு எதிராக பருத்தித் துறை நீதிமன்றத்தில் வழக்கு கள் தாக்கல் செய்யப்பட்டு 13 இலட்சம் ரூபா அபராதமாகப் பெறப்பட்டது.

கடந்த 2010ஆம் ஆண்டிலும் பார்க்க 2011ஆம் ஆண்டு சட்டவிரோத மதுபான, போதைப்பொருள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்குகள் மிக அதிகரித்துள்ளன.

கடந்த வருடத்தில் 61 பேருக்கு 65 ஆயிரம் ரூபா மட்டும் அபராதம் விதிப்பு.

2010ஆம் ஆண்டில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக 61 பேருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 65 ஆயிரம் ரூபா மட்டுமே அபராதமாக அறவிடப்பட்டிருந்தது. (ம-8)

# இறைச்சிக்காக திருடப்படும் கட்டாக்காலி கால்நடைகள்

யாழ்ப்பாணம், ஜன.21

அரியாலை கிழக்கு முள்ளிப் பகுதியில் கட்டாக்காலிகளாக நடமாடும் கால்நடைகளை திருடர்கள் அபகரித்துச் செல்வது அதிகரித்துள்ளது.

இவ்வாறு களவாடப்படும் கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளின் எச்சங்களை திருடர்கள் முள்ளிகாட்டுப் பகுதியில் வீசிவிட்டும் செல்கின்றனர்.

இவ்வாறான சம்பவங்களை தடுத்து நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவ்டிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-17)

# பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவைக்குக் காணி வழங்கல்

## பொங்கல் தினத்தில் கையளிப்பு




பளை, ஜன.21

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் தைப் பொங்கல் தின விழா நேற்று பளை முல்லையடியில் உள்ள பேரவை அலுவலகம் முன்பாக இடம்பெற்றது.

பேரவைத் தலைவர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் பொங்கல் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

பேரவையின் மத்திய குழுத் தலைவர் ப.அரியரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு செயலாளர் க.தெய்வேந்திரம், நெடுங்கேணி பிரதேச செயலர் க.பரந்தாமன், சாவகச்சேரி நகரசபை செயலாளர் க.புத்திசிகாமணி , பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆனந்தசிவா ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவைக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கவென பளையைச் சேர்ந்த, தற்போது கனடாவில் வதியும் சேதுகாவலர் குடும்பத்தினர் தமது காணியின் ஆவணத்தை பேரவைத் தலைவரிடம் கையளித்தனர்.

நிகழ்வில் வேம்பொடுகேணி சீ.சீ.த.க பாடசாலை, கிளாலி றோ.க.த.க பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த 60 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பேரவையால் நடத்தப்பட்ட ஐந்தாம் கட்ட கணினிப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 20 பயிலுனர்களுக்கு சான்றிதழ்களும் பிரதேசத்தைச் சேர்ந்த முன்பள்ளி சிறார்களுக்கு பேரவையின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவுப் பொருள்களும் முன்பள்ளி ஆசிரியைகளிடம் வழங்கப்பட்டன.

பேரவையின் ஆறாம் கட்ட கணினிப் பயிற்சி நெறியும் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ம-9)

# செஞ்சோலை சிறுவர் இல்லம்; நேற்று திறந்து வைத்தார் கே.பி.




புனர்நிர்மாணம் செய்யப்பட்ட செஞ்சோலை சிறுவர் இல்லம் நேற்று ஞாயிற்றுக் கிழமை கே.பியினால் திறந்துவைக்கப்பட்டது. கிளிநொச்சி, இரணைமடு வீதியில் அமைந்துள்ள செஞ்சோலை சிறுவர் இல்லத்தினை இவரே பொறுப்பேற்று நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த திறப்பு விழாவில் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர். செஞ்சோலை சிறுவர் இல்லம் முன்னர் விடுதலைப் புலிகளினால் பராமரிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.(16)

# கொடிகாமம் பொதுச்சந்தையின் குறைபாடுகளுக்கு விரைவில் தீர்வு

கொடிகாமம், ஜன.21

கொடிகாமம் பொதுச் சந்தை வியாபாரிகள், பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கை இந்த மாதத்தில் நிறைவு செய்யப்படவுள்ளது. இதற்கான தீர்மானம் சாவகச்சேரி பிரதேச சபையின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு மதிப்பீடுகளும் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பொதுச் சந்தை வளாகத்தில் சர்ச்சைக்குரிய நிலையில் காணப்பட்ட மலசல கூடம் புனரமைக்கப்படுவதுடன் தொட்டி அமைத்தல், வளாகத்தில் குழாய் கிணறு அமைக்கப்பட்டு சந்தை வியாபாரிகள், பொது மக்களுக்கு குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கல், வளாகத்தைச் சுற்றி சேதமடைந்துள்ள மதில்கள் புனரமைக்கப்படுவதுடன் முட்கம்பி வேலிகளை வலை வேலிகளாக மாற்றல், பாவனையின்றி மூடப்பட்டுள்ள மரக்கறி விற்பனைப் பிரிவை நவீன முறையில் புனரமைத்து மரக்கறிப் பிரிவை அதனுள் இயக்குதல் போன்ற வேலைத் திட்டங்களைச் சபை நிதியிலிருந்து செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பொதுச் சந்தையில் உள்ள குறைபாடுகளை நீக்கக் கோரி கொடிகாமம் வர்த்தக சங்கம் உட்பட பொது மக்கள் நீண்டகாலமாக பிரதேச சபையில் முறையிட்டு வந்ததை சுட்டிக்காட்டி, உதயனில், பல தடவைகள் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## 80 ஆவது வருட பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை ஐக்கிய நாணய சங்கத்தின் 80 ஆவது வருட பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் க.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம)

## 3 விவசாயிகளுக்கு விதை வெங்காயம்

வேலணைப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட மூன்று விவசாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில் விதை வெங்காயம் வழங்கப்பட்டுள்ளது. வெங்காய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடனேயே இந்த விவசாயிகளுக்கு வெங்காயம் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விவசாயிக்கும் ஆறு அந்தர் வீதம் மானிய அடிப்படையில் விவசாயத் திணைக்களத்தால் விதை வெங்காயம் வழங்கப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். அல்லைப்பிட்டி, நாரந்தனை, மெலிஞ்சிமுனை பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கே இந்த விதை வெங்காயம் வழங்கப்பட்டது.(3-17)

## குழந்தை யேசு தேவாலயத் திருவிழா

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை குழந்தை யேசு தேவாலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நற்கருணை ஆராதனை வழிபாடு இடம்பெற்று மறுநாள் சனிக்கிழமை காலை 7 மணிக்கு கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு எமில் போல் அடிகளார் தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்வுகள் இன்று

அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அதிபர்களுக்கான கூட்டம் பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ம-9)

### பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மேலும் ஒரு பகுதியில் குடியமர்வு

பளை, ஜன.21


பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மேலும் ஒரு பகுதியில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி மேற்கில் உள்ள வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவில் இந்திராபுரம் தவிர்ந்த ஏனைய பகுதியில் (நவுணவெளி அம்பாள் ஆலயம் வரையான பகுதி) விரைவில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இந்தப் பகுதியில் வெடிபொருள்கள் அகற்றும் பணிகள் முடிவடைந்துள்ளன. இதனால் மக்களை மீளக்குடியமர்த்தும் பணிகள் விரைவில் இடம்பெறவுள்ளன என்று பளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

பிரதேசத்தில் உள்ள இத்தாவில் கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதி, முகமாலை தெற்கு, வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவின் இந்திராபுரம் ஆகிய பகுதிகளில் வெடிபொருள்கள் அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

வெடிபொருள்கள் அகற்றும் பணிகள் பூர்த்தியடைந்ததும் மீளக்குடியமர்வு இடம்பெறும் எனவும் தெரிவித்தார். (ம-9)



யாழ். நகரில் பிரதான வீதியில் தொலைபேசி இணைப்பு வயர்களின் சுமையால் தொலைபேசிக் கம்பம் பாறி விழும் நிலையில் உள்ளது. தந்தை செல்வா சதுர்க்கத்துக்கு முன்பாகச் செல்லும் பிரதான மார்க்க இணைப்புக் கம்பமே இவ்வாறு சரிந்து காணப்படுகின்றது. (ம-17)

## உல்லாசத்துறை மையமாக மாறவுள்ள மண்டைதீவுப் பகுதி

### ஆளுநரின் அனுமதி கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜன.21

மண்டைதீவு, குருசுத்தீவு, சிறுத்தீவு ஆகிய பிரதேசங்கள் இணைக்கப்பட்டு வர்த்தக மற்றும் உல்லாச, விமான போக்குவரத்து மையமாக விரைவில் மாற்றப்படவுள்ளன.

இந்தோனேசியா பிரி. பனோறோமா உற்றாமா அபிவிருத்தி நிறுவன தலைவர் வாசுதேவன் இராசையா வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதியை கடந்த வாரம் பெற்றுள்ளார்.

ஏழு பெரிய துறைகளை முன்னிறுத்தி தீவகம் தெற்கு, மண்டைதீவில் உல்லாசத்துறை, ஹோட்டல், விமான போக்குவரத்து, கப்பல்துறை அபிவிருத்தி போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இரு வாரங்களில் மண்டைதீவு முழுவதுமான நிலம் அளவை செய்யப்படவுள்ளது.

பெப்ரவரியில் இந்தத் திட்டத்தின் முதற்கட்டப் பணி ஆரம்பமாகும் என்று கூறப்பட்டது. (ம-50)

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் கடந்த ஆண்டில் சிகிச்சை பெற்றனர் ஒரு லட்சத்து 31 ஆயிரம் பேர்

### புள்ளி விவரங்களில் தகவல்

யாழ்ப்பாணம், ஜன.21

*தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடந்த வருடம் ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 109 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. வலி. வடக்குப் பிரதேசத்தின் மீளக்குடியமர்வு நடவடிக்கைகளின் போது மீண்டும் தனது சொந்த இடத்தில் புதிய கட்டடத்தில் மருத்துவ சேவையை ஆரம்பித்துள்ள தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நாளாந்தம் அதிக எண்ணிக்கையானோருக்கு சிகிச்சையை வழங்கி வருகிறது.*

இந்த நிலையில் கடந்த வருடம் 12 மாத காலப் பகுதிக்குள் ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 109 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். சிகிச்சை பெற்றவர்களில் அவர்களில் 80 ஆயிரத்து 413 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். காய்ச்சல், தடிமன், சளி, இருமல், வாதம், நீரிழிவு, விபத்துக்களால் ஏற்பட்ட காயங்கள், தொற்றுநோய்கள் போன்ற பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் அதிகளவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தொற்று நோய்களால் அதிகளவு சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருந்ததுடன் விடுதிகளில் தங்கியிருந்தும் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதனைவிட விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற 8 ஆயிரத்து 92 பேரில் அதிக எண்ணிக்கையானோர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பொது மருத்துவக் கிளினிக் சிகிச்சைப் பிரிவுகளில் 42 ஆயிரத்து 604 பேர் தொடர்ச்சியாக குறிக்கப்பட்ட காலத்துக்குள் சிகிச்சை பெற்றுள்ளனர். அதிக எண்ணிக்கையானோர் தற்போதும் சிகிச்சையைத் தொடர்ந்து வருகின்றனர்.

இதனைவிட சிகிச்சை பெற்ற நோயாளர்களில் தடுப்பூசி வழங்கும் பிரிவில் நாய்க்கடிக்கு ஆளான ஆயிரத்து 547 பேர் விசர் நாய்க்கடி தடுப்பூசிகளை ஏற்றியுள்ளனர்.

கடந்த வருடத்தைவிட இந்த வருடம் அதிக எண்ணிக்கையான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் கூடம், இரத்த வங்கி, அவசர சிகிச்சைப் பிரிவு, கண் சிகிச்சைப் பிரிவு போன்றவை நவீன வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதுடன் ஆளணிப் பற்றாக்குறையும் நிவர்த்தி செய்யப்பட வேண்டிய தேவையுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-14-36)

# போதைப் பொருள் பாவனையிலிருந்து இளையோர் விடுவிக்கப்பட வேண்டும்

### கலாசார நிகழ்வுகள் இதற்கு உதவும் என்கிறார் பரு.மதுவரித் திணைக்கள அதிகாரி

வடமராட்சி, ஜன.21

மதுபானம், போதைப் பொருள் பாவனைகளில் இருந்து இளம் சமூகத்தினரை விடுவிக்க கலாசார நிகழ்வுகள் ஊடாக அவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த பொது அமைப்புக்கள் முன்வர வேண்டும்.

பருத்தித்துறை மதுவரித் திணைக்கள அதிகாரி எஸ். அசோகரட்ணம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

**பொது மக்கள் பூரண ஒத்துழைப்பு இன்மையால் சட்டவிரோத மதுபாவனை தொடர்பான குற்றச் செயல்கள் வடமராட்சிப் பிரதேசத்தில் தலைதூக்கியுள்ளன.**

வடமராட்சிப் பிரதேசத்தில் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளில் கடந்த வருடங்களை விட 2011 ஆம் ஆண்டு சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனை புகைபொருள்களை சிறுவர்களுக்கு விற்பனை செய்தல் போன்ற குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன.

மதுவரித் திணைக்களத்தால் இந்தப் பிரதேசத்திலுள்ள கரவெட்டி, திக்கம், அல்வாய் மேற்கு போன்ற கிராமங்களில் சட்ட விரோத மது மற்றும் புகையிலைப் பொருள்கள் விற்பனையும், பாவனையும் தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் கடந்த வருடம் நடத்தப்பட்டன.

அத்துடன் வடமராட்சிப் பிரதேசத்தில் மதுபாவனையற்ற கிராமத்தை உருவாக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் 16 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அந்தந்த கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஊடாக, சிறுவர்களுக்கு மதுபானம் புகையிலைப் பொருள்கள் விற்பனை, சட்ட விரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனைகளில் இருந்து விடுவித்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு அவற்றில் இருந்து மக்களை விடுவிக்க வழி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது.

அப்படி இருந்தும் பொது மக்கள் பூரண ஒத்துழைப்பு இன்மையால் சட்டவிரோத மதுபாவனை தொடர்பான குற்றச் செயல்கள் வடமராட்சிப் பிரதேசத்தில் தலைதூக்கியுள்ளன. இந்த ஆண்டிலாவது சமூகம் சமுக கலாசார விழுமியங்களைப் பேணவும், கலாசார நிகழ்வுகள் ஊடாக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும் கிராம மட்ட பொது அமைப்புக்கள் மற்றும் வர்த்தகர்கள் பொது மக்கள் எனப்பலரும் முன்வந்து ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-8)

### மண்டைதீவு சிறுமி கொலை தொடர்பில்

## இழையியல் பரிசோதனை அறிக்கை கிடைத்தாலே நடவடிக்கை எடுக்கலாம்

### பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

மண்டைதீவுப் பகுதியில் வன்புணர்வின் பின்னர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்ட நான்கு வயதுச் சிறுமியின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரைக் கைது செய்வதற்கு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள உடல் பாகங்களின் இழையியல் பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னரே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியில் தோட்டக்கிணறு ஒன்றில் இருந்து 4 வயதுச்சிறுமி சடலமாக மீட்கப்பட்டார்.

இவர் வன்புணர்வின் பின்னர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று மருத்துவ பரிசோதனை மூலம் அறியப்பட்டது.

இது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. உயிரிழப்பு தொடர்பாக சந்தேகம் ஏற்பட்டுள்ளதால் பரிசோதனைகளின் போது சிறுமி வன்புணர்வின் பின்னர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டமை தெரிய வந்தது.

இது தொடர்பாக சிறுமியின் உடற்பாகங்கள் இழையியல் கூற்றுப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (ம-14)

# உள்ளூராட்சி நிறுவனங்களின் சட்டவிதிகள் குறித்த செயலமர்வு

உள்ளூராட்சி நிறுவனங்களின் கட்டமைப்பு மற்றும் சபைக் கூட்டங்கள் தொடர்பிலான சட்ட விதிகள் பற்றிய செயலமர்வு ஒன்றை இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம் யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்களுக்கு இந்தச் செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியின் சுப்பிரமணியம் மண்டபத்தில் இந்தச் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

சம்மேளனத்தின் தேசிய இணைப்பாளர் ஹேமந்தி குணசேகர இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதில் இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் கட்டமைப்பு, ஆட்சி முறைமைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றச் சட்டங்கள், தலைவர், உறுப்பினர்களின் கடமைகள், நல்லாட்சி முறையின் பண்புகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் சபை நடவடிக்கைகள் போன்றவை தொடர்பாக இந்தச் செயலமர்வில் விளக்கமளிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான அறிக்கை நவநீதம்பிள்ளை சமர்ப்பிப்பார்

கொழும்பு, ஜன.21

இலங்கை தொடர்பில் மிகக் காட்டமான அறிக்கையொன்றை தயார் செய்திருக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, அதனை எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள், கருத்துச் சுதந்திரமின்மை, சட்டவிரோத கைதுகள், நீதித்துறை மீதான அச்சுறுத்தல்கள், போரின் போது இடம்பெற்ற அத்துமீறல்கள் என்று நீண்ட பட்டியலிட்டு இந்த அறிக்கையை தயார் செய்திருக்கும் நவநீதம்பிள்ளை இதன் சாராம்சப் பிரதிகளை ஐ .நா. செயலாளருக்கும், இலங்கை அரசுக்கும் இன்னும் ஓரிரு நாள்களுக்குள் அனுப்பி வைக்கவுள்ளார்.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு என்பன இதுவரைகாலம் விவாதங்களை நடத்திவந்த போதும் இறுக்கமான அறிக்கை எதையும் விடவில்லை. இம்முறை ஐ.நாவின் சார்பில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மார்ச் மாத ஜெனிவா அமர்வில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமென கருதப்படுகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள், பிரதம நீதியரசர் விடயத்தில் அரசு கூறிய காரணங்கள் ஆகியவற்றை இந்த அறிக்கையில் நவநீதம்பிள்ளை அம்மையார் முற்றுமுழுதாக நிராகரித்திருப்பதுடன் இலங்கையை கடந்த ஜெனிவா மாநாட்டில் ஆதரித்த ஆபிரிக்கா நாடுகள் தற்போது கொழும்பு தொடர்பில் கொண்டுள்ள அபிப்பிராயத்தையும் விளக்கியுள்ளார்.



மார்ச் மாதம் கூடும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் இலங்கை விடயத்தில் தீர்மானம் ஒன்றை எடுக்க தமது அறிக்கையை மையமாகக் கொள்ளலாமென்றும் நவநீதம்பிள்ளை அம்மையார் குறிப்பிட்டுள்ளாரெனத் தெரிகிறது.

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் இந்த அதிரடி அறிக்கை இலங்கைக்கு பெருமளவில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடுமென்று கருதப்படுகிறது. (ங-சி)

## சஜித்தின்..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...



அதேவேளை, பிரதித் தலைவர் பதவி இருவருக்கு வழங்கப்படவுள்ளது. சஜித் பிரேமதாஸவுக்கும், ரவி கருணாநாயக்கவுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என அறிய முடிகின்றது. கட்சித் தலைமையுடன் சஜித் பிரேமதாஸ ஒத்துழைத்து செயற்படாததன் காரணமாகவே பிரதித் தலைவர்கள் பதவி இரண்டு உருவாக்கப்பட்டுள்ளன.

அத்துடன், குற்றப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த உறுப்பினர்களின் உறுப்புரிமையை இரத்துச் செய்வது தொடர்பிலும் இன்றைய செயற்குழுக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. (சி)

## களனி..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

யும் அளித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித்த மடவல சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து, எழுந்த எதிர்ப்பலைகள் காரணமாகவே அமைச்சர் மேர்வின் அமைப்புளர் பதவியை இராஜிநாமா செய்தார் எனக் கூறப்படுகின்றது.

களனியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றின்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் மேர்வின் சில்வா கூறியவை வருமாறு:-

களனியிலிருந்து நான் ஒருபோதும் வெளியேற மாட்டேன். பதவியொன்று இருந்தாலும், இல்லா விட்டாலும் எனது பிரதேச மக்களுக்காக நான் தொடர்ந்தும் சேவையாற்றுவேன்.

களனி பிரதேச மக்களுக்கு சேவையாற்றிக்கொண்டிருக்கும் தறுவாயில், என் உடலை விட்டு உயிர் பிரிந்தால் தகனக்கிரியை முடிவடைந்த பின்னர் எனது அஸ்தி கூட களனி ஆற்றில்தான் கரைக்கப்படவேண்டும்.

களனி பிரதேச சபை உறுப்பினர்கள் முன்னர் அறைக்குள்தான் இருந்தனர். அவர்களுக்குப் பயணிப்பதற்கு வாகனம் இருக்கவில்லை. நான் களனி பிரதேச அமைப்பாளர் பதவியை ஏற்றதன் பின்னர்தான் இவர்கள் வாகனம் வாங்கி சுகபோக வாழ்க்கையை அனுபவிக்கின்றனர்.

அதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் கௌர வத்தைப் பாதுகாக்கும் வகையிலேயே நான் அமைப்பாளர் பதவியை இராஜிநாமா செய்தேன் - என்றார். (சி)

## பிரபாவின்..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வித உள்விவகாரங்களிலும் அந்த நாடு மூக்கை நுழைக்கின்றது. உலக வல்லரசு என்ற நினைப்பில் ஆடும் அமெரிக்காவுக்கு நாம் ஒருபோதும் அடிபணியக்கூடாது.

அமெரிக்கா இல்லாவிட்டால் என்ன, இலங்கைக்குப் பக்கபலமாகத் தற்போது சீனா இருக்கின்றது.

எனவே, அரசு சீனாவுடனான தனது உறவுகளைப் பலப்படுத்த வேண்டும். சீனாவின் பக்கம் முழுமையாக சாய்வதை விட தற்போது வேறு வழியில்லை.

அதேவேளை, பிரபாகரனின் கனவை நனவாக்கும் நோக்கிலேயே அமெரிக்கா செயற்படுகின்றது. மார்ச் மாதம் நடைபெறும் ஜெனிவா மாநாட்டில் இலங்கையை இறுக்குவதற்கு அது முயற்சிக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஜெனிவா சமருக்குத் தயாராகுமாறு அறைகூவல் விடுப்பதற்கு மூவரடங்கிய இராஜதந்திரிகளை இலங்கைக்கு அனுப்புகிறது வெள்ளைமாளிகை நிர்வாகம் - என்றார். (ங-சி)

## ஈழத் தமிழர்..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

அழித்து வருகிறது. இந்த நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு பிரதமர் மன்மோகன் சிங்கும், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.- இவ்வாறு தெரிவித்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

இதுதொடர்பில் இந்தியப் பிரதமர், சோனியா காந்தி ஆகியோருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ் மக்கள் வாழும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பாடசாலைகள், மருத்துவமனைகள் போன்ற அத்தியாவசிய நிறுவனங்களும் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் தமிழர்களின் பூர்வீக நிலப்பகுதிகளில், அவர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது.

தமிழர்களின் பாரம்பரிய கிராமங்களின் பெயர்களை மாற்றுதல், கிராம, நகர, மாவட்டஎல்லைகளை மாற்றியமைத்தல், இந்துக் கோயில்களை அழித்தல் போன்ற நடவடிக்கைகள் அங்கு மும்முரமாக இடம்பெற்று வருவதை அறிகின்றோம்.

குறிப்பாக 89 தமிழ் கிராமங்களின் பெயர்கள் சிங்கள மொழியில் மாற்றப்பட்டுள்ளதாகவும், 367 இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழர்கள் மீதான இந்த திட்டமிட்ட கொடுமைகளை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். இந்த தார்மீகக் கடமை இந்தியாவுக்கு உள்ளது. இதுவிடயத்தில் பிரதமர் மன்மோகன் சிங்கும், சோனியா காந்தியும் துரிதமாக செயற்பட்டு ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும்'' என்றும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஐ)

## தொழில்நுட்ப..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

டிப்பதில் புலனாய்வு முக்கிய பங்கை வகித்திருந்தது.

இந்த விடயத்தில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தனிப்பட்ட ரீதியாக அக்கறை கொண்டிருந்தார்.

நாட்டின் எல்லாப் புலனாய்வு அமைப்புகளையும் அவர் தனிப்பட்ட ரீதியாக ஒருங்கிணைத்தார். இது படையினர் மத்தியில் எழுச்சியை உண்டு பண்ணியது.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த கீழ்மட்டத்தினருடனும் கோத்தபாய அவ்வப்போது கலந்துரையாடி ஊக்குவித்தார்.

சாதகமான புலனாய்வுத் தகவல்களை வைத்தே புலிகளை முறியடிக்க முடியும் என்றும், அதேசமயம் பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தும் என்றும் அவர் உறுதியாக நம்பினார்.

அதன் பயனாக தொழில்நுட்பப் புலனாய்வில், விடுதலைப் புலிகளின் இரகசிய சமிக்ஞைக் குறியீடுகளை நாம் இனம்கண்டு கொண்டோம்.

குறிப்பாக சிறப்பு அதிரடிப் படையின் புலனாய்வுப் பிரிவினர், விடுதலைப் புலிகளின் சங்கேத குறியீட்டு முறையை கண்டறிந்தனர்.

எமது முன்னேற்றமான தொழில்நுட்பக் கருவிகள் மூலம் புலிகளின் தொடர்பாடல் இடைமறிக்கப்பட்டது.

அதன் மூலம் காத்திரமான தொழில்நுட்பப் புலனாய்வுமுறை கட்டியெழுப்பப்பட்டது.

தொழில்நுட்பப் புலனாய்வில், புவியியல் தகவல் முறை(ஜி.ஐ.எஸ்.), புவி நிலை காட்டி(ஜி.பி.எஸ்.) என்பன கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப் போரில் பெரும் உதவியாக இருந்தன.

இது மிக உயர்ந்த வெற்றியையும், படையினர் மற்றும் தளபதிகளுக்கு தன்னம்பிக்கையையும் கொடுத்தது.இதனாலேயே இறுதிப் போரில் புலிகளை இலகுவாக வெல்ல முடிந்தது- என்றார். (ங)

## தமிழர்களின்..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மில்லாது முஸ்லிம் மக்களையும் நேசித்தவர் அமரர் இராசமாணிக்கம். தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவான பிரச்சினையாகவே அவர் இனப்பிரச்சினையை நோக்கினார். தமது உரிமைகளுக்காக தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்று விரும்பினார்.

தற்போது இலங்கையில் சிங்களமும் தமிழும் அரச மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதிலும், நடைமுறையில் தமிழ் மொழி தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுகின்றது. இந்த விவகாரத்தை சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது.

வடக்கு கிழக்கில் உள்ள இராணுவத்தினரின் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும், தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் , தமிழர்களின் தாயக நிலங்கள் அவர்களிடமே கையளிக்கப்பட வேண்டும், நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஜெனிவா தீர்மானத்தில் பல்வேறு நிபந்தனைகளை இலங்கைக்கு சர்வதேசம் விதித்திருந்தது.

ஆனால் அவற்றையெல்லாம் அரசு நடைமுறைப்படுத்தியதாக இல்லை. அடுத்து வரும் வாரங்களில் சர்வதேசப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்து, அரசின் நடவடிக்கைகள் குறித்து நேரடியாக அவதானிக்கவுள்ளனர். அதன் பின்னர் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா.சபையின் மனித உரிமைகள் சபையில் இது குறித்து விவாதிக்கப்படவுள்ளது. அதன் போது தமிழர்களுக்கு சாதகமான பதில் ஒன்று கிடைக்கும் என நம்புகிறோம்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பை இணைப்பதற்கு அரசு பல்வேறு வழிகளில் முனைந்தது. இந்தியா மற்றும் அமெரிக்காவின் அழுத்தத்தைக் கூட அது பிரயோகித்து எம்மை தெரிவுக்குழுவுக்குள் இழுக்க நினைத்தது. ஆனால் அந்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இந்த நிலையில் மிக விரைவில் கூட்டமைப்பு தீர்க்கமான முடிவொன்றை தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு எடுக்கவுள்ளது. இதற்குசர்வதேசமும் உறுதுணையாக இருக்கும் என நம்புகிறோம்- என்றார். (ங)

## பல்கலை..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பதில் குறிக்கோளாக உள்ளனர்.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

''யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் புலம்பெயர் புலி ஆதரவாளர்களுடன் தொடர்புகளை வைத்திருப்பது விசாரணையின் போது நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கான புனர்வாழ்வு தொடருமே தவிர, அவர்கள் விடுதலை செய்யப்படமாட்டார்கள். அத்துடன், இந்த நாட்டு மக்களைக் கொன்று குவித்து சொத்துகளை அழித்த பயங்கரவாதி வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குத் தீபமேற்றி நினைவஞ்சலி செலுத்துவதற்குப் பல்கலைக்கழகத்தில் இடமளிக்க முடியாது. எனவே, அதற்கு முன்னின்று செயற்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்'' - என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எனக்கு ஒரு வாக்குறுதியை அளித்தார். அதாவது மாணவர் விவகாரத்தை உயர்கல்வி அமைச்சரிடம் ஒப்படைக்கவுள்ளார் எனவும், மிக விரைவில் ஒரு தீர்வு கிடைக்கும் எனவும் ஜனாதிபதி என்னிடம் உறுதியளித்தார். இதனை ஜனாதிபதி என்னிடம் கூறியவேளை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க நாட்டில் இருக்கவில்லை.

பின்னர் அவர் நாடு திரும்பியவுடன் இந்த மாணவர் விவகாரத்தை நாம் ஆவலுடன் எதிர்பார்த்தோம். ஆனால், அந்த விடயத்தை உடனே யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க கையிலெடுத்தார்.

யாழ். பல்கலைக்கழகச் சமூகத்தை அழைத்த ஹத்துருசிங்க, தடுப்பில் உள்ள மாணவர்கள் பிரபாகரனின் நினைவுடன் இருக்கின்றார்கள் எனவும், புலிகளின் பயிற்சிகளைப் பெற்றுள்ளார்கள் எனவும், மாணவர் விடுதலை இப்போதைக்கு சாத்தியம் இல்லை எனவும் இறுமாப்புடன் கருத்துகளை அள்ளி வீசினார்.

அதனையடுத்து, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவும் தடுப்பில் உள்ள யாழ். பல்கலை மாணவர்கள் சர்வதேச புலி ஆதரவாளர்களுடன் தொடர்பு வைத்துள்ளார்கள் எனவும், அதனை ஆதாரத்துடன் நிரூபிப்பேன் எனவும், புனர்வாழ்வின் பின்னரே மாணவர் விடுதலை தொடர்பில் ஆராயப்படும் எனவும் கூறினார்.

இது இவ்வாறிருக்க, இம்மாத முதல் வாரத்தில் பி.பி.ஸிக்கு கருத்துத் தெரிவித்த உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, ''தைப்பொங்கலுக்கு முன்னர் தடுப்பில் உள்ள யாழ். பல்கலை மாணவர் விடுவிக்கப்படுவர்'' என்று நம்பிக்கை வெளியிட்டார். ஆனால், அவரின் கருத்து தன்னிச்சையான கருத்து என்பதைப் பின்னர் அறிந்தோம். எஸ்.பி. இந்தக் கருத்தைக் கூறியவுடன் அரசதரப்பினரின் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகினார் எனவும் அறிந்தோம். தனது கருத்தை வாபஸ் பெறுவதற்காகவே கொழும்பில் ஊடக வியலாளர் மாநாட்டை நடத்தி வாயில் வந்தமாதிரி கருத்துகளைத் தெரிவித்துள்ளார். உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.

எனவே, ஜனாதிபதி மஹிந்த, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய, யாழ். கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க, உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. ஆகிய நால்வரும் வடக்கிலும், தெற்கிலும் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைச் சீர்குலைப்பதில் குறிக்கோளாக உள்ளனர்'' - என்று தெரிவித்தார் மனோ கணேசன். (சி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது என்பதனை எப்போது உணருமோ அரசு?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, பேரவையின் வருடாந்தக் கூட்டத் தொடர் முடிவடைந்த பின்னரே இலங்கைக்கு வருவார் என்றும், ஏற்கனவே திட்டமிட்டவாறு கூட்டத்தொடருக்கு முன்னரே இங்கு விஜயம் செய்வார் என்று, இரண்டுபட்ட தகவல்கள் ஊடகங்களில் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

அவற்றுக்கு மத்தியில், இலங்கை அரசின் மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள், கருத்துச் சுதந்திரமின்மை, சட்டவிரோதக் கைதுகள், நீதித்துறை மீதான அச்சுறுத்தல், போரின்போது மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்கள் உட்பட்ட நீள்வரிசை அறிக்கை ஒன்றை அவர் தயாரித்துள்ளார் என்று தகவல்கள் கசிந்துள்ளன.

தமது அறிக்கையின் சாராம்சத்தை, ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் விரைவில் அனுப்பி வைப்பார் என்றும் நம்பப்படுகிறது. அவரின் இந்த அதிரடி அறிக்கை இலங்கை அரசுக்குப் பெரும் தாக்கங்களை உண்டாக்கலாம் என்று ராஜதந்திர வட்டாரங்களில் எதிர்வு கூறப்படுகிறது.

அதன் தொடர்ச்சியாக, இலங்கை அரசின் மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் விவகாரம் அனைத்துலக மட்டத்தில் சூடு பிடிக்கலாம் என்று எதிர்பார்க்கலாம்.

அமெரிக்க உயர்மட்டக்குழுவின் உத்தேச இலங்கை வருகை, இலங்கையில் வருட இறுதிப் பகுதியில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் உச்சிமாநாட்டைப் பகிஷ்கரிக்குமாறு பிரிட்டிஷ் பிரதமருக்கும் மகாராணியாருக்கும் விடுக்கப்படும் நெருக்குதல்கள் என்பன இது தொடர்பில் மேலும் உசுப்பேற்றும் எனலாம்.

நீதித்துறைக்கும் சட்டவாக்கத்துக்கும் இடையிலான அரசமைப்பு நெருக்கடி, ஷிராணி பண்டாரநாயக்கவின் வெளியேற்றத்துடன் முடிவுக்கு வந்துவிட்டது என்று கருதமுடியாது. சூடு தணிந்தது போன்று காணப்பட்டாலும், பிரச்சினைக்கு இன்னும் தீர்வு இல்லை. ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஷிராணி பண்டாரநாயக்க தாமே சட்ட ரீதியிலான பிரதம நீதியரசர் என்று அரசுக்கு சவால் விட்டுக்கொண்டிருக்கிறார். அதனால், எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவாக் கூட்டம் தொடர்பில் முழுமையான கவனம் செலுத்தும் வாய்ப்பு அரசுக்குக் குறைவாகவே உள்ளது எனலாம்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற கூட்டத் தொடரில், அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை சம்பந்தமான தீர்மானத்தின் பரிந்துரைகளை செயற்படுத்துவதில், இலங்கை போதுமான அக்கறை காட்டவில்லை என்று பரவலாக கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இதனை ஊர்ஜிதம் செய்வது போன்று 35 சதவீதமான பரிந்துரைகள் மட்டும் செயற்படுத்தப்பட்டுள்ளன என்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க சமீபத்தில் ஒப்புக்கொண்டிருந்தார். எனினும் அது ஓர் உத்தியோகபூர்வ புள்ளிவிவரம் அல்ல.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் அடிப்படையில் அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட ஜெனிவாத் தீர்மானத்தை செயற்படுத்துவதில் காட்டும் அக்கறையை விட, 22 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் புதிய தீர்மானத்தை எப்படித் தோற்கடிக்கலாம் என்பதிலேயே அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.

அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து இலங்கைக்கு எதிராக புதிய தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரலாம் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் ஏற்படக்கூடிய நெருக்கடியை வெற்றிகொள்வதற்கு உறுப்பு நாடுகளை வளைத்துப்பிடிக்கும் அரசின் நடவடிக்கை அரசு எதிர்பார்ப்பது போன்று சுலபமாக இருக்கப்போவதுமில்லை.

கடந்த வாரம் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இலங்கையில் உள்ள சுமார் 80 வெளிநாட்டு இராஜதந்திரிகளை அழைத்து நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு செயற்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து விளக்கியதுடன் இலங்கைக்கு எதிரான எந்தவொரு சவாலையும் முறியடிக்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்.

இலங்கை அரசு தனது தீர்மானம் குறித்து காட்டும் அலட்சியப் போக்கைத் தன்மானப் பிரச்சினையாக அமெரிக்கா பார்க்கிறது. எதிர்வரும் 26ஆம் திகதி இலங்கை வரவுள்ள அமெரிக்க இராஜாங்கப் பிரதி உதவிச் செயலாளர்கள் ஜேம்ஸ் மூரே, ஜேன் சிம்மெம்மன் மற்றும் பாதுகாப்பு பிரதி உதவிச் செயலாளர் விக்ரம் சிங் ஆகியோரின் வருகை இலங்கை மீதான அமெரிக்காவின் அழுத்தமாகவே கருதப்படுகிறது.

மூத்த அதிகாரிகள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றுடனான சந்திப்பின்போது நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை உட்பட பலதரப்பட்ட விடயங்கள் குறித்துப் பேசப்பட இருப்பதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்கா மட்டுமல்ல, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டிஷ் தமிழர் பேரவை ஆகியவையும் இலங்கைக்கு நெருக்குதல் கொடுக்க ஆரம்பித்துள்ளன. எதிர்வரும் ஜெனிவாக் கூட்டத்தில், ஏனைய வெளிநாடுகளின் ஆதரவைத் திரட்டுவதிலும், அவற்றை நம்பியிராமலும் ஜெனிவாத் தீர்மானத்தை செயற்படுத்தி பிரச்சினைக்குத் தீர்வு காண இந்நாட்டு அரசு முயற்சிக்கவேண்டும்.

ஆனால், அரசாங்கம் அவ்வழி சிந்திப்பதற்கான ஆக்கபூர்வமான சமிக்ஞை எதுவும் தென்படுவதாக இல்லை. உள்நாட்டு விவகாரங்களிலும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் சார்ந்த விடயங்களிலும் நாடாளுமன்றில் தனக்குள்ள பெரும்பான்மை பலத்தைக் கொண்டு, நினைத்ததை முடிக்கும் எதேச்சாதிகாரப் போக்கினை, அனைத்துலக அக்கறையுள்ள விவகாரமாகிவிட்ட ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் தொடர்பிலும் பின்பற்றும் போக்கையே கைக்கொள்ள முனைகிறது.

அனைத்துலகத்துக்கும் அக்கறையுள்ள ஒரு விவகாரமாக மாறிவிட்டது இலங்கை மீதான மனித உரிமைகள் குற்றச்சாட்டு. இது விவகாரத்தில், சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது என்பதனை இந்நாட்டு அரசு உய்த்து உணர்வது எப்போதோ...?

# இந்திய, இலங்கை மீனவர்கள் பிரச்சினைகள் வடக்கில் வைத்து பேசித் தீர்க்கப்பட வேண்டும்

## இரு அரசுகளதும் நடவடிக்கை தேவை என்கிறார் எமிலியாம்பிள்ளை

**மீனவர்களின் பிரச்சினையை நாங்கள் பேசித் தீர்க்கமுடியாது. அரசு மட்டுமே இந்த விடயம் தொடர்பாகப் பேசி இதற்கான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்.**

யாழ்ப்பாணம், ஜன. 21

இந்தியா, இலங்கை மீனவர்களின் பிரச்சினை குறித்து இரண்டு அரசுகளும் பேச்சுக்களை நடத்தி மீனவ சமூகத்துக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். இது குறித்து வடக்கில் வைத்துப் பேச்சுகள் நடத்தப்பட வேண்டும்.

யாழ். மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத் தலைவர் எமிலியாம்பிள்ளை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இந்திய மீனவர்களின் அத்துமீறல் மீன்பிடி நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறது. இந்த நடவடிக்கை தொடர்பாக இலங்கை அரசுக்கு பல தடவைகள் தெரிவித்துள்ளோம். அத்துடன் இந்திய அரசுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

தற்போது இந்திய, இலங்கை மீனவர்கள் தான் தமது பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினைத் தீர்வைத்தான் தாங்கள் விரும்புகிறோம் என்று இந்திய துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்திருந்தார்.

மீனவர்களின் பிரச்சினையை நாங்கள் பேசித் தீர்க்கமுடியாது. அரசு மட்டுமே இந்த விடயம் தொடர்பாகப் பேசி இதற்கான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்.

இறுதியாக கச்சதீவில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினோம். இது வரையில் தீர்வு இல்லை. தொப்புள் கொடி உறவு என்று சொல்வதில் அர்த்தமில்லை.

எமது பிரதேசங்களில் சட்ட விரோதமாக உபகரணங்களை உபயோகிப்பதும், சட்டவிரோதமாக மீன்பிடிப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இரண்டு அரசுகளும் வட பகுதியில் வைத்தே மீனவர் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத் தரவேண்டும்.

வடபகுதியில் தான் பிரச்சினை ஏதும் இல்லை. சுதந்திரமாக இந்திய அரசு வடபகுதிக்கு வருகைதந்து பேசித் தீர்க்கலாம். அதன்போதே வட பகுதியின் பிரச்சினை பற்றி மீனவர்கள் கதைத்துக்கொள்ளமுடியும்.

இரண்டு அரசுகளும் தமக்குள்ளே பேச்சுக்களை நடத்துவது வெறும் கண்துடைப்பாகவே உள்ளது.

மீனவர்களது பிரச்சினை தொடர்பான பேச்சுகள் தட்டிக் கழிக்கும் நோக்குடனேயே நடத்தப்படுகிறது. இது முடிவுக்கு வரும் பிரச்சினை அல்ல.

இந்திய, இலங்கை அரசுகள் வடபகுதியில் வந்து பேச வேண்டும். இவற்றுக்கான ஏற்பாடுகளை சம்மேளனம் ஏற்படுத்தும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

## இதயநோயால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.21

இருதய நோயினால் பாதிக்கப்பட்டு போதனா வைத்திய சாலையில் மாதாந்த சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு வைத்திய உபகரணம், பால்மா மற்றும் மருந்துவகைகள் வழங்கி உதவ நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

வலி.மேற்கு தொழில்நுட்ப குழு தலைவரும் உறுப்பினருமான த.நடனேந்திரன் இவ்வாறு கேட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.போதனா வைத்திய சாலையில் மாதாந்த இதயநோய் கிளினிக் பிரிவுக்கு 300 முதல் 450 வரையிலான நோயாளிகள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருகை தருகின்றனர்.

இவர்களில் 80 வீதத்துக்கும் அதிகமானவர்கள் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்கள்.

பெரும்பாலான நோயாளிகள் இருதய வால்புகளில் அடைப்பு இருந்தும் சத்திர சிகிச்சைக்குரிய போதிய நிதி வசதியின்றி அவதியுறுகின்றனர்.

இவ்வாறானவர்களுக்கு மருத்துவ உபகரணங்களான 'ஸ்ரென்ற்', பால்மா வகைகள், ஆஸ்பத்திரிகளில் கிடைக்காத மருந்து வகைகளை வழங்கி உதவுவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

இந்தத் திட்டத்தை முன்னகர்த்துவதற்கு வடக்கு மாகாணத்தின் சுகாதார சுதேசிய அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மாகாண சுகாதார பணிப்பாளர் திருமதி எஸ்.ஆர்.யூட் ஆகியோர் முன்வர வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு பல்வேறு பகுதியினர் உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-41)

## இலங்கை வரையிலும் துருக்கி விமான சேவை

கொழும்பு,ஜன.21

இலங்கை வரையிலும் தனது விமானப் பயண சேவையை நீடித்துள்ளதாக துருக்கி விமான சேவை தெரிவிக்கிறது.

அதற்கமைய பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து துருக்கி-இலங்கை இடையிலான விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. தெற்காசிய நாடுகளுக்குஇடையில் துருக்கிவிமான சேவை தற்போது மாலைதீவு வரையில் மாத்திரமே நடைபெறுகிறது.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் தொகை வேகமாக அதிகரித்து வருவதன் காரணமாக இவ்விதம் இலங்கை வரையிலான தனது விமானப் பயண சேவையை மேற்கொள்ளுவதற்கு திட்டமிட்டுள்ளதாக துருக்கி விமான சேவை தெரிவிக்கிறது. (ம-22)

## தாமதமின்றி அடையாள அட்டைகளை வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கை

### ஆட்பதிவு திணைக்கள புதிய ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.21

எதுவித தாமதமும் இன்றி தேசிய அடையாள அட்டைகளை வழங்க ஏற்ற நடவடிக்கை எடுப்பதாக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் புதிய ஆணையாளர் நாயகமாக பதவி ஏற்ற ஆர்.எம்.எஸ். சரத்குமார தெரிவித்துள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி புதிய ஆணையாளர் நாயகமாக பதவி ஏற்றார்.

அதன்போதே அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

மக்களுக்கு மிக அண்மித்த அத்தியாவசியமானதும் முக்கியமானதுமாக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் விளங்குகின்றது.

அதை வினைத்திறனுடன் செயற்பட வைத்து எதுவித தாமதமும் இன்றிப் பொது மக்களுக்குத் தேசிய அடையாள அட்டைகளை வழங்க வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மின்னியல் அடையாள அட்டைகளை ஒரு வருட காலத்தில் வழங்கத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒருநாள் சேவையும் மிக வினைத்திறன்களுடன் இடம்பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒரு மனிதனுக்கு முக்கியமான ஆவணமாகத் தேசிய அடையாள அட்டை முதலிடம் வகிக்கிறது.

இதனால் இந்தச் சேவையை பெற வரும் பொது மக்களுக்கு அது தொடர்பில் தேவையான எல்லா வசதிகளையும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (த-122)

## ஆண்டு நிறைவும் அறிமுக விழாவும்

யாழ்ப்பாணம்,ஜன.21

இந்திய வங்கியின் யாழ். கிளையின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும், இந்திய வீட்டுத் திட்டத்தின் செயற்றிட்டம் - II இன் அறிமுகவிழாவும் நடைபெறவுள்ளன. இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு வங்கியில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வு, யாழ். இந்தியன் வங்கியின் முகாமையாளர் எஸ். சந்திரசேகர் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம், யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் விருந்தினராகக் கலந்துகொள்வர். (3-14)

## மருதங்கேணி சந்தை மக்கள் பாவனைக்கு

வடமராட்சி, ஜன.21

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பொதுச் சந்தை கடந்த புதன் கிழமை மக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த கால போரால் சேதமடைந்த மருதங்கேணி பொதுச் சந்தை என்றில் நிறுவனத்தின் நிதி உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.

இந்தப் புதிய சந்தையை பொது மக்களின் பாவனைக்காக பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூசுஞ்சிவன் திறந்து வைத்தார். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் நெற்கபேக்கள் இனிமேல் திறந்த நிலையில்

**சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை**

வவுனியா,ஜன.21

வவுனியாவிலுள்ள 'நெற்கபே'களிலுள்ள இருக்கைகளும் கணினிகளும் கொண்ட அமைப்பு இனிமேல் திறந்தபடி இருக்க வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தத் தகவலை வவுனியாமாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரி த.செல்வகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாது-

சிறுவர்கள் பாடசாலை நேரத்தில் பாடசாலைக்கு செல்லாமல் நெற்கபேக்களுக்கு வருகின்றனர். பாடசாலை நேரத்தில் இவ்வாறு நேரத்தை வீணடிக்கும் மாணவர்களுக்கு மூடியபடி இருக்கும் அமைப்புகள் அவர்களை மற்றவர்கள் அடையாளம் காணாதிருக்க உதவுகின்றன.

பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் நெற்கபேக்களிலுள்ள அறைகள் திறந்தபடி இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பாடசாலைக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு நெற்கபேக்களுக்கு வரும் மாணவர்களை கண்டறிய முடியும்.

அத்தோடு கலாசார சீரழிவுக்கு தூண்டும் ஆபாசக் காட்சிகள் உள்ளடங்கிய படங்கள்,வீடியோ காட்சிகளை அவர்கள் பார்ப்பதையும் தவிர்க்க முடியும்.

இந்த விடயத்தில் குறிப்பிட்டநெற்கபேக்கள் கூடிய கவனம் செலுத்தும் வகையில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தத் திட்டத்தை நாம் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளோம் -என்றார்.

(ங- 402)



மன்னாரில் நகரசபையினரும், பொலிஸாரும் இணைந்து டெங்கு ஒழிப்புத் தொடர்பான சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் சனிக்கிழமை இதன் ஒரு கட்டமாக உப்புக்குளம் பகுதியில் மக்களால் சேமித்து வைக்கப்பட்டிருந்த கழிவுப் பொருள்களை அகற்றும் பணிகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டனர். இதன்போது மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஸங்க, மன்னார் நகரசபை உறுப்பினர் என்.நகுசீன் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். (க-12)

## கைகலப்பில் கொலை

**சந்தேக நபர்கள் கைது**

கிளிநொச்சி,ஜன.21

கிளிநொச்சிப் பகுதியில் இருவருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவில் கடந்த 14 ஆம் திகதி ஜெயந்திநகர் பகுதியில் இருவருக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இதன் உச்சக்கட்டத்தில் ஒருவர் தாக்கப்பட்டு காயமுற்ற நிலையில் கிளிநொச்சி வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் அங்கு அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய இருவரையே கிளிநொச்சிப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். என்று யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

(ங-14)

**வவுனியாவில் குழுக்களாகப் பிரிந்து-**

# மாணவர்கள் கைகலப்பு பாடசாலை ஸ்தம்பிதம்

வவுனியா,ஜன.20

வவுனியா தெற்கு கல்வி வலயத்திலுள்ள பிரபல பாடசாலை ஒன்றின் உயர்தர வகுப்பு மாணவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து மோதிக் கொண்டனர். இதனால் பாடசாலையின் கற்றல் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:-

ஒரே பாடசாலையில் க.பொ.த. உயர் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களே இவ்வாறு இரு குழுக்களாகப் பிரிந்து வியாழனன்று திடீரென மோதிக் கொண்டனர்.

பாடசலையின் மாணவர் தலைவர் ஒருவரின் கீழ் ஒன்று திரண்ட உயர்தர வகுப்பு சிரேஷ்ட மாணவர்கள், கனிஷ்ட மாணவர்களை மேசைகள், கதிரைகள் என்பவற்றால் இதன்போது கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதனால் ஒரு மாணவன் ஒருவன் படுகாயம் அடைந்துள்ளான். தற்போது குறித்த மாணவன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளான்.

**ஆசிரியர்களின் முன்னிலையிலேயே அவர்களின் எச்சரிக்கையை மீறி மாணவர்கள் மோதிக்கொண்டுள்ளனர். இந்த மோதலின் விளைவாக ஏனைய மாணவர்கள் கிலி கொண்டு வகுப்பறைகளை விட்டு வெளியேறினர்.**

மாணவர்களின் குழு மோதலினால் பாடசாலையின் கற்றல் செயற்பாடுகள் அனைத்தும் பாதிக்கப்பட்டன. ஆசிரியர்களின் முன்னிலையிலேயே அவர்களின் எச்சரிக்கையை மீறி மாணவர்கள் மோதிக்கொண்டுள்ளனர். இந்த மோதலின் விளைவாக ஏனைய மாணவர்கள் கிலி கொண்டு வகுப்பறைகளை விட்டு வெளியேறினர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து "பாடசாலை நிர்வாகம் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவரை நாம் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடமாட்டோம்'' என்று உயர்தர மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடசாலை நிர்வாகத்திடம் உறுதியாகத் தெரிவித்துள்ளனர்.

வணக்கத்துக்குரிய இடமான பாடசாலையின் ஆசிரியர்களின் அறிவுறுத்தலையும் மீறி, தெருச் சண்டியர்கள் போல மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டதை சமூக ஆர்வலர்கள் பலரும் கடுமையாகச் சாடியுள்ளனர்.

(ங-410)

## ஒட்டுசுட்டானில் எட்டுக் குளங்கள் உடைப்பு

ஒட்டுசுட்டான்,ஜன.21

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட 8 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. என்று பெரும்போக உத்தியோகத்தர் ரி.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

குறித்த பகுதியிலுள்ள தட்டாமலைக் குளம், மெய்யான் கல்லுக்குளம், சின்னக்குளம், குஞ்சுக் கோடாலிக் கல்லுக் குளம், மானம் புல்லுக்குளம், அமுதன் குளம், அலைக் கல்லுப் போட்ட குளம், மன்னா கண்டல் போன்ற எட்டுக் குளங்களே இவ்வாறு உடைப் பெடுத்துள்ளன. இதனால் குறித்த குளங்களை நம்பியிருந்த விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன.

ஏறக்குறைய ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 1725 ஏக்கர் பரப்பில் விவசாய நடவடிக்கைகள் இவ்வாறு பாதிப்படைந்துள்ளன- என்றார்.

(ங-50)

# போருக்கு முகம் கொடுத்தும் சாதனை படைத்த கிளி.முருகானந்தா

**-சத்தியசீலன் புகழாரம்**

கிளிநொச்சி,ஜன.21

''கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளும் கல்விப் பணிபுரிந்து சிறப்பான ஒரு அடைவு மட்டங்களைப் பெற்றிருக்கின்றது. போருக்கு முகம்கொடுத்த படியே சாதனை படைத்த வரலாறு இந்தக் கல்லூரிக்கு உண்டு.'' இவ்வாறு தெரிவித்தார் கல்வி பண்பாட்டு அலுவலக அமைச்சின் வடமாகாணச் செயலாளர் சி. சத்தியசீலன்.

கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியின் 2012 ஆம் ஆண்டுக்கான சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் கல்லூரியின் ஸ்தாபகர் தின நிகழ்வும் கல்லூரி அதிபர் தி.வரதன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை பி.ப 4.30 மணிக்கு நடை பெற்றுள்ளது. இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி பண்பாட்டு அலுவலகர் அமைச்சின்



வடமாகாணச் செயலாளர் சீ. சத்தியசீலன் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது-

கல்வி எப்போதும் அழிக்க முடியாத ஒரு சொத்து. எந்தக் காலத்திலும் அழிக்கமுடியாத அத்தகையகல்வியை கடந்த 74 ஆண்டுகளாக இந்தக்கல்லூரி வழங்கிவருதுடன் பலசாதனைகளையும் படைத்திருக்கின்றது. இங்கு கல்வி [illegible] வெளிவரும் மாணவரும் கல்வியில் காட்டுகின்ற திறைமைகளே சமூகத்திலே அவர்கள் செயலாற்றும் போது உதவுகிறது. மாணவர்கள் வெளிப்படுத்தும் ஒழுக்கம் தான் இந்துக் கல்லூரி [illegible] வழங்கியுள்ள ஒரு சொத்தாக எப்போதும் கருதப்படும். ஆகவே நீங்கள் நல்ல ஒரு சமூகமாக இந்த மண்ணிலே மலர வேண்டும். இந்தக் கல்லூரியானது கடந்த காலங்களில் பல நெருக்கடிகளுக்கும், போருக்கும் முகம் கொடுத்திருந்த போதும் பல சிறப்பான அடைவு மட்டத்தைப் பெற்றிருக்கின்றது -என்றார்.

தொடர்ந்து ஸ்தாபகர் பொன்னையா நினைவுப் பேருரையினை ஓய்வு நிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.ம.பத்மநாதனும், சிறப்புரையினை கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் க.முருகவேலும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து கல்லூரியில் கடந்த வருடச் சாதனையாளர்களாகத் தெரிவு செய்யப்பட்ட விநாகமூர்த்தி திசாந்,ப.டினுஜா, பா.சிவேதிகா, ஜெ.அனுசா, க.அபிசிகா ச.சமீரா, , வீ.டிசாளினி,யோ.றஜிமாலா ஆகியோர் கௌரவிக்கப்பட்டு பதக்கங்களும் அணிவிக்கப்பட்டன.

பின்னர் வகுப்புநிலை வெற்றியாளர்களும் பரிசில்களும் சான்றிதல்களும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

நிகழ்வில் பெற்றோர், புத்திஜீவிகள், நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(ங-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குக

## மாகாணசபையில் தனிநபர் பிரேரணை

*திருகோணமலை,ஜன.21*

*கிழக்கு மாகாணத்திலுள்ள அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி மாகாண சபையில் தனிநபர் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது.*

நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ள கிழக்கு மாகாணசபையின் மாதாந்த அமர்வில் மாகாண சபை உறுப்பினர் அன்வரினால் இந்த தனிநபர் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த தனிநபர் பிரேரணை குறித்து கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தெரிவித்ததாவது:-

2011ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் திகதி நடைபெற்ற அமைச் சரவை தீர்மானத்தின் போது கிழக்கு மாகாணத்துக்கு 293 அதிபர்கள் உள் ளீர்க்கப்படுவார்கள். அர்கள் 2010.12.31 ஆம் திகதியில் மூன்று வருடங்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

எனவே மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்தவர்களுக்கு நிரந்தர அதிபர் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று மாகாண சபையின் தீர்மானத்துக்காக நாளை தனிநபர் பிரேரணையை சமர்ப்பிக்கவுள்ளேன்.- என்றார். (ச)

## மரண அறிவித்தல்கள்



### சிதம்பரி மார்க்கண்டு

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாவும், அல்வாய் தெற்கு "அழகுநிலா" வை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரி மார்க்கண்டு நேற்று (20.01.2013) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அழகம்மாவின் அன்புக் கணவரும், யசோதராதேவி, வசந்தராதேவி, ரவிரதன் (C.T.B) ரவிதரா (ஆசிரியை- மனோகரா முன்பள்ளி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தெய்வானை, தங்கம்மா, சிவக்கொழுந்து, வனிதாமணி ஆகியோரின் சகோதரனும், தம்பு, கந்தையா, மகாலிங்கம், வள்ளிப்பிள்ளை, செல்லம்மா, இராசம்மா, பாக்கியம், வடிவேல் (அருந்துறை) ஆகியோரின் மைத்துனரும், சபாமணி, தர்மலிங்கம், இதயதேவி, நவரத்தினராசா (அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை- கைதடி) ஆகியோரின் பாசமிகு மாமனும், கௌதமன் (டென்மார்க்), சாந்தினி, கௌதினி, சுஜேந்திரன், செல்வேந்திரா, மகிழினி, லவண்யா, யாதவன், ராஜிதா, தர்மறொமிசன், இதயரதன், மீனுதா, துஷாந், யதுர்ஷா, பிரபாஜினி, பிரதீஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், ஐந்தவி, யாதவி, நந்துஜன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2013) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அழகு நிலா,
அல்வாய்.

தகவல்: ரவிரதன் (மகன்) C.T.B
0755098313.

### திருமதி பிறேமகுமாரி தனபாலன்

மூளாயைப் பிறப்பிடமாகவும், மலேசியா கோலாலம்பூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிறேமகுமாரி தனபாலன் நேற்று (20.01.2013) ஞாயிற்றுக்கிழமை கோலாலம்பூரில் காலமாகிவிட்டார்.

அன்னார் திரு.ந.தனபாலனின் அன்புப் பாரியாரும், காலஞ்சென்றவர்களான சிவனேசன் -தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராசா மற்றும் இராசம்மா தம்பதியரின் மருமகளும், கலாராணி ஜெயலிங்கத்தின் (ஜேர்மனி) அன்புச் சகோதரியும், ஜெனனி, ரூபினி, ஸ்கந்தா ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2013) திங்கட்கிழமை பி.ப. 3.30 மணியளவில் (மலேசியா நேரம்) கோலாலம்பூர் மலேசியாவில் நடைபெறும்.

அன்னாரின் துக்க அனுஷ்டிப்பு மூளாயில் அவரது பிறப்பிடமான திருமதி. சுதர்சன் ஜெகதீஸ்வரியின் (ஆசிரியர் சுழிபுரம் விக்றோரியா கல்லூரி) இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் மத்தி,
மூளாய், சுழிபுரம்.
T.P-0778448283.

தகவல்: சகோதரர்கள்
திரு.நா.திருநாவுக்கரசு (J.P) திரு.நா.கிருஸ்ணமூர்த்தி,
திருமதி ந.மங்கயற்கரசி, திருமதி ஜெ.தவராணி.

### சிவலிங்கம் சின்னம்மா



நீர்வேலி சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், ஆவரங்கால் மேற்கு சர்வோதய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சின்னம்மா நேற்று (20.01.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றர்களான சீனியர்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவலை-வள்ளியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சிவலை சிவலிங்கத்தின் அன்பு மனைவியும், சிவநேசன், சந்திரவதனி (கனடா), சிவேந்திரம் (செல்வம்-லண்டன்), சந்திரவவி(லண்டன்), சிவரூபன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் சுபாஜினி, அரசன் தர்சினி, ஜெயம் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆர்த்தி, கீர்த்தி, சயத்தி, தனு, சியாந், லக்சி, ஆசா, சியானி, கவிதன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2013) திங்கட் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் கரதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆவரங்கால்,
சர்வோதய வீதி.

(28819)

தகவல்:
குடும்பத்தினர்.

# இராசமாணிக்கத்தின் பிறந்ததின நிகழ்வு



மட்டக்களப்பு,ஜன.21

இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் அமரர் சி.மு.இராசமாணிக்கத்தின் நூறாவது பிறந்ததின நிகழ்வு களுவாஞ்சிக்குடி இராசமா ணிக்கம் மணி மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொண்டார்.

பட்டிருப்புத் தொகுதி யின் ஆரம்ப கால உறுப்பினர் களாக இருந்து கட்சியின் வளர்ச்சிக்கு அரும் பணி யாற்றியவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

நூறாவது பிறந்ததின நிகழ்வை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் ஞாபகார்த்த நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது. தமிழரசுக்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராசா அஞ்சலி செலுத்துவதனைப் படத்தில் காணலாம். (ச)

# நடமாடும் சேவை

வாழைச்சேனை,ஜன.21


ஆசிய அமைப்பின் நிதி உதவியில் வாழைச்சேனை பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை நேற்று முன்தினம் சனிக்கிழமை புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவை வாழைச்சேனை பொலிஸ் நிலைய சமுக பொலிஸ் பொறுப்பதிகாரி யூ.எல்.இமானுல்லாஹ் தலைமையில் இடம் பெற்றது.

நடமாடும் சேவையில் கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரி விலுள்ள 12 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தங்களது தேவைகளைப் பெற்றுக் கொண்டனர்.

இந்த நடமாடும் சேவையில் பொலிஸ் முறைப்பாட்டு பிரதி வழங்கல், இணக்க சபை விசாரணைகள், மோட்டார் போக்குவரத்து பொலிஸாரினால் போக்குவரத்துத் தொடர்பான விளக்கமளித்தல், பிரதேச செயலகத்தால் பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகளுக்கான விண்ணப்பங்கள், அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளுக்கு பணிப் பெண்களை அனுப்புவதை நிறுத்த கையெழுத்து வேட்டை



மூதூர்,ஜன.21

மூதூரில் செயற்படும் உலமா சபை, கதீப்மார்கள் நலன்புரி சங்கம், தடயம் சமூக அபிவிருத்தி மையம் ஆகியன ஒன்றிணைந்து பணிப் பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதை நிறுத்தக் கோரி கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

பெண்கள் வெளிநாடு செல்வதால் ஏற்படுகின்ற சமூக சீரழிவுகளை தடுக்கும் வகையிலேயே இந்தக் கையெழுத்து வேட்டை நடைபெற்றது.

பத்தாயிரம் பேர்களின் கையெழுத்துடன் அரசுக்கு. மனு ஒன்றை அனுப்பவே பொது மக்களிடமிருந்து கையெழுத்துக்கள் பெறப்படுகின்றன.

இன, மத, வேறுபாடுகளுக்கப்பால் மக்கள் கையெழுத்திடும் முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேசத்துக்கு மகுடம் அபிவிருத்தி பணிகள்

மட்டக்களப்பு,ஜன.21

தேசத்துக்கு மகுடம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு நகரம் 116 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு மட்டக்க ளப்பு மாநகர முதல்வர் திருமதி சிவகீதா பிரபாகரன் தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் இணைந்து நகர அபிவிருத்தி அதிகார சபையினூடாக இந்தப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. என்று அவர் குறிப்பிட்டார்.

சிறுவர் மற்றும் முதியோர் பூங்காக்கள், வீதி அபிவிருத்தி உட்பட பல பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## கலைஞர்கள் கௌரவிப்பு

ஏறாவூர்,ஜன.21

ஏறாவூர் நகர் பிரதேச செயலக கலை மற்றும் கலாசார குழுவால் சகல துறை சார்ந்த கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தக் கௌரவிப்பு விழா ஏறாவூர் பிரதேச செயலர் எஸ்.எல்.எம் ஹனிபா தலை மையில் இடம்பெற்றது.

இந்தநிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பஷீர் சேகுதாவூத், கிழக்கு மாகாண சபையின் பிரதித் தலைவர் எம்.எஸ் சுபைர், ஏறாவூர் நகர சபைத் தலைவர் அலி [illegible] எஸ். [illegible] உட்பட பலர் கலந்துகொண்டு கலைஞர்களை கௌரவித்தனர்.

## மரண அறிவித்தல்

### சின்னப்பாச்செட்டி செல்வரட்ணம்



யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வெங்கடேசன் வரதராஜப்பெருமாள் கோயிலடியைப் பிறப் பிடமாகவும் வவுனியாவை தற்காலிக வசிப் பிடமாகவும் கொண்ட சின்னப்பாச்செட்டி செல்வரட்ணம் நேற்று (20.01.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும் ரதிதேவி, ரகுமார், ரமேஸ்குமார், ரஞ்சினிதேவி, ரதீஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாக்கியலட்சுமி (ஆஸ்ரேலியா), காலஞ்சென்றவர்களான நாகம்மா, அன்னம்மா, குமாரசாமி மற்றும் எல்லம்மா ஆகியோரின் சகோதரனும் ரகுபதி, கிருஸ்ணமூர்த்தி, ஆனந்தி, மேகலா, சர்மியா ஆகியோரின் அன்பு மாமனும் சுரேஸ், விதுசினி-சுரேஸ், ரணேஸ், விஸ்ணு, கோபன், யதுசா, விஸ்ஞகாந், விதுஸ், ராகீப், பிரியா, கேசவிந்தன், ரக்சனா, கௌதமி ஆகியோரின் அன்புப் பேரனும், அஸ்வினின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2013) திங்கட்கிழமை 12 மணியளவில் அவரது இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 2 மணியளவில் வவுனியா இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் ஒழுங்கை,
கோயில்குளம், வவுனியா.
0776015025.

(28820)

தகவல்:
ரதீஸ்குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் சாரதியாக கடமையாற்றும்
செல்லத்துரை அருட்செல்வம்
அவர்களின் அன்புத்தாயார்


## செல்லத்துரை பாக்கியலட்சுமி

அவர்கள் 19.01.2013 அன்று இறைபதம் அடைந்தார் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும்
பிரதேச செயலகம், உடுவில்.

(28671)(6.7.11)

# மரண அறிவித்தல்கள்



## சத்தியமூர்த்தி சரச்சந்திரா

Regional Chairman, Central Region, Central Council, Bhagavan Sri Sathya Sai Seva Organisation.Co-founder and Joint Managing Director of Coco Veranda Pvt Ltd, Director of Mascons Agro Tech Ltd. Director of Maat Flora Pvt Ltd, and Sealcore Pvt Ltd.

கொழும்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியமூர்த்தி சரச்சந்திரா நேற்று (20.01.2013) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் சத்தியமூர்த்தி (Jt.Managing Director, Mascons Ltd) - பாமினி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திஸ்ச அத்தபத்து மற்றும் ரஞ்சினி தம்பதியரின் மருமகனும், றோசினியின் பாசமிகு கணவரும், ரஸ்வி அற்மாவின் தந்தையும், சிவமோகன், ஹரி தர்சன், துவாரகா - சபேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 96, பான்ஸ் பிளேஸ், கொழும்பு-7 எனும்அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக இன்று (21.01.2013) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிவரை வைக்கப்பட்டு பி.ப 4.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 96, பான்ஸ் பிளேஸ்,
கொழும்பு -7

தகவல்:
குடும்பத்தினர்.

(28566)(6.711)

## திருமதி சூசைப்பிள்ளை நட்சத்திரம்



இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சூசைப்பிள்ளை நட்சத்திரம் கடந்த 17.01.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பீட்டர்-சூசானம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், மனுவவேல்பிள்ளை- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும்,குளோரியா (பபி-ஜேர்மனி), பீட்டர் இம்மானுவேல்(ஜேர்மனி), காலஞ்சென்ற யூலியட் (பவா) மற்றும் கலா (லண்டன்), பேசி (கனடா), கொன்சி(லண்டன்), சூட்டி (ஜேர்மனி), மொரின்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு தாயாரும் ஜோர்ஜ் (ஜேர்மனி), அன்ரா(ஜேர்மனி), காலஞ்சென்ற ஸ்ரீபன், எமில் (லண் டன்), ரதி (கனடா), மைக்கல்ராஜன் (லண்டன்), சகிலா(ஜேர்மனி), அன்ரன் குமார்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் றோசலீன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், எல்வீரா, யோகானா, யோன்கரிசன், மரின்கரிசினி, மரின் உஷாலினி, மரின் திரோசினி, எல்வீனா, எதிரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (22.01.2013) செவ்வாய்க் கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளவாலை புனித அன்னாள் ஆலயத்ததுக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பீற்றர் வளவு"
இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(28289) (6.7.4)

### கார் வாடகைக்கு

திருமண மற்றும் விசேட தேவைகளுக்கு சாரதியுடனோ இல்லாமலோ பெற்றுக் கொள்ளலாம்.

T.P:- 0779361427

### விற்பனைக்கு

NP JD- xxxx இலக்க உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0779491178, 0756580106

### இசையமைப்பு, ஒலிப்பதிவு

புதிய பக்திப் பாடல்கள், பாடசாலைக் கீதங்கள் இசையமைத்து தரமாக ஒலிப்பதிவு செய்து தரப்படும்.
ஸப்தஸ்வரம் இசை ஒலிப்பதிவு கலையகம்
கல்வியங்காடு (28575)

தொடர்பு: இசையமைப்பாளர் -ஸ்ரீகுகன்
T.P-0776980573

### கட்டடம் தேவை

உணவகம் நடத்தக் கூடிய கடை / கட்டடம் உடன் தேவை.

077 3712900

(28569) (6.7.4)

### வேலையாள்கள் தேவை

1.பிரதான சமையலாளர் (கோக்கி)
2.ரொட்டி மேக்கர்
3.றைஸ் மேக்கர்
4.கொத்து போடுபவர்
5.உணவு பரிமாறுபவர்

அனுபவம் உள்ளவர் மட்டும் ஆண், பெண் இருபாலாரும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
உணவு/தங்குமிடம் இலவசம்.
தொடர்பு:
077 3712900,0779691178

(28568) (6.7.4)

## ஆசீர்வாதம் பரிமளமேரி

செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும், இத்தாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.திருமதி.ஆசீர்வாதத்தின் மகளாகிய பரிமளமேரி நேற்று (20.01.2013) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி.ஆசீர்வாதம் தம்பதியரின் அன்பு மகளும் யாக்கோப்பு, வரப்பிரகாசம், ஞானமலர், அன்னமலர், ஞானப்பிரகாசம், அந்தோனிப்பிள்ளை(டென்மார்க்), பார்பரம்மா(வதனா), சுவக்கீன்(டென்மார்க்), மரியநீற்றா(ஆசிரியை / மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இத்தாவில் புனித பார்பரம்மாள் ஆலயத்தில் 21.01.2013 இன்று முற்பகல் 10 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் இத்தாவில் புனித பார்பரம்மாள் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி/5767)

தகவல்:
குடும்பத்தினர்.
(வரப்பிரகாசம்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
01 * 09 * 1935



ஆண்டவன் அடியில்
22 * 12 * 2012.

### அமரர் முத்துத்தம்பி புனிதவதி

நாள்கள் முப்பத்தொன்று கழிந்தாலும்
ஆண்டவன் பாதம் நீங்கள் சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறிடுமா எம் துயரம்

இன்று (21.01.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோல்செற் முன் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## பொன்னுத்துரை சரச்சந்திரன் (பவா) (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சரச்சந்திரன் கடந்த (17.01.2013) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை அன்னம்மா மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் மற்றும் பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், நவஜோதியின் (ரவி) அன்புக் கணவரும், வினோதன் (ஆஸ்திரேலியா), விஜிதன் (கனடா), வினோதினி (ராஜி-கொழும்பு), வாலினி (டாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜனனி, நிலக்ஷா, கிரண்யா ஆகியோரின் பாசமிகு பேரனும், தினேஷ், பிரியந்த, சுகாசினி (சுபா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் குகனேசமலர் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) கோபிநாத்சிங் (சுவிஸ்), சற்குணநாதன் (ராசா) (சிமெந்துக் கூட்டுத்தாபனம் ஓய்வு பெற்ற லிகிதர்), அனுராதா (கொழும்பு), அனித்தா (கனடா), விவேகினி (கலா-லண்டன்), செந்தூர்செல்வா (நீர்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருள்ஜோதி (கனடா), ஜெகஜோதி (கனடா), சிவகுமார் (கனடா), சந்திரகுமார் (கனடா), நிறஞ்சனா (கனடா), மோகனகுமார் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (21.01.2013) திங்கள் கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

V.T.S வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(28576)

ARRUL GLOBAL EXPRESS வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவை

25 வருட கால ஆண்டு நிறைவை முன்னிட்டு

சுங்கத்தீர்வை விலக்கு, பாதுகாப்பு, உத்தரவாதம்

11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 1 Kg க்கு UK 750 /= Germany 800 /= France 850 /= Denmark 850 /= Netherland 825 /=

மருந்து பொருட்கள், கடலுணவு , மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.

குறைந்த நிறையுடைய பொதிகளுக்கும் விசேட கட்டணச்சலுகை.

சகல நாடுகளிற்குமான விமானபயணச்சீட்டுக்கள் மற்றும் இணைந்த சேவை

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி , யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணின் சடலம் மீட்பு

கொக்குவிலில் தூக்கில் தொங்கிய நிலையில் இளம் பெண்ணின் சடலமொன்று நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கொக்குவில் கிழக்கில் நேற்று இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பாலசிங்கம் ஜெயரதி (வயது-27) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பரிசோதனை மற்றும் விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-4)

## தனியார் பயணிகள் பஸ்ஸுக்கு கல் வீசியோர் கைதாகினர்

தென்மராட்சி, ஜன.21

வீதியில் சென்று கொண்டிருந்த தனியார் பயணிகள் வாகனத்தின் மீது கல் வீசி தாக்கி சேதத்தை ஏற்படுத்திய மூவரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பஸ்ஸின் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கண்ணாடியை கல்வீசித் தாக்கிச் சேதப்படுத்தியதாக குற்றஞ்சாட்டி இந்த மூவருக்கும் எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை கடந்த வெள்ளியன்று விசாரணைக்கு எடுத்த நீதிவான் மூவரையும் இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, பயண வழிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றி வந்த பஸ் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வாகனத்தின் சாரதிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம-9)

# ஊதாப் புள்ளி நோய்த் தாக்கத்தால் வெங்காயப் பயிர்கள் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.21

கடந்த சில நாள்களாகப் பெய்த கடும் மழையால் வெங்காயப் பயிர்கள் ஊதா புள்ளி நோய் தாக்கத்துக்கு உள்ளாகி வருகின்றன என்று விவசாய திணைக்கள விவசாய போதனாசிரியர் ச.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சில நாள்களாக பெய்த கடும் மழையால் வெங்காயச் செய்கை பாதிப்படைந்துள்ளது. வளி மண்டலத்தில் குறைந்த வெப்பநிலை நிலவும் மாதங்களான ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் ஊதாப் புள்ளி நோய் வெங்காயப் பயிரைத் தாக்குவது வழமை. இந்த நோய்த் தாக்கத்தால் வெங்காயக் குமிழ்கள் அழுகுவதற்கும் இடமுண்டு.

இந்த நோயானது வெங்காயத்தாள்களில்சிறிய வெள்ளை நிற புள்ளிகள் போன்று தோன்றி பெரிதாகி விடும். இறுதியில் கபிலநிறம் கலந்த ஊதா நிறமாக மாற்றமடையும்.

நோய்த் தாக்கம் அதிகரிக்கும் போது வெங்காயத் தாள்கள் எரிந்தது போன்று காட்சியளிக்கும்.

இந்த நோய் வேதாள வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயத்தைப் பாதிக்கும்.

இந்த நோய் பாதிப்புக்கு உட்பட்ட பயிர்களின் கூடிய உற்பத்தி இழப்பு ஏற்படுவதுடன் சேமிப்புக் களஞ்சியங்களிலும் குமிழ் அழுகல் ஏற்படும்.

இதனால் அடுத்த போகத்துக்கான தரமான விதை வெங்காயத்தை வழங்க முடியாத நிலை ஏற்படும்.

கடந்த வாரமளவில் இந்த நோய் வெங்காயப் பயிர்களுக்கு இருப்பது கண்டறியப்பட்டது. இதற்கு முன்னரும் இந்த நோய்த் தாக்கம் இருந்தது. ஆனால் இந்த வருடம் தீவிரமடைந்துள்ளது.

புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி, அச்சுவேலி, பத்தைமேனி, இடைக்காடு ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் வெங்காயப் பயிர்ச் செய்கையில் 625 ஏக்கர் பரப்பளவு இந்த நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகி உள்ளது.

நடுகைக்குப் பயன்படுத்தப்படும் விதை வெங்காயம் நோய்த் தொற்று இல்லாது இருக்க வேண்டும். மழை காலங்களில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும் போது உயர் பாத்திகளில் குமிழ்களை நடுவதுடன் நீர் வடிந்தோடக்கூடிய வகையிலும் அமைந்திருக்க வேண்டும். பசளைப் பாவனையின்போது யூரியா, அமோனியம் சல்பேற் பசளைகளை தேவையான அளவில் பாவித்தல் வேண்டும். இந்த நோய்க்குரிய பங்கசுக்கள் மண்ணில் துவாரங்களில் வாழக்கூடியன.

எனவே பயிர்ச் சுழற்சியை கடைப்பிடிக்க வேண்டும். பொருத்தமான பங்கசு நாசினிகளை தெரிவு செய்து பரிந்துரை செய்யப்பட்ட அளவில் விசுறுதல் வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமே ஊதாப் புள்ளி நோயை கட்டுப்படுத்த முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

## குரங்கால் விபத்து குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி, ஜன.21

வேலியிலிருந்து பாய்ந்த குரங்கு வீதியில் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பகல் சாவகச்சேரி பெருங்குளம் சந்திக்கு அருகில் இடம்பெற்றது.

சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை உதயகுமார் (வயது -42) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சாவகச்சேரி நகரசபை பணியாளரான இவர் அங்கு நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்புகையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறிகள் விலை உயர்வு

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரித் துள்ளது.

கடந்த பருவமழை காலத்தில் மரக்கறிச் செய்கையாளர்கள் மரக்கறிகளைப் பயிரிடுவதில் நாட்டம் குறைந்துள்ளது. அத்துடன் கால நிலைகளுக்கேற்ப கொடிகள் மூலம் கிடைக்கக்கூடிய மரக்கறி வகைகளையே பயிரிட்டனர்.

இந்தநிலையில் அதிக விளைச்சலைப் பெறக் கூடிய ஜனவரி மாதத்தில் குறைந்தளவு மரக்கறிகளே உற்பத்தியாக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக மரக்கறி வகைகள் மிகக்குறைவாகக் கிடைப்பதால் மரக்கறி விற்பனையாளர்கள் மரக் கறிகளை கூடிய விலைக்கு தோட்டப் பயிர்ச்செய்கையாளர்களிடம் இருந்து கொள்வனவு செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

திருநெல்வேலி, சாவகச்சேரி, நெல்லியடி, மருதனார் மடம் உள்ளிட்ட மரக்கறிச் சந்தைகளில் கத்தரிக்காய் ஒரு கிலோ 220 ரூபாவுக்கு அதிகமாகவும் பச்சை மிளகாய் ஒரு கிலோ 150 ரூபாவுக்கு அதிகமாகவும் வெங்காயம் ஒரு கிலோ 80 ரூபாவுக்கும் பயற்றங்காய் ஒரு கிலோ 240ரூபாவாகவும் முருங்கைக்காய் ஒரு கிலோ 400 ரூபாவாகவும் தக்காளி ஒரு கிலோ 60 ரூபாவாகவும் கோவா ஒரு கிலோ 50 ரூபாவாகவும் கரட் ஒரு கிலோ 100 ரூபாவாகவும் வெண்டிக்காய் ஒரு கிலோ 100 ரூபாவாகவும் லீக்ஸ் ஒரு கிலோ 120 ரூபாவாகவும் கருணைக் கிழங்கு ஒரு கிலோ 50 ரூபாவாகவும் வாழைக்காய் ஒரு கிலோ 100 ரூபாவாகவும் மரவள்ளிக் கிழங்கு ஒரு கிலோ 30 ரூபாவாகவும் கீரை ஒரு பிடி 25 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதனைவிட தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்படுகின்ற மரக்கறிகள் இன்னும் அதிக விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-14)

## உதயன் பணியாளர் தாக்குதல் இதுவரை எவரும் கைதாகவில்லை

யாழ்ப்பாணம், ஜன.21

பத்திரிகை விநியோகப் பணியில் ஈடுபட்டிருந்த 'உதயன்' பணியாளரின் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்று யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 10ஆம் திகதி வடமராட்சி நெல்லியடிப் பகுதில் உதயன் விநியோகப் பணியாளரான நா.பிரதீபன் இனந்தெரியாதவர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும், கொண்டு சென்ற பத்திரிகை பிரதிகளும் எரிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் நடைபெற்று ஒருவாரம் கடந்த நிலையில் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் தொடர்பான எந்தவித தகவல்களும் கிடைக்கப் பெறவில்லை. அத்துடன் எவரும் கைது செய்யப்படவில்லை.

இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த 15 ஆம் திகதி பல்கலை மாணவர்களின் விடுதலையைக் கோரி சம உரிமை இயக்கத்தால் யாழ். பஸ்தரிப்பிடத்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் செய்தியாளர்கள் மீது கழிவு ஒயில் வீசி தாக்குதல் நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார். (ம-14)

# நடமாடும் வியாபாரிகளால் வடமராட்சி வர்த்தகர் பாதிப்பு

வடமராட்சி, ஜன.21

வடமராட்சிப் பிரதேசத்தில் தென்பகுதி, இந்திய வியாபாரிகளால் மேற்கொள்ளப்படும் நடை பாதை வியாபாரம் மற்றும் நடமாடும் வியாபாரங்களால் வடமராட்சி வர்த்தகர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

புடைவை வகைகள், தைத்த ஆடைகள், எலெக்ரோனிப் பொருள்கள், இரும்புப் பொருள்கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள், பிளாஸ்டிக்பொருள்கள், அலுமினியப் பாத்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் இவ்வாறு விற்பனைச் செய்யப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை, நெல்லியடி, மந்திகை, உடுப்பிட்டி போன்ற முக்கிய கடைத் தெருப்பகுதிகளிலும் ஏனைய பெரும் வீதிகளிலும் நடை பாதைக் கடைகள் போடப்பட்டு வியாபாரம் மேற்கொள்ளப்படுகிறது.

அத்துடன் சிறியரக வாகனங்களில் ஒலிபெருக்கிகளில் அறிவிப்புக்களை மேற்கொண்டு கிராமங்களை ஊடறுத்துச் சென்றும்வியாபார நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன.

இந்த நிலையில் பெருந்தொகைப் பணத்தை முதலீடு செய்து வர்த்தகத்தை மேற்கொண்டுவரும் வடமராட்சி வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு வடமராட்சியிலுள்ள நகர, பிரதேச சபைகள் நடை பாதைக் கடைகள் மற்றும் நடமாடும் வியாபார நடவடிக்கைகளை நிறுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச வர்த்தகர்கள் கேட்டுள்ளனர். (ம-8)

## மழையில் நனைந்து வெயிலில் காயும் பயணிகள்

வடமராட்சி, ஜன.21

நெல்லியடி பஸ் நிலையத்தில் பயணிகள் தரித்து நிற்பதற்கு உரிய இடம் இன்மையால் பயணிகள் மழையால் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்றுக் காலை பெய்த பெரு மழையால் பஸ்களின் வருகைக்காக காத்திருந்த பயணிகள் குழந்தைகள் சகிதம் பெரும் சிரமங்களையும் அவலங்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. மழை பெய்த வேளை ஒதுங்க இடம் இன்றி பெரிதும் சிரமப்பட்டனர்.

வீதி அகலிப்பை முன்னிட்டு நெல்லியடி பஸ் நிலையத்தில் இருந்து வந்த பயணிகள் தரிப்பிடம் இடித்து முற்றாக அகற்றப்பட்டது.

இதற்குப் பதிலாக தரிப்பிடம் நிலையத்தின் மேற்குப் பகுதியில் பயணிகள் தரிப்பிடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கரவெட்டிப் பிரதேசசபை தெரிவித்திருந்தது.

தற்காலிகமாக தகரத்தினாலான கொட்டகை அமைக்கப்பட்டுள்ள போதும் அது கால்நடைகள் தங்கும் இடமாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

# மானிப்பாயில் கடந்த டிசெம்பர் கடத்தப்பட்ட நபர் மீட்பு

## சந்தேக நபர்களும் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜன.21

மானிப்பாய் பிரதேசத்தில் கடந்த டிசெம்பர் மாதம் கடத்தப்பட்ட நபர் மீட்கப்பட்டதுடன் கடத்தலுடன் தொடர்புடைய 4 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இரண்டு ஓட்டோக்களும் மீட்கப்பட்டுள்ளன. யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக்பெரேரா இத்தகவலைத் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புத் தொடர்பாக தென்னிலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவடன் பணப் பரிமாற்றலில் குறிப்பிட்ட நபர் தொடர்புபட்டிருந்தார். இதேவேளை 10 இலட்சம் ரூபா பணம் முஸ்லிம் நபருக்கு மானிப்பாயை சேர்ந்தவர் கொடுக்க வேண்டியிருந்த நிலையில் கடந்த டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி மானிப்பாய் பகுதியில் வைத்து கடத்தப்பட்டிருந்தார்.

இந்தக் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 4 பேர் தற்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட நபர்களிடம் கிடைக்கப் பெற்ற வாய் மொழி மூலத் தகவல்களில் கொழும்பைச் சேர்ந்த முஸ்லிம் நபரே கடத்தலுக்குப் பிரதானமானவர் என்று அறியமுடிகிறது.

குறித்த முஸ்லிம் நபர் தலைமறைவாகியுள்ளதால் அவர் இதுவரை கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார். (ம-14)

# கொலை தொடர்பான தகவல்கள் கோரி துறைசார்ந்தோரே ஒட்டினர் சுவரொட்டி

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன21

வெட்டிக் கொலை செய்யப்பட்ட தென்னிலங்கையைச் சேர்ந்த நபரின் கொலை தொடர்பான தகவல்களைத் தருபவர்களுக்கு 10 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பது துறை சார்ந்த அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கையே எனத் தெரிவித்தார் யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக்பெரேரா.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென் பகுதியில் இருந்து வீதித் திருத்தப் பணிகளுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த ஆர்.டபிள் யூ.டி.நிஷாந்த சம்பத் கொக்குவில் நந்தாவில் அம்மன் குளத்தடியில் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ள பொலிஸார் கொழும்பில் இருந்து விஷேடமாக அழைத்து வரப்பட்ட விஷேட பொலிஸ் குழுவுடன் புன்னாலைக்கட்டுவன், திருநெல்வேலிப் பகுதிகளில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

**கொழும்பிலிருந்து வந்த விசேட பொலிஸ் குழு விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளது**

இந்த நிலையில் கொலையுடன் தொடர்புடையவர்களை உடனடியாகக் கைது செய்வதற்காக துறை சார்ந்த அதிகாரிகளால் குடாநாட்டில் பரவலாக இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இந்தச் சுவரொட்டிகளில் தொலைபேசி இலக்கமும் குறிப்பிடப்பட்டுள்ளதால் கொலை தொடர்பான தகவல்களைத் தெரிந்தவர்கள் தகவல்களைத் அந்த தொலைபேசி இலக்கம் ஊடாகத் தெரிவிக்கலாம். உடனடியாக சன்மானமும் வழங்கப்படும் எனவும் மேலும் தெரிவித்தார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவில் முதல் முறையாக டைனோசரின் வால்பகுதி படிமங்கள்

இந்தியாவில் முதல் முறையாக டைனோ சரின் வால் பகுதி எலும்பு படி மங்களை இந்திய புவிசார் கழகம் கண்டுபிடித்துள்ளது.

1828 ஆம் ஆண்டு மத்திய பிரதேசம் பகுதியில் இருந்து கண்டு பிடிக்கப் பட்ட மேற் படி எலும்புகள் டைனோ சருடையது என தற் போது கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. மிச்சி கன் பல்கலைக்கழகத் துடன் இணைந்து நடத் தப்பட்ட ஆய்வில் இது கண்டு தெரிய வந்துள் ளது. (வ)

## தெற்கு காஷ்மீரில் பனிக் குவியலில் சிக்கி 60 பேர் தவிப்பு

### மீட்கும் பணிகள் தீவிரம்

தெற்கு காஷ்மீரில் உள்ள குல்காம் மாவட்டத்தில் நேற்று முன்தினத்தில் இருந்து கடுமையான பனிப் பொழிவு ஏற்பட்டுள்ளது.

வால்டெங்கோ பகுதியில் பனிப்புயலுடன், நிலச் சரிவும் ஏற்பட்டதால் 60 இற்கும் மேற்பட்டவர்கள் பனிக்குவியலுக்கு இடையில் சிக்கி தவிக்கின் றனர்.

அவர்களை மீட்கும் பணியில் குல்காம் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

2005ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதம் இதே பகுதியில் ஏற்பட்ட பனிப்புயல் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 175 பேர் உயிரிழந்தது குறிப்பிடத் தக்கது. (வ)

## சுற்றுலாப்பயணிகள் நான்கு பேர் மாமல்லபுரம் கடலில் மூழ்கிச் சாவு

சென்னை, ஜன.21

மாமல்லபுரம் கடலில் குளித்துக் கொண்டிருந்த சுற்றுலாப் பயணிகள் நான்கு பேர் இராட்சத அலையில் சிக்கி இழுத்துச் செல்லப் பட்டு உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாமல்லபுரம் கடலில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் குளித்துக்கொண்டிருந்தனர். அப்போது ராட்சத அலையில் சிலர் இழுத்துச் செல்லப்பட்டனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் மீட்புக் குழுவினர் கடலில் அடித்துச் செல்லப்பட்டவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது சுற்றுலாப் பயணிகள் நான்கு பேர் சடலமாக மீட்கப்பட்டுள் ளனர். இதனையடுத்து, அந்தச்சடலங்களைப் பொலிஸார் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத் தனர்.

விசாரணையில் அவர்கள் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தையடுத்து அந்தப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது. (வ)



காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்ட ராகுல்காந்திக்கு பிரதமர் மன்மோகன்சிங் மலர்கொத்து வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.

## காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரானார் ராகுல் காந்தி

**இதன்மூலம் காங்கிரஸ் கட்சியின் அதிகார பூர்வமாக இரண்டாவது தலைவராக, அதாவது சோனியாவுக்கு அடுத்த இடத்திற்கு ராகுல் காந்தியைக் கொண்டு வந்து விட்டது அந்தக்கட்சி**

ஜெய்ப்பூர், ஜன.21

காங்கிரஸ் துணைத் தலைவராக ராகுல் காந்தி நியமிக்கப்பட்டார். ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற காங்கிரஸ் அலுவலகக் கூட்டத்தில், குறித்த பதவிக்கு அவர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதன்மூலம் அதிகார பூர்வமாக காங்கிரஸ் கட்சியின் இரண்டாவது தலைவராக, அதாவது சோனியா வுக்கு அடுத்த இடத்திற்கு ராகுல் காந்தியைக் கொண்டு வந்து விட்டது அந்தக்கட்சி.

மேற்படி பதவி குறித்து ராகுல் காந்தி கூறுகையில்,

''எனக்கு நல்ல அனு பவம் உள்ளது. எனது கட்சியும் மிகவும் பழமையான, பாரம்பரியமான, அனுபவம் வாய்ந்த கட்சி. இதன் துணைத் தலைவராகியி ருப்பது பெருமை தருகிறது - என்றார். (வ)

# நட்புறவுடன் செயற்படுவதற்கு பாகிஸ்தான் முன்வரவேண்டும்

### பிரதமர் வலியுறுத்து


டில்லி, ஜன.21

இந்தியாவுடன் நட்புறவைப் பேண விரும்பினால், தனது வழிமுறைகளை பாகிஸ்தான் மாற்றிக் கொள்ள வேண்டும் என பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நடைபெற்று வரும் காங்கிரஸ் கட்சியின் 2 நாள் சிந்தனை அமர்வு மாநாட்டில் நேற்று முன்தினம் பேசிய பிரதமர் மன்மோகன் சிங் மேலும் கூறியதாவது:-

பாகிஸ்தான் உட்பட அண்டை நாடுகளுடன் நட்பையும் நல்லுறவையும் பேண இந்தியா விரும்புகிறது. எனினும் விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெற்று வரும்போது இது எவ்வாறு சாத்தியமாகும் என்று கேள்வி எழுப்பினார்.

இந்த விடயம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி, பயங்கரவாதத்தை எதிர் கொள்வதிலும், நாட்டின் எல்லையை பாதுகாப்பதிலும் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ள மாட்டோம் - என்றார்.



ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் கடந்த 8ஆம் திகதி இரவு அத்துமீறி பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தியது.

இதில் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஹேம்ராஜ் மற்றும் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த சுதாகர் சிங் ஆகிய இரு இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து இந்தியா நடத்திய பதில் தாக்குதலில், பாகிஸ்தான் இராணுவத்தை சேர்ந்த 3 பேர் கொல்லப் பட்டனர் என்பது குறிப்பி டத்தக்கது. (வ)

## தானமாக வழங்கப்படும் உடல் உறுப்புக்கள் வீசப்படும் அவலம்

சென்னை மருத்துவமனைகளில் தானமாக வழங்கப்படும் இதயம் உள்ளிட்ட உடல் உறுப்புகள் உரியவர்களுக்கு பொருத்தப்படாமல் கழிவுகளாக குப்பையில் வீசப்படுவதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

வருடந்தோறும் 250 இதயங்கள் வரை பெறப்பட்டபோதும், உடனடி மருத்துவ வசதியின்மை, தொலைவு, நோயாளிகளின் ஒத்துழைப்பு இன்மை, தானம் தருபவர் சம்மதித்தும் உறவினர்களின் ஒத்துழைப் பின்மை போன்ற காரணங்களால் மேற்படி இதயங்கள் வீணாகிப் போகின்றனவாம்.

அவ்வாறு தானமாக பெறப்படும் உறுப்புகள் தான் சில நாட்களில் பயன் படுத்தப்படாமல் கழிவாக வீசப்படுவதாக குற்றச் சாட்டு எழுந்துள்ளது. (வ)

## பாகிஸ்தானுக்கு எதிரான நடவடிக்கையில் ஏனைய நாடுகளின் தூண்டுதல் இல்லை

### வெளியுறவு அமைச்சர் குர்ஷித் கருத்து

டில்லி, ஜன.21

எல்லையில் அத்து மீறி நுழைந்த பாகிஸ்தான் இராணுவத்தினர் இந்திய இராணுவ வீரர்களைக் கொன்ற விவகாரத்தில் இந்தியாவின் நடவடிக் கையில் எந்த ஒரு நாட்டின் தூண்டுதலும் இல்லை என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பங்கேற்ற குர்ஷித் கூறிய தாவது:-

அண்மையில் 2 வீரர்கள் கொல்லப்பட்ட விவகாரத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக மத்திய அரசு கண்டன அறிக்கைகளை வெளியிட்டது. இதன் பின்னணியில் அமெரிக்கா உள்ளிட்ட எந்த நாட்டுக்கும் பங்கு இல்லை. அமெரிக்கா எங்களை நிர்ப்



பந்திக்கவுமில்லை. அதற்கான அவசியமும் இல்லை.

இதேவேளை அமெரிக்கா, ரஷ்யா, சீனா, கனடா, ஈரான், சவூதி அரேபியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுடன் இதுகுறித்து பேசுவோம் என்பது உண்மைதான்.

மேற்படி சம்பவத்தை யடுத்து, இரு நாடுகளுக்கு இடையிலான பேச்சு நடைமுறைகளை மறு ஆய்வு செய்ய வேண்டுமா என்று கேட்கிறீர்கள். மறு ஆய்வு என்பது குறிப்பிட்ட கால இடைவெளியில் நடைபெறுகிறது. இது பேச்சின் அடிப் படை அம்சமாக உள்ளது - என்றார். (வ)

## சிறையிலிருந்து அஞ்சல் வழிக் கல்வி மூலம் 31 பட்டங்களைப் பெற்று சாதனை படைத்த கைதி

அகமதாபாத், ஜன.21

சிறையிலிருந்தபடியே அஞ்சல் வழி கல்வி மூலம் படித்து முடித்து 31 பட்டங்களைப் பெற்று மருத்துவர் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்- பட்டேல் குஜராத் மாநிலம், அகமதாபாத்தைச் சேர்ந்தவர் பானு பட்டேல். எம்.பி.பி.எஸ். படித்துள்ள அவர் 2004 ஆம் ஆண்டு பொடாசட்டத்தில் கைது செய்யப்பட்டார்.

2005 ஆம் ஆண்டு அவருக்கு அகமதாபாத் பொருளாதார குற்றப் பிரிவு நீதிமன்றம் 6 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. அதனைத் தொடர்ந்து அவர் சபர்மதி சிறையில் அடைக்கப்பட்டார். மருத்துவத்துக்குப் படித்தவர் என்பதால் சிறையில் உள்ள 'கிளினிக்கில்' அவர் வேலையில் அமர்த்தப் பட்டார்.

பின்னர் அங்கிருந்து சிறை நூலகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். இந்தக் கால கட்டத்தில் மருத்துவர் பாலாசாகிப் அம்பேத்கர் திறந்த வெளி பல்கலைக்கழகத்தில் அஞ்சல் வழி பட்டப் படிப்பில் சேர்ந்தார்.

2011 ஆம் ஆண்டு டிசெம்பர்



மாதம் சிறையிலி ருந்து விடுதலை செய்யப் பட்டார். இந்தக் கால கட்டத்தில் எம்.எஸ்.சி., பி.கொம், எம்.கொம் மற்றும் பட்ட மேற்படிப்பு டிப்ளோமா என்று 31 பட்டங்களைப் பெற்றார்.

சிறையிலிருந்து விடு தலையான பின்பு இவரது சாதனையைப் பாராட்டி அம்பேத்கர் பல்கலைக் கழகம் அவருக்கு ஒருங்கிணைப்பாளர் பதவி வழங்கிக் கௌரவித்தது. தற்போது அவர் மாநில சிறைகளில் உள்ள 26 தொலைதூர கல்வி நிலையங்களில் கைதிகளுக்கு கல்வி கற்பித்துக் கொண்டிருக்கிறார். சிறையிலிருந்தபடியே 31 பட்டங்களைப் பெற்ற அவரது சாதனை கின்னஸ் புத்தகம் மற்றும் ஆசிய சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இரு சிறுமிகள் கௌதமாலாவில் கொலை

கௌதமாலா, ஜன.21

கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட இரு சிறுமிகளின் உடல்களை கௌதமாலாப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

6 மற்றும் 12 வயதுடைய இச்சிறுமிகளின் சடலங்கள் கௌதமாலா நகரிலுள்ள வீதியில் வீசப்பட்ட நிலையில் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சிறுமிகளின் கழுத்து நெரிக்கப்பட்டிருக்கலாமென பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

2011ஆம் ஆண்டு கௌதமாலாவில் சுமார் 700 பெண்கள் கொலை செய்யப்பட்டதாக புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மியாமியில் நேருக்கு நேர் மோதின இரு விமானங்கள்

நியூயோர்க், ஜன.21

அமெரிக்காவின் மியாமியில் இரண்டு விமானங்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள முக்கிய நகரமான மியாமி சர்வதேச விமான நிலையத்தில் 350 பயணிகளுடன் ஏர்பிரான்ஸ் விமானம் பரிஸுக்குப் புறப்படத் தயாராக இருந்தது.

அப்போது 240 பயணிகளுடன் அங்கு தரையிறங்குவதற்காக கீழ்நோக்கி வந்த ஆர்ஜென்ரீனா விமானம், ஏர்பிரான்ஸ் விமானத்தின் மேல் பகுதியில் மோதியபடி ஓடுதளத்தில் தரையிறங்கியது.

இதில் ஒரு விமானத்தின் இறக்கையும், மற்றொரு விமானத்தின் வால் பகுதியும் சேதமடைந்தது.

மீட்புக்குழுவினர் விரைவாக செயல்பட்டு இரு விமானங்களிலும் இருந்த பயணிகளை பத்திரமாக மீட்டனர். விபத்து குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.


## அமெரிக்க விமான நிலையங்களில் சோதனை நிலையம் நீக்கம்

நியூயோர்க், ஜன.21

அமெரிக்க விமான நிலையங்களில் மனிதர்களை முழுமையாகச் சோதனையிடும் இயந்திரங்களை அகற்ற போக்குவரத்து பாதுகாப்புத் துறை முடிவு செய்துள்ளது.

மனிதர்களின் உடலை ஆடைகள் இன்றி துல்லியமாக சோதனை செய்யும் இவை, அமெரிக்காவின் முக்கிய விமான நிலையங்களில் இயங்கி வருகின்றன. அவை தொடர்பில் எழுந்த முறைப்பாடுகளை அடுத்து பரிசோதிக்கும் இயந்திரங்களைப் படிப்படியாக அகற்றப் போக்குவரத்து பாதுகாப்புத்துறை முடிவு செய்து அதனை செயற்படுத்தி வருகிறது.

பொதுமக்களை இவ்வாறு சோதனையிடுவது சட்டத்துக்கு முரணானது என்பதாலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் பெரும் மழை பெய்து வருகிறது. இதனால் அங்கு கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வெள்ள நீர் வீடுகள் மற்றும் விற்பனை நிலையங்களுக்குள் புகுந்துள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது.

## இந்தியா- பாக். பேச்சு வரவேற்கிறது அமெ.

வாஷிங்டன், ஜன.21

காஷ்மீர் எல்லையில் ஏற்பட்டுள்ள பதற்றம் குறித்து இந்தியாவும், பாகிஸ்தானும் நேரடி பேச்சுகளில் ஈடுபடுவதை வரவேற்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் எல்லையில் இந்தியா-பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் தாக்குதல்களில் ஈடுபடுவது சமீப காலமாக அதிகரித்துள்ளது. அதனால் இரு நாட்டு எல்லைகளிலும் பதற்ற நிலை தோன்றியுள்ளது. இந்தநிலையில் தற்போது சுமுக நிலையை ஏற்படுத்த இரு நாடுகளும் பேச்சு நடத்த முன்வந்துள்ளன.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நுலாண்ட் தெரிவிக்கும் போது,

"எல்லைப் பகுதியில் இந்தியா, பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் மோதல்களில் ஈடுபடும் பிரச்சினைக்கு, இரு நாடுகளும் இணைந்து தீர்வுகாண முயற்சிப்பதே சிறந்த வழி. இந்தப் பிரச்சினை குறித்து தற்போது இரு நாடுகளும் நேரடிப் பேச்சுகளில் ஈடுபடவுள்ளன. இந்த நடவடிக்கையை நாங்கள் வரவேற்கிறோம்.

இருநாடுகளுக்கு இடையே பொருளாதார உறவு, வர்த்தக உறவு போன்ற விடயங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த நடவடிக்கைகள் சீர்கெடுவதை அமெரிக்கா விரும்பவில்லை"- என்று தெரிவித்தார்.

# சிரியா மீது போர்க்குற்ற விசாரணை ஐ.நா. பாதுகாப்பு சபையில் எதிர்ப்பு

ஜெனிவா, ஜன.21

சிரியா அரசு மீது போர்க் குற்ற விசாரணை நடத்த சர்வதேச நீதிமன்றத்தை அறிவுறுத்த வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்பு சபையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சிரியாவில் ஜனாதிபதி பசார் அல் அசாத்துக்கு எதிராக கடந்த ஓராண்டுக்கும் மேலாக கிளர்ச்சியாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

உள்நாட்டுப் போர் மூண்டதைத் தொடர்ந்து கிளர்ச்சியாளர்களை ஒடுக்க வான் வழித் தாக்குதலில் சிரியா இராணுவம் ஈடுபட்டுள்ளது. இதில் இதுவரை 60 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில், சிரிய அரசு மீது போர் குற்ற விசாரணை நடத்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை அறிவுறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி சுவிட்ஸர்லாந்து, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையில் 56 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. இந்தக் கோரிக்கைக்கு பாதுகாப்புச் சபையில் உறுப்பினர்களாக உள்ள பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரேலியா, தென்கொரியா, லக்ஸம்பர்க் ஆகியவை ஆதரவு தெரிவித்துள்ளன. போர் குற்ற விசாரணையை நடத்தி குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால்தான், சிரியாவில் அமைதியை ஏற்படுத்த முடியும் என அந்த நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.



எனினும் பாதுகாப்புச் சபைக்குத் தலைமை வகிக்கும் பாகிஸ்தானின் பிரதிநிதி மசூத்கான் தெரிவிக்கையில்,

"சிரிய அரசு மீது போர் குற்ற விசாரணையை மேற்கொள்ள சில நாடுகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. அது போன்ற நடவடிக்கையை எடுத்தால், அமைதி முயற்சிகளுக்கு அசாத் ஒத்துழைப்புத் தர மறுக்கும் வாய்ப்பு ஏற்படும் என்று எதிர்க்கும் நாடுகள் கருதுகின்றன" என்றார்.

முன்னர் சிரியப் பிரச்சினையில் ஐ.நா. தலையிட முயன்றபோது பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்களாக உள்ள சீனாவும், ரஷ்யாவும் தங்களது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதைத் தடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## பாக்.பிரதமரை பதவி நீக்கம் செய்ய தீர்ப்பளித்த நீதிபதி தூக்கில் தொங்கினார்

இஸ்லாமாபாத், ஜன.21

பாகிஸ்தான் பிரதமர் ராஜா பர்வேஷ் அஷ்ரப் மீதான ஊழல் குற்றசாட்டுத் தொடர்பில் விசாரணை மேற்கொண்டுவந்த அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இஸ்லாமாபாத்திலுள்ள அரச விடுதியில் இந்த அதிகாரி தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார் என்று தகவல்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் பிரதமர் ராஜா பர்வேஷ் அஷ்ரப்பை கைது செய்யுமாறு பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டிருந்தது.

நீர் மற்றும் மின்சக்தி அமைச்சராக இருந்தபோது கடந்த 2010ஆம் ஆண்டு மின் உற்பத்தி திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்க லஞ்சம் பெற்றார் என ராஜா பர்வேஷ் அஷ்ரப் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இருப்பினும் பாகிஸ்தான் பிரதமர் ராஜா பர்வேஷ் அதனை மறுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## றொறன்ரோவில் துப்பாக்கிச் சூடு 15 வயதுச் சிறுவன் சாவு

றொறன்றோ, ஜன.21

றொறன்றோவில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 15வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சிறுவன் தாமதமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டமையால் காப்பாற்ற முடியாது போனதாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்தக் குடியிருப்பின் பாரம் தூக்கி (லிப்ட்) இயங்காததால் அவனை மருத்துவ உதவியாளர்கள் படிக்கட்டு வழியாகக் கொண்டு சென்றமையால் மருத்துவமனையில் சேர்க்கத் தாமதமானது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த 2010ஆம் ஆண்டில் இதே கட்டடத்தில் இரண்டு பதின்ம வயது இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர்.

## 2ஆவது முறை பதவியேற்றார் ஒபாமா

வோஷிங்டன், ஜன.21

அமெரிக்க ஜனாதிபதியாக 2ஆவது முறை தேர்ந்தெடுக்கப்பட்ட பராக் ஒபாமா நேற்றுப் பிற்பகல் முறைப்படி பதவியேற்றுக் கொண்டார்.

அவருக்கு தலைமை நீதிபதி ஜான் றொபர்ட்ஸ் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பொது மக்கள் முன்னிலையில் மீண்டும் ஒபாமா பதவியேற்பு விழா இன்று நடைபெறவிருக்கிறது.

அமெரிக்காவில் 4 ஆண்டுக்கு ஒரு முறை ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் நடத்தப்படுகிறது. ஒருவர் இரண்டு முறை மட்டுமே ஜனாதிபதி பதவி வகிக்க முடியும். ஜனநாயக கட்சி சார்பில் அதிபராக இருந்த ஒபாமா கடந்த நவம்பர் மாதம் நடந்த தேர்தலில் 2ஆவது முறை போட்டியிட்டு வெற்றி பெற்றார்.



அமெரிக்க சட்டப்படி [illegible] பகல் 12 மணிக்கு முடிகிறது.

அதையடுத்து தேர்தலில் வெற்றி பெற்ற ஒபாமா, இன்று பிற்பகல் முறைப்படி 2வது முறையாக ஜனாதிபதி பதவியேற்றார். துணை ஜனாதி பதியாக ஜோ பிடன் பதவியேற்றார். இவர்களுக்கு தலைமை [illegible] ரொபேர்ட்ஸ் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

## புதிய அரசமைப்பு குறித்து சிம்பாப்வேயில் உடன்பாடு

ஹராரே, ஜன.21

புதிய அரசமைப்பு தொடர்பான உடன்பாடு ஒன்றை எட்டியுள்ளோம் என்று சிம்பாப்வேயின் மாற்றுக் கருத்துடைய அரசியல் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிம்பாப்வே ஜனாதிபதி றொபர்ட் முகாபேக்கும் பிரதமர் மோகன் சுவாங்கிராய்க்கும் இடையிலான பேச்சுக்களின் போது இந்த உடன்பாடு எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருடம் நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்னர் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்னும் நிபந்தனையை பிரதமர் முன்வைத்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டமை மகிழ்ச்சியானது. புதிய அரசமைப்பு மீது அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெறும் என்று ஜனாதிபதி றொபர்ட் முகாபே தெரிவித்துள்ளார்.

2008ஆம் ஆண்டு தேர்தலின் பின் மோகன் சுவாங்கிராயின் கட்சிக்கும் றொபர்ட் முகாபேயின் கட்சிக்கும் இடையில் கூட்டணி ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எகிப்தில் கைதான போராட்டக்காரர் 379 பேர் விடுவிப்பு

கெய்ரோ, ஜன. 20

எகிப்தில் கைது செய்யப்பட்டிருந்த 379 பேர் நீதிமன்றத்தால் விடுவிக்கப் பட்டுள்ளனர்.

எகிப்தில் ஜனாதிபதிக்கு எதிராக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கெய்ரோவில் உள்ள தாஹிர் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 2 வாரம் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டங்களின்போது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் மோதல் வெடித்தது. அப்போது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 42 பேர் உயிரிழந்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 379 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது கெய்ரோ நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது.

நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணையின் போது வழக்கை விசாரித்த நீதிபதி, 'எகிப்து ஜனாதிபதி, முர்சி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கியுள்ளதால், வழக்குகளில் இருந்து 379 பேரையும் நீதிமன்றம் விடுவிக்கிறது' என்று தெரிவித்தார்.

# ஏழு இலட்சம் மக்கள் மாலியில் இடம்பெயர்வு



பாமகோ, ஜன.21

மாலியில் அல் குவைதாவுடன் தொடர்புடைய கிளர்ச்சியாளர்களுக்கும், இராணுவத்துக்கும் இடையிலான மோதலில் இதுவரை 7,00,000 பொதுமக்கள் தமது வதிவிடங்களை இழந்து அகதிகளாக அண்டை நாடுகளுக்குத் தஞ்சம் புகும் நிலைமையை எய்தியுள்ளதாக ஜெனீவாவில் உள்ள ஐ.நா இன் அகதிகளுக்கான பிரிவு அறிவித்துள்ளது.

இதனால் மேற்கு ஆபிரிக்காவில் அகதிகளின் நிலை மோசமடைந்துள்ளதாகவும், குறுகிய காலத்தில் மாலியின் உள்நாட்டுக்கு உள்ளேயே 3,00 000 பேரும், அயல் நாடுகளுக்கு சுமார் 4,00 000 பேரும் இடம்பெயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

மாலியில் தற்போது, இஸ்லாமிய ஆயுததாரிகளும், அல்கொய்தாவினரும் இணைந்து கிளர்ச்சி செய்து வருகின்றனர். அவர்களை எதிர்த்து மாலியின் இராணுவம் கடுமையாக போராடி வருகிறது. அவர்களுக்கு துணையாக மேற்கு ஆபிரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தமது படைகளை அனுப்பியுள்ளன.

தற்போதைய தாக்குதல்களால், மாலிக்கு அண்டை நாடான மௌரிடானியா, நைகர், புர்கினா பசோ மற்றும் அல்ஜீரியா ஆகிய நாடுகளுக்கு மட்டும் 230 000 பேர் இடம்பெயர்ந்து உள்ளனர்.

மாலியில் 8000 இற்கும் அதிகமான பிரெஞ்சு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தற்போது பிரான்ஸ் மாலி புரட்சிப் படைக்கு எதிராகக் களத்தில் குதித்திருப்பதால் அவர்களின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளர்ச்சியாளர் மீதான தாக்குதல் நிறுத்தப்படும்

### மியன்மார் அரசு அறிவிப்பு

நைரோபி, ஜன.21

காசின் கிளர்ச்சியாளர்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படும் என மியன்மார் இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

மியன்மாரின் வடக்குப் பகுதியில் காசின் இன கிளர்ச்சியாளர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தி வந்தனர்.

எதிர்பார்த்த இலக்கு எட்டப்பட்டதனால் எதிர்வரும் காலங்களில் தாக்குதல் நடத்தப்போவதில்லை என மியன்மார் இராணுவத்தினர் அறிவித்துள்ளனர். எவ்வாறெனினும், இந்த அறிவிப்பு தொடர்பில் காசின் சுதந்திரக் கிளர்ச்சியாளர்கள் எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை.

கடந்த கிறிஸ்மஸ் தினம் முதல் இராணுவத்தினர் காசின் கிளர்ச்சியாளர்கள் மீது கடுமையான தாக்குதல்களை நடத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக இரு தரப்பினருக்கும் இடையில் அவ்வப்போது மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இதற்கு முன்னர் 17 ஆண்டுகளாக யுத்த நிறுத்தமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பனிச்சரிவில் சிக்கி 4 பேர் உயிரிழப்பு

போர்ட்வில்லியம், ஜன.21

ஸ்கொட்லாந்தில் பனிச்சரிவில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காணாமற் போயுள்ளார்.

ஸ்கொட்லாந்தில் தற்போது கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள மலைகள் அனைத்தும்பனிக்கட்டியால் மூடிக்கிடக்கின்றன. எனவே, இங்கு வெளிநாட்டினர் பலர் பனிமலை ஏறும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் பைடியன் நாம் பியான் என்ற இடத்தில் உள்ள பனிமலையில் 6 பேர் கொண்ட குழுவினர் ஏறும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் 3 பேர் ஆண்கள், 3 பேர் பெண்கள். அந்த மலை சிகரத்தின் உச்சியில் சென்ற போது திடீரென பனிச்சரிவு ஏற்பட்டது. அதில் 6 பேரும் சிக்கினர்.

மீட்புப்படையினர் விரைந்து செயற்பட்டபோதும் 4 பேர் உயிரிழந்தனர். ஒரு பெண் மட்டும் படுகாயத்துடன் மீட்கப்பட்டார். பனிச்சரிவில் சிக்கிய ஒருவரை காணவில்லை. அவரை தேடும் பணி நடந்து வருகிறது.

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆரம்ப பிரிவு பகுதித் தலைவர்

## செல்வி தனலட்சுமி இராமலிங்கம் அவர்களின்

# சேவை நலன் பாராட்டு



### வலயக்கல்விப் பணிப்பாளரின் செய்தி

யாழ் .மத்திய கல்லூரியினது ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவராக இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் செல்வி தனலட்சுமி இராமலிங்கம் அவர்களுக்கு இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்வடைகின் றேன். ஏறத்தாழ 29 வருடங்கள் ஆசிரியப் பணியாற்றி ஓய்வு பெறும் ஆசிரியை செல்வி தனலட்சுமி அவர்கள் தனது கடமையில் பற்றுடன் செயற்பட்டவர். கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவராக கடமையாற்றி மத்திய கல்லூரியினது ஆரம்பப்பிரிவு சிறப்புடன் செயற்பட வழிவகுத்த வராவார். இவரது பணியினைப் பாராட்டுவதோடு ஓய்வு காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

செ.உ தயாகுமார் வ.க.ப.

### கோட்டக்கல்விப் பணிப்பாளரின் செய்தி

நயினை நாகபூசணி அம்மன் அருளால் வந்து உதித்த முத்தென மிளிரும் செல்வி தனலட்சுமி இராமலிங்கம் அவர்கள் பண்பிலே, உயர் குணத்திலே தனக்கென ஓர் இடத்தை பதித்த பெண் மணியாவார்.

தனது வாழ்வில் கல்விக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து கல்வியை உயர்த்திய திலகமாவார்.

இவரின் ஓய்வு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

இவர் ஓய்வு காலத்தில் எல்லாச் சிறப்புக்களையும் பெற்று நிறைவான வாழ்வை பெற எல்லாம் வல்ல நாகபூசணித் தாயை இறைஞ்சுகின்றேன்.

சு.சண்முககுமார்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணக் கல்விக் கோட்டம்.

### ஆசிரிய வட்ட தலைவரின் செய்தி

மத்திய கல்லூரியின் வளர்ச்சிக்கு தனது சேவைக்காலத்தின் 23 வருடங்களை வழங்கியுள்ளார் செல்வி தனலட்சுமி இராமலிங்கம். பாடசாலையின் வளர்ச்சிக்கு அதன் ஆரம்பப்பிரிவு முக்கியமான ஒன்றாகும். எமது பாடசாலையின் ஆரம்பப்பிரிவை கடந்த 12 வருடங்களாக பொறுப்பேற்று திறம்பட நடத்தி வந்துள்ளார். மேலும் இவர் அர்ப்பணிப்புடனும் விசுவாசத்துடனும் தொழிற்பட்டதுடன் பரஸ்பர நட்புணர்ந்த புரிந்துணர்வை கட்டி வளர்க்க கூடியவராகவும் தேவைக்கு ஏற்ப தகுந்த உத்திகளை கையாளக்கூடியவராகவும் விளங்கிய ஓர் ஆசிரியையும் உப அதிபரும் ஆவார் என்பதை எமது ஆசிரிய வட்டம் சார்பாக கூறி கொள்ள விரும்புகின்றேன். எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவி ஓய்வு பெறும் செல்வி தனலட்சுமி இராமலிங்கத்தினது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

த.தவசேகர் (தலைவர்)
மத்திய கல்லூரி ஆசிரிய வட்டம்.

| | |
|---|---|
| பெயர் | - செல்வி தனலட்சுமி இராமலிங்கம் |
| பிறப்பிடம் | - நயினாதீவு |
| பிறந்த திகதி | - 1953.01.20 |
| ஆரம்பக்கல்வி | - நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாசாலை, ஐந்தாம் தர புலமைப்பரிசில் தேர்ச்சி |
| இடைநிலைக் கல்வி | - வேலணை மத்திய கல்லூரி |
| உயர்கல்வி | - பல்தொழில் நுட்ப நிறுவனம் கோக்குவில். தேசிய கணக்கியல் தராதரம் 1974 - 1976<br>யாழ்/ பல்கலைக்கழகம் வணிகமாணி சிறப்பு (2ஆம் வகுப்பு) 1978 - 1982<br>பட்டப்பின் கல்வி டிப்ளோமா 1991 - 1993 |

ஆசிரிய சேவை முதல் நியமனம் - 05.08.1984

I. கு/ஹிஸ்புள்ளா முஸ்லிம் மகாவித்தியாலயம் - 05.08.1984 - 05.04.1990

II. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - 06.04.1990 -20.01.2013

I. 06.04.1990 - 10.08.2001 க.பொ.த. உயர்தர கணக்கியல், பொருளியல் ஆசிரியர்,

II. 11.08.2001 - 20.01.2013 வரை பகுதித்தலைவர் (ஆரம்பப்பிரிவு)

### கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி

அரசபணியில் உள்ள ஒருவரது வாழ்வில் சேவைக்காலமும் ஓய்வுக் காலமும் அமைந்துவிடுவது தவிர்க்க முடியாவிட்டாலும் நிறைவாகப் பணியாற்றிய மனப்திருப்தியோடு நிறுவனத்தின் வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்து சேவையாற்றியவர்களது ஓய்வு சற்று வித்தியாசமானதுதான். முடியுமானவரை சேவையாற்றினோம் என்ற திருப்தி இருந்தாலும் நிறுவனத்துடன் ஒன்றிணைந்த உறவு பிரிவின்போது வாட்டுதையும் அவரது பிரிவு மற்றவர்களது மனங்களை வாட்டுத்தையும் பலரது அனுபவத்தின் வாயிலாக நான் அறிவேன். எமது கல்லூரியின் ஆசிரியராக உப அதிபராக கடமையாற்றி இன்று அறுபது அகவைகாணும் செல்வி தனலட்சுமி இராமலிங்கம் தனது வாழ்வில் பெரும்பகுதியை சேவைக்காக அர்ப்பணித்தவர் கல்விச் சேவையை தனது வாழ்வாக நினைத்து வாழ்ந்தார். நேர்மை, கட்டுப்பாடு, ஒழுக்கம், நேரம் தவறாமை, கண்டிப்பு, அன்பு என்பவை அவர் அணிந்த அணிகலன்கள். இவரது சேவையை இவை அழகு படுத்தின. இவரது சிறந்த நிர் வாகத்திறத்தால் கல்லூரி ஆரம்பப் பிரிவு சிறப் புற்றது. புலமைப் பரிசுப் பெறு பேறுகள் உயர்ச்சிபெற்றது. இவரது அன்பிலும் வழிகாட்டலிலும் உருவான மத்தியின் மைந்தர்கள் உயர்பதவிகளை வகித்தும், நல்ல மனிதர்களாகவும் இருந்து நற்பணியாற்றுகிறார்கள். இன்று மணிவிழாக் காணும் செல்வி தனலட்சுமி இராமலிங்கம் என்றும் இறை அருள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்தி சிறந்த ஒத்துழைப்புடன் பணியாற்றியமைக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

சி. க. எழில்வேந்தன் அதிபர்

### மத்திய மழலைகளின் நல்வழி காட்டி

செல்வி தனலட்சுமி இராமலிங்கம் அவர்கள் யா/மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவிற்குப் பகுதித்தலைவராக அரும்பணியாற்றி 20.01.2013 இலிருந்து அரச கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றார். கல்விச் சேவைக்கெனத் தன்னையே அர்ப்பணித்துச், சிறந்த தலைமைத்துவப் பண்புகளுடன் சேவையாற்றியவர்.

29 ஆண்டுகளாக் கல்விச் சேவையில் 12 ஆண்டுகள் ஆரம்பக் கல்வி விருத்திக்காகப் பொறுப்புணர்வுடன் செயற்பட்டவர். கல்வித்தரமும் ஆளுமை விருத்தியும், மாணவர்களிடையே வளர்க்கப்பட வேண்டும் என்ற இலக்குடன் பணியாற்றி வெற்றி கண்டவர்.

இவரின் சேவைக் காலத்தில் சிறந்த புலமை பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்க விடயம். இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் அக்கறை காட்டி விளையாட்டு,சிறுவர் நாடகம் போன்ற துறைகளில் பல பரிசில்களை பெற ஊக்கமளித்தவர். பொருளாதார, கல்வித்தரம் நலிவடைந்த குடும்பப் பிள்ளைகளின் சிறந்த எதிர்காலம் அமைந்திட வேண்டியே அதிகவசியமானது என்ற நோக்கோடு செயற்பட்டு அப்பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்தியவர்.மத்திய கல்லூரியின் ஆரம்பக்கல்வி வரலாற்றில் இவரது சேவைக்காலம் நல்லதோர் அத்தியாயம் என்றும் நிறைவு கூரத்தக்கது.நயினை அம்மனின் மேல் பக்தி கொண்ட இவர் இறைபக்தியுடன் கடமை புரிந்தவர். இவரின் ஓய்வு காலத்தில் பல பணிகளைப் புரிந்து பல சிறப்புகளையும் பெற்று சந்தோசமாக வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

பூ.குகதாசன்
உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு நிலை)
யாழ். கல்வி வலயம்.

(சி/5754) 45.8.7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

(01)

**முன்னேறத் தேவையான முக்கிய குணங்கள்**

பன்னிரண்டு வயதுப் பெண்ணை ஒரு பையன் துரத்திக் கொண்டிருந்தான், இதைக் கண்ட பெண்ணின் தந்தை அந்தப் பையனைப் பார்த்து''ஏன் துரத்துகிறாய், அவளை?'' என்று கேட்டார்.

''என்னைக் கிள்ளிவிட்டாள்!''

தன் பெண்ணை நிறுத்திக் கேட்டார்''

''ஏன் அம்மா அவனைக் கிள்ளினாய்?''

அங்குமிங்கும் பார்த்துவிட்டு அவள் சொன்னாள் ''அவன் என்னைத் துரத்த வேண்டும் என்பதற்காகத்தான்!''

சிலர், சில விடயங்களைத் தெரிந்து உணர்ந்து காரியத்துடன் செய்கிறார்கள். சிலர், ஏன் விஷயங்கள் இப்படி நடக்கின்றன?'' என்ற உணர்வு ஏதுமின்றிக் காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

''வாழ்க்கையை நாம் தெரிந்துதான் வாழ்கிறோமா? தெரிந்து உணர்ந்து வாழ்கிறோமா? அல்லது ஏதோ நேர்கிற சம்பவங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் வாழ்வை ஓட்டிக் கொண்டிருக்கிறோமா? சிந்தனைக்குரிய கேள்வி; நம்மைச் சுய சோதனைக்குட்படுத்தும் கேள்வி: கத்தோலிக்கப் பாதிரியார்களும் ஆண்டுக்கொருமுறை தனி இடத்திற்குச் சென்று சுயசோதனை செய்து கொள்வதை Retreat என்று சொல்லுவார்கள். அப்படி அடிக்கடி நாமும் சுயசோதனை செய்து கொள்வது நல்லது.

எனது வாசகர் ஒருவர் எழுதி இருந்தார், வாழ்வை நாம் விரும்பும் வண்ணம் அமைத்துக் கொள்ள ஒரு பத்துக் குணங்கள் மிகவும் அவசியம் என்று சொல்வீர்களே? அப்படியானால் அவற்றைக் குறிப்பிட்டு எழுத முடியுமா? என்று கேட்டிருந்தார்.

அப்போது நான் சுயசோதனையில் இறங்கினேன். என் அனுபவங்களை, உலக நடப்புக்களை, நான் படித்தவற்றை, வீர வரலாறுகள் காட்டும் உண்மைகளைப் பற்றி யோசித்துப் பார்த்தேன்.

ஒரே வாக்கியத்தில் கூற வேண்டுமானால், ''வாழ்வின் தாற்பரியமே 'நல்லெண்ணம்' என்ற ஒரு சொல்லில் அடங்கி இருக்கிறது'' என்று நிச்சயத்துடன் கூறலாம். அன்றிலிருந்து இன்றுவரை எல்லா மதங்களும் உபதேசிக்கும் வேத நூல்களின் சாரத்தை நாம் பிழிந்தெடுத்தோமானால் மிஞ்சும் ஒரே வார்த்தை''அன்பு'' என்ற ஒன்றுதான். அன்பின் மாற்றுப் பெயர் தான் நல்லெண்ணம்; அன்பின் துவக்க இடம்தான் நல்லெண்ணம்.

ஆனால், அன்பு என்பது பல வடிவங்களை எடுக்கிறது. அன்பு காரணமாகவே தந்தை ஆத்திரமடைந்து மகனிடம் ஏகமாக இரைந்து கத்துவதைக் காண்கிறோம். சமுதாயத்தின்மீது உள்ள அன்பு காரணமாகவே காந்திஜீ தம்மை வருத்திக் கொண்டார். உண்ணாவிரதம் மேற்கொண்டார். பசியால் வாடும் குழந்தையிடம் உள்ள அன்பு காரணமாக ஏழைத்தாய் திருடவும்கூடும்.

எனவே அன்பு என்பது நமது வாழ்க்கையின் ஒவ்வொரு செயலுக்கும் அடிப்படையாக அமைய வேண்டும் என்று கூறலாமேயொழிய அன்பு மட்டுமே போதாது. அன்பை மட்டும் உணர்ந்தும் உணர்த்திக் கொண்டும் இருந்தால் வாழ்க்கையில் முன்னேறிவிட மாட்டோம். வேறு சில குணநலன்களும் தேவை; அவை என்ன?

நான் வாழ்வுக்கு வேண்டிய முக்கிய குணங்களைப் பற்றி இப்படி யோசித்துக் கொண்டிருந்த போது என் நண்பர் பரஞ்சோதி வந்தார். பரஞ்சோதி மனவியல் படித்தவர். பரஞ்சோதி கூறினார்: மிகவும் படித்த அமெரிக்கரை ஒரு செமினாரின் (கருத்தரங்கு) போது சந்தித்தேன். இதே கேள்வியைக் கேட்டேன். அவர் கூறினார்: ''வாழ்வில் ஒரு மனிதனுக்கு Integrity வேண்டும். சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவான் என்று பிறரால் போற்றப்படும் குணங்களை அவன் வளர்க்க வேண்டும்.''

சிறிது நேரம் எங்களிடையே அமைதி நிலவியது. நாங்கள் இருவரும் அவர் சொன்ன அந்த உண்மையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தோம். கொடுத்த வாக்குறுதியை மீறாத வாய்மை அவசியம்தான். ஆனால் வாழ்க்கை வளம்பெற அதுமட்டும் போதுமா?

மீண்டும் பரஞ்சோதி பேசத் தொடங்கினார். ''இந்த விஷயங்களைப் பற்றி நானும் தீவிரமாக யோசித்திருக்கிறேன். எல்லாவற்றையும் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் மூன்று விஷயங்களைக் குறிப்பிடுவேன். அறிவு, மனோபாவம், செயல்.''

எனக்கு உற்சாகம் பிறந்தது. ஆங்கிலத்தில் இதையே Awareness, Attitude and Action என்று கூறலாம்.

விஷயங்கள் ஏதும் தெரியாதபோது நமக்கு ஒரு பயம் ஏற்படுகிறது. நமக்குப் பரிச்சயமில்லாத ஊருக்குப் போகும்போது தெரியாத இடத்துக்கு நாம் போகும் போது ஒரு வகை தயக்கம். அச்சம் ஏற்படுகிறது. அவர்கள் பேசும் போது ஒருவகை பயம் ஏற்படுகிறது. நமக்குப் புரியாத ஒரு யந்திரத்தில் கோளாறு ஏற்படும்போது ஏன் என்ன என்று புரியாததினால் நமக்கு ஒரு கிலேசம் ஏற்படுகிறது.

அறிவுதான் நமது பயத்தைப் போக்குகிறது. ஊரைப் பற்றிய அறிவு நமக்கு வந்தவுடன் அவற்றை எளிதாக நாம் கையாளுகிறோம். அறிவு நமக்குத் தைரியத்தைக் கொடுக்கிறது. ஒரு தெளிவைத் தருகிறது. மருத்துவம் கிராமத்தில் பரவாதபோது காலரா, பிளேக் என்றால் மக்கள் பயந்தார்கள். ஆங்கில மருத்துவ அறிவும் நம் பயத்தைப் போக்கிவிட்டது. அதனால்தான் அறிவை மகத்தான சக்தி என்று குறிப்பிடுகிறார்கள். வாழ்வுக்கு இது அவசியம்.

இரண்டாவது நமது மனோபாவம். ஒரு விஷயத்தை நம்மால் முடியாது என்று அழுது கொண்டே இருந்தோமானால் - நம் தலையில் கட்டிவிட்டார்களே என்று நொந்துகொண்டே செய்தோமானால் அது தோற்றுப் போகும் சாத்தியம் தொண்ணூறு சதவீதத்துக்கு மேல். மாறாக, ''இது என்ன பிரமாதம்! வெளுத்துக் கட்டிவிடலாம்!'' என்று உற்சாகமாக ஊரைக் கூட்டினோமானால், காரியம் துவங்குவதற்கு முன்பே வெற்றியாய் அமையும்!.

பி.சி.கணேசன்  (தொடரும்)

# கலை, கலாசாரங்களை பேணுவதில் மக்கள் ஒரே முகமாகவே உள்ளனர்

## ஆனையிறவில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் யாழ். கட்டளைத் தளபதி உரை

தென்மராட்சி ஜன.21

நாட்டில் வாழும் மக்கள் மதத்தால் வேறுபட்டாலும், கலை கலாசாரங்களைப் பேணிப் பாதுகாப்பதிலும், அதனை வளர்ப்பதிலும் ஒரே முகமாக உள்ளமை வரவேற்கத்தக்கது.

ஏனெனில் தமிழர் திருநாளாக தைப்பொங்கல் இருந்தாலும் கடந்த 2009ஆம் ஆண்டு தொடக்கம் இன,மத வேறுபாடின்றி அனைத்து இடங்களிலும் தைப் பொங்கல் விழா சிறப்பாக நடத்தப்பட்டது.

ஆனையிறவில் நடைபெற்ற பொங்கல் விழாவில் சுமார் 12 ஆயிரம் மக்கள் கலந்து கொண்டமை எனது வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாகும். ஆனையிறவில் நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் வாகனங்களில் வந்த மக்கள் இன, மத வேறுபாடின்றி கலந்து கொண்டமை நாம் அனைவரும் இலங்கையர் மட்டுமல்ல ஒரு தாய் மக்கள் என்ற உணர்வையும் எமக்கு ஏற்படுத்தியது.

இவ்வாறு சாவகச்சேரி சிவன் கோயில் வீதியிலுள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத் துருசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது–:

குடாநாட்டில் பணியாற்றும் படையினர் தமிழர் கலாசாரங்களை மதித்து அவர்களுடன் இணைந்து விழாக்களை நடத்தி வருகின்றனர். இது மக்களுக்கும் படையினருக்குமிடையில் உள்ள ஒற்றுமையான உறவைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது.

நாட்டிலுள்ள அனைவரும் தமது மதத்தை மதிக்கும் அதே வேளையில் ஏனைய மதங் களையும் மதிக்கின்றனர் என்பதைக் கடந்த காலங்களில் குடாநாட்டு மக்களும் படையினரும் இணைந்து பல்வேறு விழாக்களை சிறப்பாக நடத்திவருகின்றமை ஊடாக உணர முடிகிறது.

சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடு காட்டாமல் அனைவரும் மத விழாக்களை ஒன்றிணைந்து நடத்துவது எமக்கு பெருமை தருகிறது.

இவ்வாறான நிகழ்வுகள் தெற்கு, வடக்கு பிரதேச மக்கள் சாதி, மத, பேதம், இன, மத வித்தியாசம் இல்லாமல் ஒரே இன மக்களாக வாழ முடியும் என்ற நம்பிக்கையை எம்மத்தியில் ஏற்படுத்திவருகின்றது.

கடந்த 30 வருட காலத்தில் போரில் அகப்பட்டு பல்வேறு துன்ப, துயரங்களுக்கு ஆளான மக்களுக்கு தொடர்ந்து வரும் வாழ்க்கைப் பயணம் நம்பிக்கையூட்டக்கூடிய நிலையை உருவாக்க படையினர் பெருமளவில் உழைத்து வருகின்றனர். எதையும் சாதகமாக சாத்தியமாக சிந்தித்தால் ஒரே நாட்டில் ஒரு தாய் பெற்ற மக்களைப் போல வாழ முடியும்.

பொருளாதார அபிவிருத்தி, கலை, கலாசார, சமயம் அனைத்து சௌகரியங்களையும் வெளிப்படுத்தும் இவ்வாறான விழாக்களை நடத்த அனைவரும் முன்வர வேண்டும் - என்று கூறினார். (ம-9)



வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சியில் கலந்து கொண்ட சிறார்கள், பெற்றோர் ஆசிரியர்களுடன். (ம-50)

# சிறந்த விளையாட்டு வீரனால்தான் கல்வியிலும் சாதனை புரியமுடியும்

## வலி.வடக்கு பிரதேச உறுப்பினர் உரை

விளையாட்டுத் துறையில் ஆக்கமும் ஊக்கமும் உள்ள சிறந்த விளையாட்டு வீரனே கல்வியிலும் சாதனையாளனாகத் திகழ்வான். சிறந்த விளையாட்டு வீரனுக்குத்தான் இலகுவில் எதையும் சாதிக்கின்ற மனோ வலிமை ஏற்படும்.

இவ்வாறு தெரிவித்தார் சுன்னாகம் லயன்ஸ் கழகச் செயலாளரும் வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினருமாகிய சி.ஹரிகரன்.

இளவாலை புனித யூதாததேயு ஆலய இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்ட 2013 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றும்போது மேலும்தெரிவித்ததாவது:-

இளமை, துடிப்பு , உத்வேகம், ஆளுமை, புத்திசாதுரியம், தலைமைத்துவம், விவேகம், சுறுசுறுப்பு போன்ற பண்புகளை ஒரு மனிதனுக்கு ஏற்படுத்துபவை விளையாட்டுக்களே. சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ்பவனால்தான் கல்வியிலும் சாதனையாளனாகத் திகழ முடியும்.

ஒரு சிறந்த விளையாட்டு வீரன், தான் எண்ணும் எந்தக் காரியங்களையும் இலகுவில் நிறைவேற்றிக்கொள்வான். தான் மேற்கொண்ட எந்தக் காரியங்களிலும் வெற்றி காண்பான். நிர்வாகத்துறை என்றாலும்சரி வேறு எந்தத் துறைகள் என்றாலும் சரி சிறப்பாக நெறிப்படுத்தும் தலைமைத்துவத்தை இந்த விளை யாட்டுக்களே வழங்குகின்றன.

உடல் ஆரோககியத்தையும் உடல் நலத்தையும் ஒரு மனிதனுக்கு ஏற்படுத்துபவை விளையாட்டுக்களே. விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்கள்- விளையாட்டுக்கள், உடற்பயிற்சிகள் போன்றவற்றை ஒழுங்கு நியமப்படி மேற்கொள்பவர்கள் நீரிழிவு, இரத்த அமுக்கம், கொலஸ்ரோல், வாதம் போன்ற நோய்களில் இருந்து விடுபட்டு சுகதேகிகளாக வாழ முடியும்.

இளமையில் துடிப்பும் உத்வேகமும் கொண்டு சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ்ந்தால் அவன் பிற்காலத்தில் ஒரு கடின உழைப் பாளியாகத் திகழ்வான். மாறாக இளமையில் சோம்பேறித்தனம் கொண்டு இருப்பவர்கள் முதுமையில் மிகவும் இக்கட்டான நிலைக்கு உட்படுவர்.

இளவாலை புனித யூதாததேயு இளைஞர் மன்றத்தால் இவ்வாறான ஒரு விளையாட்டு நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமை இளைஞர்கள் மத்தியில் ஒரு சிறந்த உறவுப் பாலத்தையும் ஒற்றுமையையும் அவர்களின் திறன்களையும் வெளிப்படுத்துகின்ற ஒரு களமாகவும் அமைந்துள்ளமை பாராட்டத்தக்கது, வரவேற்புக்குரியது என்றார். (ம)

# இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தருக்கு பிரிவுபசார விழா

தென்மராட்சி, ஜன.21

சாவகச்சேரி நகரசபையில் கடமையாற்றி வேறு பதவிகளுக்கு நியமனம் பெற்றுச் சென்ற இரு உத்தியோகத்தர்களுக்கான பிரிவுபசார விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு சபைத் தலைவரும் நகர சபையின் செயலாளருமாகிய சு.புத்திரசிகாமணி தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக நகர சபையின் தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளை கலந்துகொண்டார்.

சபையில் முகமைத்துவ உதவியாளராக கடமையாற்றி ஆசிரிய நியமனம் பெற்ற எஸ்.சத்தியன், நகரசபையின் பொது நூலகத்தில் நூலகராக கடமையாற்றி அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமனம் பெற்ற எஸ்.மதிவதனி ஆகியோருக்கு பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

நகரசபைத் தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளை, நிர்வாக அலுவலர் திருமதி ந.கணேசலிங்கம், வருமானப் பரிசோதகர் சொ.சிவசுதன் உட்பட பலர் அவர்களது சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

இரு உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர் நலன்புரி சங்கத்தின் சார்பிலும் உத்தியோகத்தர்கள் சார்பிலும் கௌரவிப்புகள் இடம்பெற்றன. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பணியாற்றிய தனிநாயகம் அடிகள்

தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை பெப்ரவரி மாதம் தமிழகத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்குத் தேவையான தகவல்களைத் திரட்டுவதற்கென தமிழகத்தைச் சேர்ந்தவரான வண. அமலன் அடிகளார் நூற்றாண்டு விழாவை மேற்கொள்ளவுள்ளதன் நோக்கத்தை உதயன் வாசகர்களுக்காகப் பகிர்ந்து கொண்டார்.



வண. அமலன் அடிகளார்



தனிநாயகம் அடிகளார்

கிறிஸ்தவ துறவி என்பதற்கு அப்பால் தமிழ் மொழியின் சிறப்புக்கும் வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றியவர் என்பதாலேயே தனிநாயகம் அடிகளின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு நாங்கள் ஏற்பாடுகள் செய்துள்ளோம்.

தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தவும் ஆங்கிலேயர்கள் மற்றும் பிறமொழி அறிஞர்கள் தமிழைக் கற்று அதன் பெருமை குறித்த ஆய்வுகளைச் செய்யவும் தமிழ் மொழிபற்றி ஆங்கிலத்திலும் ஆய்வுகளை மேற்கொள்ளவும் அடிகளார் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டார்.

எந்த ஒரு தமிழ்த் துறவியும் செய்யாத பணியை அவர் தமிழ் மொழிக்குச் செய்துள்ளார். இதனாலேயே அவரது நினைவு நூற்றாண்டைக் கொண்டாட முடிவு செய்தோம்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி தமிழ்நாடு சென்னை லயோலாக் கல்லூரியில் விழா ஆரம்பமாகிறது. தஞ்சாவூர், திருச்சி, தூத்துக்குடி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் போன்ற நகரங்களிலும் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை நடத்த எண்ணியுள்ளோம். சென்னையில் அடுத்த செப்ரெம்பரில் ஒரு முழுமையான நிறைவு விழாவும் நடத்தவுள்ளோம்.

இது முழுக்க முழுக்க பல்கலைக்கழக துணைவேந்தர்கள் பேராசிரியர்கள் மற்றும் அறிஞர்களைக் கொண்டதான ஒரு விழாவாகவே இடம்பெறும். அரசியல் கலப்புக்கள் சேர்ந்ததாக இது அமையாது. தமிழக ஆளுநர் மட்டுமே சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளக் கேட்கப்படுவார். ஓர் அரசியல் கட்சி விழாவாக அமையாதவாறு சம்பந்தப்பட்டவர்கள் ஏற்பாடுகளை மேற்கொள்வார்கள்.

சென்னை லயோலா கல்லூரியில் தனிநாயக அடிகள் செம்மொழி ஆய்வு இருக்கை ஏற்படுத்தல் இந்த விழாவின் முக்கிய நோக்கம்.

அடிகளாரின் NATURE IN ANCIENT TAMIL POETRY,-TAMIL CALTURE, போன்ற அவரது ஆங்கில நூல்களைத் தமிழாக்கம் செய்து வெளியிடுதல், சென்னை பல்கலைக் கழகத்தில் அறக்கட்டளை நிறுவி ஆண்டுதோறும் அடிகளார் பெயரில் சொற்பொழிவுகளை நிகழ்த்த ஏற்பாடு செய்தல் என அடிகளார் குறித்தவை பற்றி மக்கள் தெரிந்து கொள்ளக் கூடியதாக முன்னெடுக்கப்படும்.

அவ்வை நடராஜன், முனைவர் சாரதா நம்பியாரூரன், பேராசிரியர் நித்தியகல்யாணி, கவிக்கோ அப்துல் ரஹ்மான் போன்றவர்கள் இந்த விழா தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர். குறிப்பாக கல்லூரிப் பேராசிரியர்கள், மாணவர்கள் இதற்கு ஒத்துழைப்பளிக்கத் தயாராக உள்ளனர். முனைவர் சுந்தரமூர்த்தி உட்பட பல்கலைக்கழக துணைவேந்தர்கள், பேராசிரியர்களை உள்ளடக்கியதான ஒரு அமைப்பு உள்ளது.

இப்போது உலகத் தமிழ்த் தூதர் தனிநாயகம் அடிகளார், 'தமிழ் வளர்த்த தனிநாயகம் அடிகளார்' ஆகிய நூல்களையும் இந்த விழாவின் போது வெளியிடவுள்ளேன். அதற்காக இப்போது அடிகளார் சார்ந்த அனைத்து விடயங்களையும் சேகரித்து வருகின்றேன். நெடுந்தீவில் அவர் வாழ்ந்த இடம் அவருடன் தொடர்புடையவர்கள் மற்றும் ஊர்காவற்றுறை கரம்பொன் பகுதிகளிலும் அவரது செயற்பாடுகள், கல்வி கற்ற பாடசாலை போன்றவற்றைக் கொண்ட குறும்படங்களைத் தயாரிக்கவும் முயற்சியெடுத்து வருகின்றேன். அவர் தொடர்பான புகைப்படங்களையும் சேகரித்து வருகின்றேன். முடிந்த வரை அடிகளார் குறித்த அனைத்து விடயங்களையும் உலக மக்கள் தெரிந்து கொள்ளக் கூடியதாக வெளியிட வேண்டும் என்றே முயற்சிக்கின்றேன். பெற்றோர், சகோதரர்கள் தொடர்பான விவரங்களையும் சேகரித்துள்ளேன். அவர் படித்த ரோம் உர்பன் பல்கலைக்கழகம், தமிழ் இலக்கியக் கழகத்தை தொடங்கிய முதல் இடம் போன்றவையும் குறும்படத்தில் இடம்பெறும்.

தமிழகம் தூத்துக்குடி மாவட்டம் புன்னைக் காயல் எனது சொந்தக் கிராமம். வரலாற்றுப் புகழ்மிக்க இடம் தமிழ் எழுத்துக்களில் முதன் முதல் அச்சேறிய தம்பிரான் வணக்கம் (1578), கிறிசித்தியானி வணக்கம் (1589) கொம்பெசியோ நாரியோ (1580 ஒரு போர்த்துக்கேய நூல்), அடியார் வரலாறு (1586) ஆகிய நூல்களை இயற்றிய அன்டிரீக்கி பாதிரியார் வாழ்ந்து பல காலம் பணி செய்து உயிர்நீத்த இடமும் இதுதான். அடியார் வரலாறு அனேகமாக புன்னைக் காயலில் தான் வெளியானது என்பது தனிநாயகம் அடிகளார் போன்ற பல அறிஞர்களதும் கருத்தாகும்.

தனிநாயகம் அடிகள் தூத்துக்குடியில் நிறுவிய தமிழ் இலக்கியக் கழகம் தற்போது திருச்சியில் இருந்து செயற்பட்டு வருகின்றது. 1987 முதல் அதன் செயலாளராக நான் பணியாற்றுகின்றேன். தூத்துக்குடி மறை மாவட்டக் குருவாக இருந்தாலும் அவரது பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பதில் ஆர்வமாக இருக்கின்றேன். தனிநாயகம் அடிகளார் இதழியல் கல்லூரி எனது முயற்சியினால் நிறுவப்பட்டுள்ளது. சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் அடிகளாரின் பெயரில் சொற்பொழிவு நிகழ்த்த அறக்கட்டளை அமைந்துள்ளது.

முன்னாள் துணை வேந்தர்கள், பேராசிரியர்கள் தவிர தமிழக காவல்துறை முன்னாள் அதிகாரி ஏ.எகன் அலெக்சாண்டர், தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன், கலை இலக்கியப் பெருமன்றத் தலைவர் பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன், செம்மொழி ஆய்வு நிறுவனப் பதிவாளர் முனைவர் மு.முத்துவேல், கிறிஸ்தவக் கல்லூரி, லொயலாக் கல்லூரி, தமிழ்த்துறைத் தலைவர்கள், பொதுவுடைமைக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சி.மகேந்திரன் போன்றவர்கள் தனிநாயகம் அடிகளாரின் நினைவு விழா சிறப்பாக நடைபெற உதவ முன் வந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவை நடத்த வேண்டும் என்ற ஆர்வம் காணப்படவில்லை. தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக மட்டுமன்றி தமிழ் மக்களின் உரிமைக்காகவும் சத்தியாக்கிரகப் போராட்டங்களிலும் கூட அவர் கலந்து கொண்டுள்ளார். அப்போது பிரதமராக இருந்த பண்டாரநாயக்கா கூட சத்தியாக்கிரகத்தின் போது அடிகளாருக்கு எந்த வித இடையூறுகளும் விளையாமல் பாதுகாக்க வேண்டும் என அறிவுறுத்தியதாக அறிகின்றேன்

இது குறித்து யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளில் உள்ள பிரமுகர்களுடன் தொடர்பு கொண்டுள்ளேன். நெடுந்தீவில் அடிகளாரது உருவச்சிலை அமைந்திருப்பது ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. அடிகளாருக்கு விழா எடுக்க வேண்டும் என்ற உணர்வு வருவது போல் தெரிகின்றது.

நான் தீவுப் பகுதியில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை பகுதிகளுக்குச் சென்றிருந்தேன். வீடுகள் சேதமடைந்து மக்கள் நடமாட்டம் குறைவாகவே உள்ளது. இன்னமும் பயங்கரமாகவே காணப்படுகின்றது. நெடுந்தீவுக்கான படகுகளில் நிறையவே மக்கள் நெருங்கியடித்துக் கொண்டு செல்வதைப் பார்த்தும் அனுபவித்தும் கொண்டேன், இது வேதனை தருகிறது. இதற்கான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். சுமுகமான சூழலில் மக்கள் வாழக் கூடிய நிலைமை தோற்றுவிக்கப்பட வேண்டும். ★

■ சந்திப்பு : லக்ஸ்மன்

# வெங்காயப் பயிரைத் தாக்கும் ஊதாப்புள்ளி நோய்

இந்த மாதத் தொடக்கத்தில் கிடைக்கப்பெற்ற அதிகூடிய மழையைத் தொடர்ந்து வெங்காயப் பயிர்கள் ஊதாப்புள்ளி நோய்த் தாக்கத்தால் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. வளி மண்டலத்தில் அதிகளவு சாரீரப்பதனும் குறைந்த வெப்பநிலையும் நிலவும் மாதங்களான தை, மாசி மாதங்களில் இந்த நோய்க் காரணியானது வெங்காயப் பயிர்களை தாக்கும். தாக்கம் கூடும் போது வெங்காய குமிழ்கள் அழுகிவிடுவதற்கும் இடமுண்டு.

நோய் பாதிப்புக்குட்பட்ட பயிர்களில் கூடியளவு உற்பத்தி இழப்பு ஏற்படுவதுடன் விதை நோக்கத்துக்காக சேமிக்கும் போது சேமிப்பு களஞ்சியங்களில் குமிழ் அழுகலை ஏற்படுத்தும். இதனால் அடுத்த போகத்துக்குத் தரமான விதை வெங்காயத்தை வழங்க முடியாத நிலை ஏற்படும். அத்துடன் எல்லா இடங்களிலும் வெங்காயப் பயிர்கள் காணப்படுவது இந்த நோய்த் தாக்கத்துக்கு ஏதுவாகும்.

### நோய் அறிகுறிகள்

வெங்காய தாள்களில் சிறிய சிறிய வெள்ளை நிற நீர்மயமான புள்ளிகள் தோன்றும். இவை சிறிது, சிறிதாகப் பெருத்து நீள்வட்ட வடிவமாக மாறும். இறுதியில் கபில நிறம் கலந்த ஊதா நிறமாக மாறுகின்றன. நோய்த் தாக்கம் அதிகரிக்கும்போது வெங்காய தாள்கள் சாம்பிராணி குச்சி எரிந்தது போன்ற தோற்றமாகக் காணப்படும்.

### கட்டுப்பாடு

நடுகைக்குப் பயன்படும் விதை வெங்காயமானது நோய்த் தொற்று அற்றதாக இருக்க வேண்டும்.

மழை காலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் போது உயர் பாத்திகளில் குமிழ்களை நடுவதுடன் நீர்வடிப்பை ஏற்படுத்தல்.

பசளை பாவனையின்போது யூரியா, அமோனியம், சல்பேற் பசளைகளை தேவையான அளவில் பாவித்தல் வேண்டும்.

இந்த நோய்க்குரிய பங்கசு வித்திகள் மண்ணில் நான்கு வருடங்கள் வரை வாழக் கூடியன. எனவே பயிர்ச் சுழற்சியை கடைப்பிடிக்க வேண்டும். கீழ் குறிப்பிடப்படும் பங்கசு நாசினிகளை [illegible] அளவில் பாவிக்க வேண்டும்.

| பங்கசுநாசினியின் இரசாயனப் பெயர் | பங்கசு நாசினியின் வர்த்தகப் பெயர் |
|---|---|
| குளோரோதலனில் (500g/1sc) | டைக்கோனில் sc, றொனில் 30 மில்லிலீற்றரை 10 லீற்றர் நீரில் கலக்கவும். |
| கொப்பர் (50%WP) | பெரனொக்ஸ், சம்பியன் 40 கிராமை 10 லீற்றர் நீரில் கலக்கவும். |
| மங்கசெப் (80%WP) | மங்கசெப், டைதேன் M45 மன்சற், பொலிசற், கேலிஸ் அக்றோகெயர் மங்கசெப் மங்கசெப் 80% |
| மனெப் (80%WP) | பொலிராம் எம், சினெப் WP80% மனேராம் மனெப் 80WP 20 கிராமை 10லீற்றர் நீரில் கலக்கவும். |
| புறோப்பனிப் (40%WP) | அன்ரக் கோல் 20 கிராமை 10 லீற்றர் நீரில் கலந்துவிசிறவும். |
| பைராகுளோஸ்ரோபின் (250g/1EC) | கப்றியோ 8மில்லிலீற்றரை 10 லீற்றர் நீரில் கலந்து விசிறவும். |
| ரிபியூகொனசோல் (250g/1EW) | பொலிகர் 250EW, ஓறியஸ் 25EC 3.5மில்லிலீற்றரை 10 லீற்றர் நீரில் கலந்து விசிறவும். |

ச.பாலகிருஷ்ணன், பிரதி விவசாயப் பணிப்பாளர் விரிவாக்க அலுவலகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013 அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் சவாலான ஆண்டு

மூலம்: சுனந்த தேசப்பிரிய-(ராவய)
தமிழில்: வி.எஸ்.ரி.

அதிகரித்து வரும் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியிலான சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ள நிலையிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு 2013 புத்தாண்டில் கால் பதிக்கிறது. ஆனால் ராஜபக்ஷ குழுமமோ இத்தகைய சிக்கல்கள் எதனையும் கணக்கில் எடுக்காது, இந்நாட்டை முற்று முழுதாகத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்து நிர்வகிக்கும் நோக்குடன், எதிர்ப்புக்களையும் சவால்களையும் அடக்கி ஒடுக்கி அச்ச மூட்டும் போக்கிலேயே தனது அரசியல் பயணத்தைத் தொடருகிறது.

அதே வேளை, மற்றொரு புறம் நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியோ, தலைதூக்க இயலாத அளவுக்கு நாறிப்போன அரசியல் நிலைக்குள் சிறைப்பட்டு நலிவுற நேர்ந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவோ, தமது கட்சிக்கோ, நாட்டுக்கோ எதிர்காலத்தில் தலைமைத்துவம் தாங்க இயலாத விதத்தில், ராஜபக்ஷ குழும நிர்வாகத்தின் பங்காளியாக, துக்கத்தில் ஆழ்ந்து போயுள்ளார்.

### சந்தடியின்றி கட்டணம் உயர்வு

இன்றைய ராஜபக்ஷ நிர்வாகம் இந்தப் புதிய ஆண்டை ஆரம்பித்திருக்கும் விதத்தைச் சற்று உற்று நோக்குவோம். புத்தாண்டுக்கான வாழ்த்துச் செய்தி போன்று, திருமணப் பதிவுக் கட்டணத்தை முன்னரை விட ஐந்து மடங்கால் அதிகரித்து ஆயிரத்து ஐந்நூறு ரூபாவாக நிர்ணயித்துள்ளது. அதே விதத்தில் மின்சார மூலம் பிரேதங்களைத் தகனம் செய்வதற்கான கட்டணத்தையும் கூட இரண்டாயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது. பிரபல பல்பொருள் அங்காடிக் கடைகளில் கொள்வனவு செய்யும் பொருள்களுக்காக 12 சதவீத வரி விதித்துள்ள அரசு, ஒரு காணியின் உறுதியை பரிசீலனை செய்வதற்காக இது வரை அறவிடப்பட்டு வந்த கட்டணமான 250 ரூபாவை ஐந்நூறு ரூபாவாக உயர்த்தியுள்ளது. அது மட்டுமன்றி அத்தகையதொரு காணி உறுதியின் அத்தாட்சிப்படுத்திய பிரதியொன்றை வழங்குவதற்கு அறவிடப்பட்டு வந்த கட்டணமான நூற்றுஇரண்டரை ரூபாதொகையை ஐந்நூறு ரூபாவாக அதிகரித்துள்ளது. இதில் விசேடமென்னவெனில், இவையாவும் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத பொது மக்கள் தலையில் சுமத்தப்படும் பொருளாதாரச் சுமைகளாகும்.

### அரசின் அனாவசியச் செலவீனங்கள்

கடந்த ஆண்டில் பத்திரிகைகளில் வெளியான ஆசிரியர் தலையங்கங்கள், பல வாழ்க்கைச் செலவுச் சுமையை குறிப்பிடத்தக்க அளவுக்கு அரசு குறைக்க வேண்டுமென்பதே நாட்டின் பொது மக்களது முக்கிய எதிர்பார்ப்பாகுமெனத் தெரிவித்திருந்தன. ஆனால் ராஜபக்ஷ குழுமமோ பொதுமக்கள் மீது தொடர்ச்சியாக வாழ்க்கைச் செலவுச் சுமையை மேன்மேலும் சுமத்தி அரசின் பிரதிபிம்பத்தை வெளிப்படுத்த களியாட்ட நிகழ்வுகளை ஒழுங்கு செய்து மக்கள் மனங்களைத் திசை திருப்பியது. கடந்த ஆண்டில் அநுராதபுர மாவட்டத்தில் நடத்திய 'தேசத்துக்கு மகுடம்' கண்காட்சிக்கென 25 மில்லியன் ரூபாவைச் செலவிட்ட ராஜபக்ஷ குழுமம், இவ்வாண்டில் அம்பாறை மாவட்டத்தில் அத்தகைய கண்காட்சியை நடத்த 26 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. கொழும்பில் நடத்திய இரவுக் கார்ப் பந்தயத்துக்காக சுமார் 300 மில்லியன் ரூபாவைச் செலவிட்ட அரசு அனுமதிப்பத்திர வரியிலிருந்து விதிவிலக்களித்ததன் மூலம் கொழும்பு மாநகர சபைக்குக் கிட்ட வேண்டிய 29 இலட்ச ரூபாவை இழக்க வைத்துள்ளது. நாடு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என்ற வீரப் பேச்சு ஒரு புறமிருந்தாலும், நாட்டு மக்களின் இன்றைய முக்கிய சிரமம், வாழ்க்கைச் செலவு உயர்ச்சியே. சம்பள உயர்வுகோரி அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் அண்மைக் காலமாக அடிக்கடி மேற்கொண்டு வரும் ஆர்ப்பாட்டங்கள் இதனை நிரூபிக்கப் போதுமானவையாகும்.

மற்றொரு புறம் அரச கூட்டணித் தரப்புக்கள் மத்தியில் மட்டுமன்றி, சுதந்திரக்கட்சியின் உயர்மட்டங்களிலும் கூட இன்று அரசியல் கருத்து வேற்றுமைகள் உச்சமடைந்து வருகின்றன. பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை விடயம் அரச தரப்புக்குள் விரிசலை உருவாக்கி வைத்துள்ளது. அரசுக்கும் நீதித்துறைக்கும் இடையிலான இந்தச் சிக்கல், நீதித்துறையை ராஜபக்ஷ குழுமம் முற்றுமுழுதாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதுடனேயே முடிவுக்கு வரக்கூடும்.

### மனித உரிமைகள் பேணலில் அசண்டையீனம்

அரசின் மனித உரிமை பேணல் நிலைப்பாடு தொடர்பாக வக்காலத்து வாங்கிச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ் விஜேசிங்க, அரசின் குற்றவியல் பிரேரணை நகல் தமக்குக் காட்டப்படவில்லையெனவும், ஆதலால் தாம் அப்பிரேரணையில் கையெழுத்திட மறுத்ததாகவும் கூறியுள்ளார். அத்துடன் அரசின் மனித உரிமைகள் பேணல் செயற்பாட்டில் காட்டப்படும் அசண்டையீனம் தொடர்பான ஆவணங்கள் சிலவற்றையும் அவர் தமது இணையத்தளத்தில் வெளியிட்டிருந்தார்.

அத்தகைய முக்கிய ஆவணங்களில் ஒன்று, மனித உரிமை பேணல் தொடர்பான உத்தேச அரசமைப்பு விதியாகும். ராஜபக்ஷ குழுமத்தால் பின்னர் குப்பைக் கூடைக்குள் வீசி எறியப்பட்ட அந்த அரசமைப்புக்கான புதிய விதி, 2009 ஆம் ஆண்டில் அரசினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி வழக்கறிஞர் ஜெயம்பதி விக்கிரமரத்னவின் தலைமையிலான குழுவினால் தயாரிக்கப்பட்டதொன்றாகும். அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டமை போன்று, தமது அந்த உத்தேச அரசமைப்பு விதியும் அரசமைப்பில் உள்ளடக்கப்படுமென அக்குழு எதிர்பார்த்தது.

### அரச தரப்புக்குள் கருத்து வேறுபாடுகள்

முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா, பிரதம நீதியரசருக்கெதிரான அரசின் குற்றவியல் பிரேரணை முன்னெடுக்கப்பட்ட விதத்தை விமர்சித்துள்ளதுடன், ஆளும் சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன, அரசின் இன்றைய போக்கில் அதிருப்தியுற்று, தாம் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்ள எண்ணுவதாக மனம் நொந்திருக்கிறார். இக்குற்றவியல் பிரேரணை மற்றும் அது முன்னெடுத்துச் செல்லப்பட்ட விதத்தால் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் மத்தியில் உருவாகியுள்ள இந்த மௌன எதிர்ப்பு நிலை, நீண்ட கால நோக்கில் ராஜபக்ஷ குழுமத்தினருக்கு அரசியல் ரீதியில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தக் காரணமாகலாம்.

அண்மையில் நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்ற கட்சியின் 13ஆவது வருடாந்த மாநாட்டில் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை அரசமைப்பிலிருந்து நீக்கிவிடும் அல்லது அதில் அடங்கியுள்ள விதிகளை மாற்றிக் கொள்ளும் முயற்சியை எதிர்ப்பதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதைத் துரிதப்படுத்தவேண்டுமெனவும் அத்தீர்மானத்தின் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், 13 ஆவது திருத்தத்தை அரசமைப்பில் இருந்து நீக்கிக்கொள்ளும் யோசனையின் மூலகர்த்தா கோத்தபாய ராஜபக்ஷ என்பதுடன், அதில் திருத்தங்கள் மேற்கொள்வதன் மூலம் அதனை வலுவற்றதொன்றாக ஆக்குவது பஸில் ராஜபக்ஷவின் அபிலாஷையாகும். அதேவேளை அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச, மற்றும் தினேஷ் குணவர்த்தன போன்றோர் அரமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்தே ஆகவேண்டுமெனவும் கொக்கரிக்கின்றனர். மறுபுறத்தில் இடதுசாரி தலைவர்களும், அமைச்சர்களுமான வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, மற்றும் டியூ குணசேகர ஆகியோர் 13 ஆவது திருத்தத்தை அரசமைப்பிலிருந்து நீக்கிவிடும் யோசனைக்கு எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். இந்தப் பிரச்சினை சிலவேளை இந்த ஆண்டில் ராஜபக்ஷ குழுமம் எதிர்கொள்ள நேரும் முக்கிய மோதலொன்றாக அமையக்கூடும்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மாநாட்டில் கவனத்துக்கு எடுக்கப்பட்ட மற்றொரு முக்கிய விடயம் இலங்கையில் முன் [illegible] இல்லாத [illegible] [illegible] ங்கள், பௌத்த கடுங்கோட்பாட்டு நிலையாகும். முஸ்லிம் அரசியல் தரப்புக்கு எதிராக இக்கடுங்கோட்பாட்டுத்தரப்பினர் பல தரப்பட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

இத்தகைய இனவாத, மதவாத, கடுங்கோட்பாடு உயர்வு கண்டுவரும் நிலையில், அரசின் பங்குதாரரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்த ஆண்டில் முஸ்லிம் மக்கள் மற்றும் அரசு ஆகிய இரு தரப்புக்கள் மத்தியில் சிக்குண்டு அரசியல் ரீதியில் சிரமங்களை எதிர்நோக்க நேரிடும் என்பதற்கான அறிகுறிகள் தற்போது தெளிவாகப் புலப்படுகின்றன. அது மட்டுமன்றி தற்போதைய களநிலவரப்படி, டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆறுமுகம் தொண்டமான் ஆகிய இரு தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் கூட ராஜபக்ஷ தரப்பினர் மத்தியில் ஆதரவு கிட்டுவதாகத் தோன்றவில்லை.

### சர்வதேச ரீதியிலான சவால்கள்

இந்தப் புத்தாண்டு, சர்வதேச சமூகத்தின் மத்தியில் ராஜபக்ஷ நிர்வாகம் முகம் கொடுக்க நேர்ந்துள்ள கடும் சிரமமான ஆண்டாக அமையும் என்பதற்கான அறிகுறிகள் தற்போதே புலப்பட ஆரம்பித்துள்ளன. இலங்கையின் மனித உரிமை நிலவரம் குறித்து ஆராய ஐ.நா சபையின் பொதுச் செயலாளர் பான் கீ-மூன் மற்றும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் ஆணையாளர் நவிப்பிள்ளை ஆகியோரால் நியமிக்கப்பட்ட மூன்றாவது விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. கடந்த வருடம் மார்ச் மாதத்தில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தினால் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான யோசனையில் கோரப்பட்ட விதத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைச் செயற்படுத்துவதற்குப் பதிலாக, அவற்றுக்கு முற்றிலும் மாறான விதத்திலான செயற்பாடுகளே அரசினால் மேற்கொள்ளப்பட்டன. அதே சமயம் பிரதம நீதி அரசருக்கெதிராக குற்றவியற் பிரேரணையை நிறைவேற்றியதன் மூலம் சர்வதேச நாடுகள் மத்தியில், இலங்கை தன் மீதான கெட்ட பார்வையொன்றை உருவாக்கிக் கொண்டுள்ளது. இந்தியாவுடன் இலங்கை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் ஏற்படுத்திக் கொண்டுள்ள பிணக்கு இந்தியாவின் தேர்தல் ஆண்டானஇந்த ஆண்டில் மேலும் உச்சமடைய இடமுண்டு.

### அரசுடன் இணங்கிப் போகும் ரணில்

இத்தகைய சவால்களுக்கும் பின்னடைவுகளுக்கும் அரசு முகம் கொடுக்க நேர்ந்துள்ள இன்றைய நிலையில் ஐ.தே.கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவோ, தமது பதவிகளைத் தக்கவைத்துக் கொள்ளும் முனைப்பையே முன்னிலைப்படுத்தி வருகிறார். பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியற் பிரேரணை கொண்டு வருமாறு தமக்கு ஆலோசனை வழங்கியவரே ரணில் விக்கிரமசிங்கா தான் என ஜனாதிபதி தெரிவித்ததாக வெளியான தகவலை ரணில் மறுத்துரைக்கவே இல்லை. அந்த அளவுக்கு அரசுடன் இணங்கிப் போய்ச் செயற்படும் போக்கை ரணில் இன்று கைக்கொள்கிறார். தற்போது ராஜபக்ஷ தரப்புப் போன்றே, ஐ.தே கட்சியும் நீதித்துறையைப் புறக்கணித்துச் செயற்படத் தீர்மானித்துள்ளதாகக் கருதமுடிகிறது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பாக கடைக்கொள்ளும் நிலைப்பாட்டை ஜனாதிபதியைப் போன்று ரணிலும் எதிர்க்கின்றார். இலங்கை கடைக்கொள்ள வேண்டிய பொருளாதாரக் கொள்கை குறித்தும் இவ்விருவரும் ஒரேவித நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர். கொள்கை நிலைப்பாட்டில் வேறுபாடு நிலவும் இனப்பிரச்சினை தொடர்பாக தற்போது ரணில் எதுவித கருத்தும் வெளியிடுவதில்லை. அரசியல் மூலோபாயமாக அடக்குமுறையைக் கையாள்வது தொடர்பிலும் இவ்விருவரின் நிலைப்பாடுகளில் பெரும் வித்தியாசம் இருக்க இயலாது. ஆயினும் இந்த ஆண்டில் ஐ.தே. கட்சி அரசியல் அரங்கில் மேலும் நலிவு நிலைக்கு உட்படும் சாத்தியம் நிறையவே உள்ளது. ஐ.தே.கட்சியின் நிர்வாகத்தின் கீழுள்ள ஒரேயொரு மாநகரசபையின் முதல்வர் முசாம்மில் தற்போது கோத்தபாய ராஜபக்ஷவின் ஆதரவாளராக ஆகியுள்ளமை இதற்கான பொருத்தமான உதாரணமாகும்.

### இலங்கைக்குச் கிட்டியுள்ள சாபம்

உண்மையில் இலங்கைக்குக் கிட்டியுள்ள முக்கியமான சாபம், ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் தான்தோன்றித் தனமான அரசியல் செயற்பாடுகளால் விளைந்த தொன்றே. ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய போக்கும் அத்தகையதே. கட்சியின் தலைமைத்துவத்தையே ஆறு ஆண்டுகள் காலத்துக்குத் தொடர்ந்து வகிக்க ஏற்பாடு செய்துகொண்டுள்ள ரணில், நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றினால் ஜனாதிபதிப் பதவியைத் தொடர்ந்து 12 ஆண்டுகளுக்குத் தாமே வகிக்கத் தக்க விதத்தில் ஏற்பாடுகள் செய்து கொள்ளக்கூடும். ராஜபக்ஷ நிர்வாகத்தின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை விமர்சிக்கும் கொழும்பின் குடிசார் சமூகம், ஐ.தே.கட்சியையோ, ரணில் விக்கிரமசிங்கவின் போக்கையோ கண்டிப்பதில்லை. புரிந்து கொள்ள இயலாத இத்தகைய போக்குக் காரணமாக, ரணில், ஐ.தே.கட்சியின் ஜனநாயக விரோத உள்ளகச் செயற்பாடுகளை அதே விதத்தில் முன்னெடுக்க வாய்ப்புப் பெறுகிறார்.

இன்றைய இலங்கையை மையப்படுத்தியுள்ள அரசியல் பிரச்சினைக்கான காரணம் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில் ஜனநாயக மாற்றத்துக்காக ஏங்கும் பொதுமக்களது அபிலாசைக்காகக் குரல் கொடுக்கவும், தலைமைத்துவம்தாங்கவும், வல்லமை கொண்ட நம்பிக்கைக்குரிய, திறமைமிக்க, யதார்த்தவாத மாற்று அரசியல் தலைமைத்துவமொன்று அமையாமையேயாகும். தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சியால் அந்த இடைவெளி நிரப்பப்படுமென எதிர்பார்ப்பது, காத்திருப்பது, கடைசியில் ஏமாற்றம் தருமொன்றாகவே அமையும் என்பது நிச்சயமே. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயை மதித்தால் தானே வரும் நிம்மதி

ஒரு மனிதனை எவர் வேண்டுமானாலும் கைவிடலாம். ஆனால் பெற்ற தாய் பிள்ளைகளை ஒரு போதும் கைவிடுவதில்லை. பிள்ளையின் குற்றங்களைப் பொருட்படுத்தாதவள் தாய். அந்தத் தாயைப் புறக்கணிக்கின்றவன் தரணியில் அமைதியுடன் வாழவே முடியாது. ஒரு தவசி மரத்தின் கீழே அமர்ந்து தவம் செய்து கொண்டிருந்தார்.

அப்போது மரத்தின் மீது அமர்ந்திருந்த ஒரு கொக்கு அவர் மீது எச்சமிட்டது. அதைக் கண்டு கோபம் கொண்ட அந்தத் தவசி 'அந்தக் கொக்கு எரியக் கடவது' என்று மனதில் நினைத்தார். உடனே அந்தக் கொக்கு எரிந்து விழுந்து சாம்பலானது. அதைக் கண்ட தவசி தன்னால் பிறரை எரிக்க முடியும் என்று பெருமை அடைந்தார்.

அதே சமயம் பாவம், இந்தக் கொக்கை எரித்து விட்டோமே என்ற இரக்க உணர்வும் அவருக்கு ஏற்பட்டது. சிறிது நேரம் கழித்து அந்த இடத்தை விட்டு அகன்று நடந்தார்.

ஒரு வீட்டிற்கு வெளியே நின்றபடி பிச்சை கேட்டார். அந்த வீட்டில் இருந்த பெண்மணி சற்றுத் தாமதமாக வந்து அத் தவசிக்கு அன்னமிட்டாள். அதைக் கண்ட தவசி கோபம் கொண்டார். தவசியாகிய என்னை வெகு நேரம் காக்க வைத்துவிட்டாய் என்று கூறினார்.

அதைக் கேட்ட அந்தப் பெண்மணி "ஐயா மன்னிக்க வேண்டும். தாங்கள் வந்த அதே நேரம் என் கணவர் வெளியிலிருந்து வீட்டுக்கு வந்தார்.

அவருக்குச் சில பணிவிடைகளைச் செய்ய வேண்டியிருந்தது. அதனால் தான் சற்றுத் தாமதமாகி விட்டது " என்றாள்.

இந்தச் சமாதானத்தை அந்தத் தவசி ஏற்கவில்லை. என்னைவிட உன் கணவன் முக்கியமாகப் போய்விட்டானா? உனக்கு. நாங்கள் நினைத்தால் உங்களை எரித்துவிட முடியும் என்று அதே கோபத்தோடு தவசி சொன்னார்.

"அதைக் கேட்ட அந்தப் பெண்மணி எரிப்பதற்கு நான் ஒன்றும் கொக்கு இல்லை" என்றாள்.

அதைக் கேட்ட தவசி திகைத்தார்.

தான் கொக்கை எரித்தது இவளுக்கு எப்படித் தெரிந்தது என்பது அவருக்குப் புரியவில்லை.

தொடர்ந்து அந்தப் பெண்மணி பேசினாள்.

நீர் இன்னும் தருமத்தைப் பற்றி சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை.

மிதிலையில் தரும வியாதன் என்பவர் வசித்து வருகிறார். அவரிடம் சென்றால் எல்லா தரும விளக்கங்களும் உமக்குத் தெரியவரும் என்று அவள் சொன்னாள். உடனே அந்தத் தவசி மிதிலைக்குப் புறப்பட்டார். மிதிலையை அடைந்ததும் தரும வியாதன் எங்கேயிருக்கிறான் என்று விசாரித்து அவ்விடத்திற்குச் சென்றார். அந்தப் பெண்மணி குறிப்பிட்ட அந்தத் தரும வியாதன் கசாப்புக் கடை வைத்திருந்தான்.

இவனா எமக்குத் தரும உபதேசத்தை சொல்லப் போகிறான்? என்று அந்தத் தவசிக்குத் தோன்றியது.

தரும வியாதன் இருக்கும் இடத்தை அவர் நெருங்கினார். அவரைக் கண்ட அந்தத் தரும வியாதன் அந்தப் பெண்மணி அனுப்பினாளா? என்று கேட்டான்.

தவசிக்கு மேலும் திகைப்பு ஏற்பட்டது.

அவர் அவனிடம் பேசத் தொடங்கினார். பிற உயிரைக் கொல்வது பாவமல்லவா? இந்தத் தொழிலை நீர் செய்யலாமா? என்று தவசி கேட்டார்.

ஐயா! என் முன்னோர்கள் காலங்காலமாக இந்தத் தொழிலைத்தான் செய்து வந்தார்கள். எனக்கு இந்தத் தொழிலைத் தவிர வேறு தொழில் தெரியாது. நான் இறைச்சியை விற்பது உண்மைதான் ஆனால் நான் அதைப் புசிப்பதில்லை.

என் முன்னோர்கள் கற்றுக் கொடுத்த இந்தத் தொழிலைத் தவிர வேறு தொழில் எனக்குத் தெரியாது.என்னை நம்பியிருக்கும் குடும்பத்தாரை நான் காப்பாற்றியாக வேண்டும்.

அதனால் எந்தப் பாவமும் என்னைச் சாராது என்று தரும வியாதன் கூறினான்.


சிறிது நேரம் கழித்து அந்தத் தவசியைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான் தரும வியாதன்.

அந்த வீட்டில் அவன் பெற்றோர் மிக அருமையாகப் பராமரிக்கப்பட்டு சந்தோஷத்துடன் வாழ்ந்து வந்தார்கள்.

தங்கள் மகன் மிக அக்கறையாகவும், அன்போடும் தங்களுக்கு பணிவிடை செய்வதாக தவசியிடம் அவர்கள் சொன்னார்கள். அம் முதியவர்கள் தரும வியாதனால் அன்போடு பராமரிக்கப்பட்டு வருவதைத் தவசி நன்றாகப் புரிந்து கொண்டார். அதன் பிறகு அவரைத் தனிமையில் அழைத்து அவரிடம் தரும வியாதன் பேசினான். ஐயா, தாய், தந்தையைப் பராமரிப்பதே ஒரு மனிதனுக்கு முக்கிய கடமை.

நீர் உமது தாய், தந்தையைத் தனியாகத் தவிக்க விட்டு விட்டு வந்து விட்டீர்.

அதனால் அவர்கள் குருடர்களாகி வருந்துகிறார்கள். முதலில் அவர்களை நீங்கள் காப்பாற்றுங்கள் . அதன் பிறகு எல்லாத் தருமங்களும் உமக்கு விளங்கும் என்று தரும வியாதன் கூறினான். உடனே தவசி அவனிடம் விடை பெற்றுக் கொண்டு தன் பெற்றோரைக் காண விரைந்தார்.



கசாப்புக் கடைக்காரனுக்குக் கிடைத்த சக்தி அவன் பெற்றோரைப் போற்றிக் காப்பதுதான் என்பதைத் தவசி புரிந்து கொண்டார். தன் பெற்றோரை அடைந்து அவர்களுக்குப் பணிவிடை செய்யத் தொடங்கினார்.

**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# 10 வருடங்களாக கொட்டிலில் வீற்றிருந்த கல்வியங்காடு இராஜேஸ்வரி ஆலயம்



**லக்ஸ்மன்**

கல்வியங்காடு, ஆடியபாதம் வீதியில் வசித்த மாரிமுத்து என்பவர் 1981 ஆம் ஆண்டு தனது இஷ்ட தெய்வமான அம்பாளுக்கு ஒரு சிறிய குடிசையை அமைத்து இராஜராஜேஸ்வரி அம்பாள் எனத் தொழுது வந்தார். தனது காணியுள் கோயிலை அமைத்த அவர் தனக்குப் பின்னர் அதனைப் பராமரிக்கவென தனது மகன் முருகேசுவுக்கு தர்மசாசனம் எழுதிக் கொடுத்தார். முருகேசுவின் பின்னர் கோயிலைப் பாதுகாத்து பராமரித்து வந்தவர் சபாபதிப்பிள்ளையாவார். சபாபதிப்பிள்ளை தனது ஒன்றுவிட்ட சகோதரன் தில்லையம்பலம் செல்லையாவின் பராமரிப்பில் ஆலயத்தை ஒப்படைத்தார். சிறிய கொட்டிலாக பத்து ஆண்டுகள் வரை இருந்த ஆலயத்துக்கென 1928 ஆம் ஆண்டில் உரிய முறைப்படி மூலஸ்தானம், அர்த்தமண்டபம், கலாமண்டபம், மகாமண்டபம், மலைக்கோபுரம், மடப்பள்ளி, வாகன சாலை என்பவைகளைக் கட்டியவர் இவரே.

1942 இல் வைரவர் கோயிலுக்கான தளம் அமைக்கப்பட்ட பின்னர்தான் இருக்கும் வரை ஆலய முகாமையாளராக இருந்த செல்லையா தனக்குப் பின்னர் மனைவி செல்லம்மாவும் அவரது மக்களான ச.பரஞ்சோதி, ச.சண்முகலிங்கம் ஆகியோரும் முகாமையாளர்களாக இருந்து ஆலயத்தைப் பராமரித்து அதன் செயற்பாடுகளைத் தொட வேண்டும் எனவும் அவரது மரண சாசனத்தில் குறிப்பிட்டிருந்தார். செல்லையாபிள்ளை காலத்தில் இரண்டு தடவைகள் கும்பாபிஷேகம் இடம்பெற்றுள்ளது. செல்லம்மா காலமானதும் பரஞ்சோதியும் தற்சமயம் சண்முகலிங்கமும் ஆலயப் பணிகளில் கவனம் செலுத்தினர்.

பெரிய இடப்பெயர்வுக்கு முன்பாக இந்தக் கோயில் சிறப்பாக இருந்துள்ளது என அந்தப் பகுதியில் உள்ளவர்கள் கூறுகிறார்கள். போர்க் காலத்தில் இந்த ஆலயம் பலத்த சேதத்துக்குள்ளாகி இருந்ததாகவும் ஆலயத்தின் சுற்று மதில்கள், தூபியில் உள்ள கலசம் என்பன தாக்குதலுக்கு உட்பட்டு உடைந்திருந்தமை இந்த மதிலை அண்டி இராணுவத்தின் காவலரண் ஒன்று இருந்தமை பற்றி இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்கள் குறிப்பிட்டனர். இது தனியாரது பராமரிப்பில் உள்ள கோயில் என்பதால் தற்போது பொறுப்பில் உள்ள சண்முகலிங்கம் ஆலயத்தைப் புனரமைப்பதில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். ஆலய புனரமைப்புக்கு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஐம்பதாயிரம் ரூபா நிதியுதவி வழங்கியிருந்தார்.

ஆலயத்தில் முன்னர் விசேட தினங்களில் பூசைகள் இடம்பெற்று வந்தன. எனினும் 2002 ஆம் ஆண்டின் பின் அலங்கார உற்சவம் நடைபெறத் தொடங்கியது. பத்துத் தினங்கள் இடம்பெறும் உற்சவத்தின் ஏழாம் நாள் தீ மிதிப்பு நிகழ்வு இடம்பெறுகின்றது. பத்தாவது உற்சவத்தில் தற்சமயம் தேர், தீர்த்தத்திருவிழாக்களின் போது தேர் மற்றுமொரு ஆலயத்தில் இருந்து பெற்று இயங்குகின்றது.

பங்குனித் திங்கள், ஐப்பசி வெள்ளி, கார்த்திகைத் திங்கள், திருவெம்பாவை தினங்களில் சிறப்புப் பூசைகள் இடம்பெறுகின்றன. பூசைகளின்போது மகேஸ்வர பூசையும் நடைபெறுகின்றது. தனிப்பட்ட ஆலயமாக இருந்தபோதும் அலங்கார உற்சவத்தைதினமும் ஒவ்வொரு உபயகாரர்களும் செய்து வருகின்றனர். அம்பாள் மீது வைத்துள்ள அசையாத நம்பிக்கை காரணமாக அலங்கார உற்சவத்தின் போதும் ஏனைய விசேட பூசைகள் இடம்பெறும்போது மக்கள் தமது முழு ஒத்துழைப்பையும் நல்குவது சிறப்பு அம்சமாகும்.

ஆலயத்தில் முன்னர் விசேட தினங்களில் பூசைகள் இடம்பெற்று வந்தன. எனினும் 2002 ஆம் ஆண்டின் பின் அலங்கார உற்சவம் நடைபெறத் தொடங்கியது. பத்துத் தினங்கள் இடம்பெறும் உற்சவத்தின் ஏழாம் நாள் தீ மிதிப்பு நிகழ்வு இடம்பெறுகின்றது.

ஆலய பூசைகளும் பரம்பரை பரம்பரையாக உள்ள சிவாச்சாரியார்கள் மூலமாகவே நடைபெற்று வருகின்றன. தற்போது பொன் வரதராஜா குருக்கள் ஆலய அர்ச்சகராக உள்ளார். இவரது தந்தை வழிப் பாட்டன் வழித்தோன்றல்களே ஆலயத்தின் அர்ச்சகர்களாக இருந்து வந்துள்ளனர்.

ஆலயத்தின் சுற்று மதில்கள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன. உள் வீதியில் மண்டபம் அமைக்க வேண்டியுள்ளது. அலங்கார உற்சவமாக இறுதி நாளில் தேரோடுவதால் புதிய தேர் மற்றும் சப்பரம் ஆகியவற்றையும் ஆலயத்துக்குச் சொந்தமாக உருவாக்க வேண்டியுள்ளன. இதற்கான முயற்சிகளை முன்னெடுக்கப்படுகின்றன.

ஆலயத்தின் வளர்ச்சிக்கு ஏற்கனவே உதவும் அடியார்கள் இவற்றையும் நிறைவேற்ற முடிந்த உதவிகளை வழங்குவர்கள் என்பது தமது நம்பிக்கையாக உள்ளதெனவும் இந்தப் பேச்சியம்மன் ஆலயத்தின் முகாமையாளரான சண்முகலிங்கம் கூறுகிறார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில்

# ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்தோருக்கு நியமனம்

மட்டக்களப்பு,ஜன.21

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் கடமையாற்றும் ஒப்பந்த அடிப்படையிலான சுகாதாரத் தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜய விக்கிரம உத்தரவிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் அலுவலகங்களில் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக ஒப்பந்த அடிப்படையில் சுகாதாரப் பணியாளர்களாக கடமையாற்றிவரும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும். இதனை இலங்கை அரச பொதுச் சேவைகள் சங்கம் கிழக்கு மாகாண ஆளுநர் , மாகாண பிரதம செயலாளர் ஆகியோ ரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தது.

அதனையடுத்தே ஆளுநர் இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

இரண்டு வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் எஸ். அமலநாதன் தெரிவித்தார்.(ச)



சவூதி அரேபியாவில் சிரச்சேதம் செய்யப்பட்ட ரிசானா நபீக்கின் வீட்டுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சென்று அவருடைய பெற்றோரை சந்தித்து அனுதாபம் தெரிவித்தார்.

## கோழிக் குஞ்சுகள் விநியோகம்

கல்முனை,ஜன.21

சமுர்த்தி வாழ்வாதார வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை பிரதேச செயலகத்தினால் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வு மருதமுனை, நற்பிட்டிமுனைசமுர்த்தி வலய வங்கி அலுவலகத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு 2136 கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனை பிரதேசசெயலர் எம்.எம்.நௌபல், சமுர்த்தி தலைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலிஹ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சோளம் அமோக விளைச்சல்

### இம்முறை அதிக லாபம் என்கின்றனர் விவசாயிகள்





களுவாஞ்சிக்குடி,ஜன.21

இந்தவருடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் சோளப் பயிர்ச் செய்கை தமக்கு அதிக விளைச்சலைத் தந்துள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு போன்ற பல பிரதேசங்களில் சோளச் செய்கையை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர்.

மேட்டுநிலப் பயிர் செய்கையாக செய்கை பண்ணப்படுகின்ற சோளம் பயிர் செய்கை எதிர்பார்த்த லாபத்தை ஈட்டித் தந்துள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

போரதீவுப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட பாலையடிவட்டை, நவகிரிநகர் போன்ற பல கிராமங்களிலுள்ள விவசாயிகள் அதிகளவு நிலப்பரப்பில் சோளத்தை பயிரிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# யானைகளை விரட்ட சாதனம்



களுவாஞ்சிக்குடி,ஜன.21

மட்டக்களப்பு,மைலந்தனைக் கிராம மக்களுக்கு காட்டு யானைகளை சத்தம் மூலம் விரட்டக் கூடிய சாதனம் ஒன்று வழங்கப்பட்டது.

இந்த சாதனம் இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்தின் மட்டக்களப்பு கிளையால் வழங்கப்பட்டது.மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தச் சாதனம் வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்தின் மட்டக்களப்புக் கிளைத் தலைவர் த.வசந்தராஜா தெரிவித்தார்.

காட்டு யானைகளின் தொல்லைகளுக்கு உட்பட்டு வரும் எமக்கு இந்தச் சாதனம் பயனுள்ளதாக அமைந்துள்ளது என்று மைலந்தனைக் கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி தெரிவித்தார். (ச)

# நெல் கொள்வனவுக்கு அரசு நிதி ஒதுக்கீடு

### பியசேன எம்.பி.சொல்கிறார்

அம்பாறை,ஜன.21

விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதற்காக அரசு போதியளவு நிதியை ஒதுக்கியுள்ளது. எனவே இந்தமுறை விவசாயிகள் தமது நெல்லைக் குறைந்த விலையில் தனியாருக்கு விற்பனை செய்யத் தேவையில்லை.

இவ்வாறு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேன தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 15 குடும்பத்தவர்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வெள்ளத்தால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிதித் தேவை காரணமாக விவசாயிகள் தமது நெல்லைக் குறைந்த விலைக்கு அவசரப்பட்டு விற்பனை செய்ய முயற்சிப்பர்.

ஆனால் அவ்வாறு அவசரப்படத் தேவையில்லை. விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதற்காக அரசு போதியளவு நிதியை ஒதுக்கியுள்ளது.- என்றார். (ச)

# வறுமை நிரந்தரமான ஒன்றல்ல

### பிள்ளையான் கூறுகிறார்



மட்டக்களப்பு,ஜன.21

வறுமை என்பது நிரந்தரமானதொன்றல்ல. அதனை இலகுவாக எம்மால் இல்லாதொழிக்க முடியும்.எனவே வறுமை நிலையிலுள்ளவர்கள் அது தொடர்பில் அதிக தெளிவைப் பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதியின் ஆலோசகரும் மாகாண சபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மண்முனை வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கான திவிநெகும தொடர்பிலான விளக்கச் செயலமர்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனிநபர் வருமானத்தை அதிகரிக்கச் செய்து மனைப் பொருளாதார அலகுகளை விருத்தி செய்து வறுமையை ஒழிக்கின்ற ஓர் விசேட கருத்திட்டத்தின் உதயமே திவிநெகும ஆகும்.

அதனூடாக எமக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அறிவுறுத்தல்களை செவ்வனே நிறைவேற்றுவதன் மூலம் சிறப்பாக எமது இலக்கை அடைய முடியும்.

எமக்குக் கிடைத்த தரவுக்கமைய மட்டக்களப்பு மாவட்டம் வறுமையில் முதன்மை பெறுகிறது.

எனவே பசிப்பவனுக்குத் தான் உணவு தேவை என்பது போல் எமது மாவட்டத்துக்குத்தான் வறுமை ஒழிப்பு அவசியம் தேவை.

எனவே இந்தத் திட்டம் முழுமையாக வெற்றி பெறுவது எமது கையிலே தங்கி இருக்கிறது.

மட்டக்களப்பில் வறுமை என்கின்ற நோயை இலகுவில் இல்லாதொழிக்க வேண்டும்.-என்றார். (ச)

### மட்டு.– பொலநறுவை எல்லையில்

# சேதமடைந்தது பாலம்; போக்குவரத்துத் தடை

மட்டக்களப்பு,ஜன.21


இலங்கையின் பிரதான ஆறுகளில் ஒன்றான மாதுறு ஓயா கிளையாற்றை ஊடறுத்து போடப்பட்டுள்ள பாலம் சேதமடைந்துள்ளது.

இந்தப் பாலம் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் சேதமடைந்துள்ளது. அதனால் பாலத்தினூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

இந்தப் பாலத்தின் ஒரு பகுதி இடிந்துள்ளதால் வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் வடமுனை, கள்ளிச்சேனை, ஊத்துச் சேனை, மியாங்கல, தரவைக் குளம் போன்ற கிராமங்களுக்குச் செல்லும் பஸ் சேவைகள் இடைநிறுத்தப் பட்டுள்ளன.

[illegible] எமது கிராமங்களுக்குச் செல்ல வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.



மட்டக்களப்பு- பொலநறுவை மாவட்டங்களின் எல்லையில் இந்தப் பாலம் அமைந்துள்ளதால், அதிக எண்ணிக்கையான மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வரு கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் இந்தப் பாலத்தை புனரமைத்துத்தர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச)

## மாணவர்களுக்கு பாதணிகள்

காத்தான்குடி,ஜன.21

காத்தான்குடி பிரதேச செயலகத்தின் சமுர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் சமுர்த்தி பயனாளிகளின் குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கு பாதணிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வழங்கப்பட்டன.

காத்தான்குடி ஹிஸ் புல்லா மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதி அமைச்சர் எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லா, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி யு.எல்.நசிர்தீன், காத்தான்குடி கோட்டக்கல்வி அதிகாரி எம்.ஐ.சுபைர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

## துப்பாக்கிகளுடன் மூவர் மாட்டினர்

பொத்துவில், கோமாஹம பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் துப்பாக்கிகளை வைத்திருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர் என்று பொத்துவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வசந்த குமார் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக முடியும். யாரும் உங்களைப் புரிந்துக் கொள்ள வில்லை என ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத் தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.

**இடபம்:** வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். சகோதர வகையில் சச்சரவு வரும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். திடீர் பயணங்கள் உண்டு. வியாபாரத்தில் ஓரளவு இலாபம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரியால் மறைமுக பிரச்சினைகள் ஏற்படும்.

**மிதுனம்:** பிரியமானவர்களைக் கலந்தா லோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுக போட்டிகளை வெல்வீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படு வீர்கள். அரசியல்வாதிகளின் நட்பு கிடைக்கும். நீண்டநாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

**கடகம்:** தன்னம்பிக்கையுடன் செயற் பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வியாபாரத் தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலை யாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிங்கம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளி வான முடிவுகளை எடுத்து அருகிலி ருப்பவர்களை அசத்துவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**கன்னி:** சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. சிலரின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள். முன்கோபத் தால் பகை உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பு குறையும்.

**நாளை**

தை -09 செவ்வாய்க்கிழமை 22.01.2013
திதி: ஏகாதசி பி.இ. 03.52 வரை
நட்சத்திரம்: ரோகினி முழுவதும்
சுபநேரம்: 11.06- 12.36 வரை
ராகுகாலம்: 03.36- 05.06 வரை

**துலாம்:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரச காரியங்களில் வெற்றி யுண்டு. நல்லவர்களின் நட்பு கிடைக் கும். வியாபாரத்தில் போட்டிகளை முறியடிப் பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துவிட்டு சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**விருச்சிகம்:** நீண்டநாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு இன்று முடிவுகட்டுவீர்கள். உத்தியோகத்தில் மதிப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**தனுசு:** மனநிறைவுடன் காணப்படுவீர் கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். பால்ய நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் மிகுதிகளை அதிரடியாகச் செயற்பட்டு பெறுவீர்கள். தாயாரின் உடல்நிலை சீராக அமையும்.

**மகரம்:** மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி தருவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. விருந்தினர், நண்பர் களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி யுண்டு. பிரபலங்களின் உதவி கிடைக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**கும்பம்:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றி யடையும். வியாபாரத்தில் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். பெண்களுக்கு உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும்.

**மீனம்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். நண் பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். பணப் புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய சலுகைகளை அறிமுகப்படுத்துவீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | 7 | 2 | 9 | |
| 7 | | 9 | | | 1 | | 3 | 5 |
| 4 | | 3 | | 5 | | | 1 | |
| 6 | | | | | 3 | 9 | 5 | |
| 1 | | | | | | | | 2 |
| | 5 | 7 | 6 | | | | | 1 |
| | 7 | | | 1 | | 8 | | 6 |
| 2 | 3 | | 7 | | | 1 | | 9 |
| | 6 | 1 | 4 | 9 | | | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 6 | 9 | 4 | 2 | 1 | 5 | 3 |
| 5 | 2 | 4 | 8 | 3 | 1 | 9 | 7 | 6 |
| 1 | 9 | 3 | 6 | 5 | 7 | 2 | 8 | 4 |
| 7 | 3 | 8 | 4 | 1 | 9 | 5 | 6 | 2 |
| 9 | 6 | 5 | 3 | 2 | 8 | 7 | 4 | 1 |
| 4 | 1 | 2 | 5 | 7 | 6 | 8 | 3 | 9 |
| 3 | 5 | 9 | 1 | 8 | 4 | 6 | 2 | 7 |
| 2 | 8 | 1 | 7 | 6 | 3 | 4 | 9 | 5 |
| 6 | 4 | 7 | 2 | 9 | 5 | 3 | 1 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத் தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்படவேண்டும். அவ்வாறு நிரப்புகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டை பெறாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



# அமரர் யோசேப்பு அன்ரனி

தோற்றம்
08.04.1949

மறைவு
21.01.2008

எமதன்புக் குலவிளக்கே அப்பா! நீங்கள்
எம்மை விட்டகன்று ஆண்டுகள் ஐந்து
ஓடி விட்டதன்றோ ! – உம்
திருவதனம் எம் கண்ணில் – உம்
பாச மொழிகள் எம் செவியில் – உம்
நினைவுகள் என்றும் எம் நெஞ்சில்
நீர் மட்டும் இல்லையே எம்முடன்
கனவாகி கனலாகி விட்டீரே – நாம்
கதிறியழும் குரல் உமக்குக் கேட்கவில்லையா?
விழி வழி வழிந்தோடும் நீரும்
நிழலாய் தொடரும் நினைவுகளும்
என்றும் உம்முடனே !

165, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(28483) (6.7.11)

உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.



# தென்மராட்சி கிழக்கு பல நோ.கூ.சங்கம் (வ.து) கொடிகாமம்

**எரிபொருள் நிரப்பு நிலைய முன்பாக கொங்கிறீற், தார் வீதி அமைத்தற்கான கூறுவிலை கோரல்**

எமது சங்கத்தினால் கொடிகாமம் கண்டி வீதியில் நடத்தப்படும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக கொங்கிறீற், தார் வீதி அமைப்பதற்கு உரிய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

* கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 21.01.2013 -05.02.2013
* கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதி: 05.02.2013 நண்பகல் 12.00 மணிவரை
* மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 1000.00 உம் மீளளிக்கப்படும் வைப்புப்பணமாக ரூபா 5000.00 உம் செலுத்துதல் வேண்டும்
* சரியாக நிரப்பப்படாத தெளிவற்ற கேள்விப் பத்திரங்களை ஏற்கவோ, மறுக்கவோ பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் உண்டு.
* தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் எரிபொருள் நிலைய செயற்பாட்டை பாதிக்கா வண்ணம் ஒப்பந்தம் கைச்சாத்திடும் திகதியில் இருந்து குறுகிய சில தினங்களுக்குள் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும். குறித்த தினங்களுக்குள் உரிய வேலைத்திட்டத்தினை பூர்த்தி செய்து தரப்படாத பட்சத் தில் அறவிடப்படும் கட்டண விவரம் ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்படும்.

கேள்வி விண்ணப்பப்படிவத்தினை உரிய வைப்புப் பணத்தைச் செலுத்தி தலைமைப்பணிமனையில் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரத்தினை ஒப்பந்த காரர்கள் "தலைவர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம்" எனும் பெயருக்கு கடித உறையில் முகவரியிடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எரிபொருள் நிரப்பு நிலைய வீதி அமைத்தற்கான கூறுவிலை என எழுதி ஒட்டி தலைமைப் பணிமனையில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன்.

தென்மராட்சி கிழக்கு பல நோ.கூ.சங்கம்
பருத்தித்துறைவீதி, கொடிகாமம்.

(சி/2884(6.7.4)

தலைவர்.



# Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் இராஜதந்திர தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு இரண்டு நினைவு முத்திரைகள் வெளியிடப்பட்டன. இந்த நிகழ்வில் தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க முத்திரைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தார். அருகில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் உட்பட அமைச்சர்கள் காணப்படுகின்றனர்.

# பந்துலவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

**அமைச்சரின் பொறுப்பற்ற கருத்துக்களை கண்டிக்கிறது இலங்கை ஆசிரியர் சங்கம்**

கொழும்பு,ஜன.21

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரித்துள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்வாங்கும் விடயத்தில் தாமதம் ஏற்பட்டமைக்கு முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவே காரணம் என்று அமைச்சர் குற்றம் சுமத்தியிருந்தார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டு பொறுப்பற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ஆசிரியர் சங்கத்தின் செயலர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சுமத்தியுள்ளார்.

அமைச்சரின் இந்தக் கருத்து முன்னாள் பிரதம நீதியரசருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

மாணவர்கள் இசற் புள்ளி விவகார வழக்கை ஷிராணி பண்டார நாயக்க மாத்திரம் விசாரணை செய்ய வில்லை. பல நீதியரசர்கள் அந்தக் குழுவில் இருந்துள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.

எனவே அமைச்சரின் பொறுப்பற்ற இந்தக் கருத்து நீதிமன்றத்தை அவமதிப்பதாகக் கருதி வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தோருக்கு நடவடிக்கை

கொழும்பு,ஜன.21

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக இன்று திங்கட்கிழமை நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**ஷிராணி பண்டார நாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக இன்று திங்கட்கிழமை நடவடிக்கை எடுக்கப்படும்.**



2010 ஆம் அண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டு, நாடாளுமன்றத்துக்குச் சென்று குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தவர்களுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள கட்சியின் தொழிற்சங்கக் கூட்டத்தின் போது அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து கவனம் செலுத்தப்படும் என்று அவர் மேலும் குறிப் பிட்டார். (ச)

# ஷிராணி சாதாரண பிரஜை; அவருக்கு பாதுகாப்பு இல்லை

**பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சொல்கிறார்**

கொழும்பு,ஜன.21

ஷிராணி பண்டாரநாயக்க தற்போது இலங்கையின் சாதாரண பிரஜை என்ற அடிப்படையில் அவருக்கான பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார். தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி பொலிஸ் பாதுகாப்பை ஷிராணி பண்டார நாயக்க கோரியிருந்தார். எனினும் முன்னாள் பிரதம நீதியரசர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை என்று அவர் கூறினார். (ச)

# மின்தந்தி முறைமையை ரத்துச் செய்யத் தீர்மானம்

**தபால் திணைக்களம் தகவல்**

கொழும்பு,ஜன.21

இலங்கையில் மிக நீண்ட காலமாகக் காணப்பட்ட மின்தந்தி முறைமை ரத்துச் செய்யப்படவுள்ளது என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மின் தந்திகளை அனுப்புவதால் தபால் திணைக்களத்துக்கு நட்டம் ஏற்படுகிறது. அதனால் தொடர்ந்தும் நட்டத்தில் தந்திச் சேவையை வழங்க முடியாது என்று தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் மின் தந்திச் சேவை ரத்து செய்யப்படவுள்ளது. மின்தந்தி சேவையை வழங்குவதற்காக தொலை தொடர்பு கட்டுப்பாட்டு நிறுவனத்திடம் இந்த ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தை தபால் திணைக்களம் பெற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மின் தந்தி சேவையை ரத்து செய்வது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்று தபால் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச)

# யாப்புத் திருத்தம் செய்ய வேண்டும்

கொழும்பு,ஜன.21

நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் பிரச்சினை ஏற்படாத வகையில் அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு இலங்கையின் நாடாளு மன்ற உறுப்பினர்களும் புத்திஜீவிகளும் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் விடயம் போல எதிர்காலத்திலும் நீதித்துறையால் பிரச்சினை ஏற்பட்டுவிடக்கூடாது என்று அவர்கள் தெரிவித்தனர்.

அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்பட்டால் நிறைவேற்று அதிகாரமும், நீதித்துறையும் உரிய வழிகளில் வரையறைக் குள் செயற்படமுடியும் என்று அவர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர். (ச)

# தடை செய்யப்பட்ட மருந்தை விற்ற வைத்தியர் சிக்கினார்

கொழும்பு,ஜன.21

போதையை ஏற்படுத்தக்கூடிய தடை செய்யப்பட்ட மருந்துப் பொருளை விற்பனை செய்த வைத்தியர் ஒருவர் நீர்கொழும்பு பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் நீர்கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த வைத்தியர் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு போதை ஏற்படுத்தும் மருந்தை விற்பனை செய்துள்ளார்.

வைத்தியரை கைது செய்து நீர்கொழும்பு நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச)

# கொலை அச்சுறுத்தல்களுக்கு எதிராக மகஜரில் கையொப்பமிடத் தீர்மானம்

கொழும்பு,ஜன.21

நாட்டில் இடம்பெறும் கொலை அச்சுறுத்தல்களுக்கு எதிராக சட்டத்தரணிகள் மகஜர் ஒன்றில் கையொப்பமிடத் தீர்மானித்துள்ளனர். நாடளாவிய ரீதியில் இந்த மகஜர் கைச்சாத்திடப்படவுள்ளது.

இன்று திங்கட்கிழமை முதல் இந்த மகஜரில் கையொப்பங்களை திரட்டும் நடவடிக்கை ஆரம்பமாகவுள்ளது என்று சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பை வெளியிட்ட சட்டத்தரணிகளை இலக்கு வைத்து கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

சட்டத்தரணிகளான ஜயம்பதி விக்ரமரட்ண, எம்.ஏ.சுமந்திரன், ஜே.சீ.வெலியமுன, ரொமேஷ் டி சில்வா போன்ற சட்டத்தரணிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலை அச்சுறுத்தல்களுக்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் நாடளாவிய ரீதியில் மகஜர் ஒன்றில் கையொப்பங்கள் திரட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சிறைகளில் தொலைபேசிகள் மீட்பு

கொழும்பு,ஜன.21

மொனராகலை மற்றும் குருவிட்ட ஆகிய சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது கைதிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன. மொனராகலை சிறையில் இருந்து ஒரு கையடக்கத் தொலைபேசியும் குருவிட்ட சிறையில் இருந்து 6 கையடக்கத் தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் இவ்வாறு திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

# பதிவு செய்யப்படாத தொலைபேசி நாட்டுக்குள் கொண்டுவரத் தடை

**நவீன தொழில்நுட்ப கருவிகளும் இறக்குமதி செய்யப்படும் என்கிறார் அனுஷ பெல்பட்ட**

கொழும்பு,ஜன.21

நாட்டுக்குள் பதிவு செய்யப்படாத தொலை பேசிகள் கொண்டுவரப்படுவது முற்றாகத் தடைசெய்யப்படும். அத்தகைய தொலைபேசிகளைக் கண்டுபிடிப்பதற்காக புதிதாக நவீன தொழில் நுட்ப கருவிகள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்.

இவ்வாறு தொலை தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் அனுஷ பெல்பட்ட தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தாவது:-

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்படும் கையடக்கத் தொலைபேசிகள் அனைத்தும் தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக் குழுவின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும்.

எனினும் அதிகளவு தொலைபேசிகள் வெளிநாடுகளில் இருந்து சட்ட விரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றன.

பதிவு செய்யப்படாத தொலைபேசிகள் நாட்டில் புழக்கத்தில் இருப்பதால் பிரச்சினைகள் உருவாகக் காரணமாகின்றன.

எனவே அத்தகைய தொலைபேசிகளைக் கண்டுபிடிப்பதற்காக புதிய நடைமுறை ஒன்றை அறிமுகப் படுத்த தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக் குழு திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான நவீன தொழில் நுட்ப உபகரணங்கள் இந்த வருட இறுதிக்குள் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட உள்ளன.

இந்த நவீன தொழில் நுட்ப உபகரணங்கள் ஊடாக சட்டவிரோத தொலை பேசிகளின் சமிக்ஞைகள் மற்றும் அதன் செயற்பாடுகள் துண்டிக்கப்படும். அதன் மூலம் சட்டவிரோத தொலை பேசிகளின் பாவனையை முற்றாகக் கட்டுப்படுத்த முடியும்.-என்றார். (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமறைக் கலாமன்றம்
## கலைத்தூது அழகியல் கல்லூரி

எமது கல்லூரியினால் நடத்தப்படும் பின்வரும் பாடங்களுக்கான 2013 ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பிரதான பாடங்கள்**

★ வாய்ப்பாட்டு ★ நடனம் (பரதம், கதகளி, மோகினி)
★ வீணை ★ வயலின் ★ புல்லாங்குழல்
★ மிருதங்கம் ★ ஓர்கன் (கீபோட்) ★ ட்றம்
★ சித்திரம் ★ நாடகமும் அரங்கியலும்

**சிறப்புப் பாடங்கள்**

★ கூத்து ★ கண்டிய நடனம் ★ யோகாசனம்
★ அழகுக்கலை (முக ஒப்பனை, தலையலங்காரம், கேக்ஐசிங், சேலை அலங்காரம், தையல்)
★ பண்பாடு (கிறிஸ்தவ கலைகள், சைவ சித்தாந்தம்)

**துணைப்பாடம்**

★ ஆங்கிலம்

இப் பாடங்களை பயில விரும்புவோர் எமது கல்லூரியில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து 31.01.2013 வியாழக்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கவும்.

**மேலதிக விவரங்களுக்கும் தொடர்புகளுக்கும்**

இல.128, டேவிட் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 9419

அதிபர்,
கலைத்தூது அழகியற்கல்லூரி

(28566)(6.7.11)

## விற்பனைக்கு

Communication இற்கு தேவையான Telephone booth, Fitting, Computers, Phone and Computer Accessories, Photo Copy machine போன்ற பல பொருள்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
674, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
077 8036293,0778531032.
(28499)(6.7.4)

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 58 XXXX தொடரிலக்கமுடைய GL HIACE வான், (அயஸ்மன்ற், சீற் டுவல் A/C, எலோய் வீல்) விற்பனைக்குண்டு.
42, யமுனா வீதி, கல்வியங்காடு.
077 8704439.
(28444) (6.7.4)

## Personal Class

தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English class உம் Spoken With Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (அனுமதி மட்டுப்படுத்தப்பட்டவை)
தொடர்பு :K.K.S Road , Jaffna.
077 8361521
(28498)(6.711)

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
The Only Official Centre for French Language in Jaffna
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

Alliance Française de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் "Alliance Française de Jaffna" மட்டுமே.

சர்வதேச தரம் வாய்ந்த Alliance Française de Jaffna இல் France மற்றும் (French) பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.


வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.....

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

61, Kachcheri-Nallur Road, Jaffna TP.No: 021.2228093
E-mail: alliancejaffna@yahoo.com
(ருக்கா வீதியும் கச்சேரி–நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
13.05.1965



மறைவு
21.01.2011

### அமரர் மயில்வாகனம் இரவீந்திரன்

தி/ விபுலானந்தாக் கல்லூரி – ஆசிரியர் (B.Sc)

ஈராண்டு முடிந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
போன வழி தேடி காத்திருக்கின்றோம்
மீண்டும் வருவாயா நீ நிழலாக அல்ல நிஜமாக
உன் வரவினை எதிர்பார்த்து காத்திருப்போம்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டை,
வேதரடைப்பு, காரைநகர்.

உன் பிரிவினால் துயருறும்
குடும்பத்தினர்.

(28608)(6.7.11)

## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை
## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2013

01.01.2013 தொடக்கம் 31.12.2013 வரை கீழ்காணும் பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்காகப் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்காணும் ஒவ்வொரு பொருள்களுக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களை பதிவுசெய்தல்'' 2013 எனக் குறிப்பிடப்பட்டு **தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** என்ற முகவரிக்கு 2013.02.11 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது நேரில் சமர்ப்பிக்கவேண்டும்.

| தொ இல. | வழங்கல் | மீளளிக்கப் படாத பதிவுக் கட்டணம். |
|---|---|---|
| 1 | காகிதாதிகள், எழுது பொருள்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள் | 1500.00 |
| 2 | அலுவலக உபகரணங்கள் பைலிங் கபினட்டுகள், உருக்குக் கபினட்டுகள், கணினி இயந்திரங்கள், கணினி உபகரணங்கள் | 1500.00 |
| 3 | தளபாடங்கள் | 1500.00 |
| 4 | மலசல தொட்டி வேலை, களஞ்சியப்பொருள் (தும்புத்தடி), பிரம்புக்கூடைகள் ஈரக்குத்தடிகள், கிருமிநாசினிகள், தெளிகருவிகள், குளோரின், சவர்க்காரம், கையுறை | 1500.00 |
| 5 | அச்சடிதல் | 1500.00 |
| 6 | இரும்புப்பொருள்கள், தீந்தைகள், (எல்லா வகையான இரும்புப்பொருள்கள் தீந்தைகள்) | 1500.00 |
| 7 | கட்டட, வீதி வேலைகளுக்கான பொருள்கள் (ஆற்றுமணல், கிறவல், சரளைக்கற்கள் செங்கற்கள் ஓடுகள்,களிமண்) | 1500.00 |
| 8 | நீர் விநியோகப்பொருள்கள் (பி.வி.சி. பைப்புக்கள், குழாய்கள், பொருத்துக்கள் என்பன) | 1500.00 |
| 9 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (வாகனங்களுக்கான பற்றரி, ரயர், சியுப், உதிரிப்பாகங்கள்) | 1500.00 |
| 10 | நீர் இறைக்கும் இயந்திரங்கள், ஏனைய இயந்திரங்கள் | |
| 11 | வாகனங்கள் | 1500.00 |
| 12 | மின்சாரப் பொருள்கள் (வயர், மின்குமிழ், சுவிச், மின் இணைப்பு உபகரணங்கள்) | 1500.00 |
| 13 | நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் | 1500.00 |
| 14 | சித்தமருத்துவப் மருந்துப்பொருள்கள் | |
| தொ இல. | சேவைகள் | |
| 01 | கட்டடங்கள் பழுதுபார்த்தலும் பேணலும் | 1500.00 |
| 02 | மோட்டார் வாகனங்களை பழுதுபார்த்தலும், சேவீஸ் இடுதலும் | 1500.00 |
| 03 | தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் பழுதுபார்த்தல் | 1500.00 |
| 04 | இரத்திரனியல், இயந்திரங்கள் பழுதுபார்த்தலும், சேவீஸ் செய்தலும் | 1500.00 |
| 05 | படவரைஞர்கள், கட்டட ஒப்பந்தகாரர்கள் (கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் உட்பட) | 1500.00 |

மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு இலக்கங்களுக்கும் எதிராக குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணங்கள் காசாக அல்லது காசுக்கட்டளையாக ''தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை'' என்று எழுதப்பட்டு பதிவு செய்வதற்கான விண்ணப்பத்துடன் வியாபார அனுமதிச் சான்றிதழின் பிரதியினையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

பதிவுசெய்யப்பட்ட வழங்குநர், ஒப்பந்தகாரரிடம் இருந்து கூறுவிலை கோரப்படும். ஆனால் அவசியம் ஏற்பட்டால் ஏனைய வழங்குநர்களிடமிருந்து கூறுவிலை கோரவும் கொள்வனவு செய்யவும் தவிசாளருக்கு உரிமையுண்டு. குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத்தவறும் அல்லது கட்டளை பிறப்பிக்கப்பட்டு உரிய காலத்தினுள் நிறைவேற்றத் தவறும் அல்லது வழங்கப்பட்ட சேவைகள் பொருள்கள் கோரப்பட்ட தரத்துக்கும் வழங்கப்பட்ட விவரக் கூற்றுக்களுக்கும் ஏற்ப அமையத் தவறும் வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்களின்பெயர்கள் அறிவித்தல் இன்றி பதிவேட்டில் இருந்து நீக்கப்படும். ஏற்கனவே தவறிழைத்த வழங்குநர்களிடமிருந்தும் ஒப்பந்தகாரரிடமிருந்தும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பாதனை தயவு செய்து கவனத்தில்கொள்ளவும்.

தவிசாளர்/ செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
2013.01.23

(28580)(6.7.45)

## வீடு காணி விற்பனைக்கு

யாழ். பருத்தித்துறை வீதியில் நீர்வேலி உபதபாற் கந்தோர் அமைந்திருக்கும் வீடும், காணி 5 ¾ பரப்பும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு :
0776067026
(c/5964)(6.711)

## 28ம் ஆண்டில் யாழ் கலாலயா பயிற்சியகம்
Yaarl Kalaalayah Academy
Jaffna

முன்பு யாழ். பெருமாள் கோயிலுக்கு அண்மையாக இயங்கி வந்த மேற்படி பயிற்சி நிலையம் தற்போது தனது ஆரம்ப கால இடமாகிய யாழ். போதனா வைத்தியசாலைக்கு பின்புறமாகவுள்ள விக்ரோறியா வீதியில் இயங்குகிறது.



**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**





- கேக் ஐசிங், உணவு தயாரித்தல் , Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facial)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**



- (B)பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள்.

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 27-01-2013 (தைப்பூச நாள்) காலை 9.30 மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 30-01-2013 காலை 9.30 மணி**

Guru

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

சாவகச்சேரி பிரதேச சபைப் பகுதிக்குள்

## சிமெந்து கலவை வீதிகளாக 15 கிலோமீற்றர் நீள வீதிகள்

கொடிகாமம், ஜன.21

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 15 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் சிமெந்து கலவை வீதிகளாக மாறவுள்ளன.

சபை உறுப்பினர்களால் முன்னுரிமை அடிப்படையில் தலா ஒரு கிலோ மீற்றர் நீளமான வீதிகளின் விவரங்களை வழங்குமாறு பிரதேச சபையின் உறுப்பினர்களை தலைவர் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சபை எல்லைக்குள் நூற்றுக்கணக்கான வீதிகள் இன்னமும் மணல் வீதிகளாகவே உள்ளன. பிரதேச சபை உறுப்பினர்களால் பிரேரிக்கப்படும் வீதிகளின் முக்கியத்துவத்தை சபையின் தலைவர் தலைமையிலான குழு அந்தப் பகுதி மக்களிடம் அபிப்பிராயம் பெற்றுவேலைத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுஅமைப்புக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (3-9)

**சபை எல்லைக்குள் நூற்றுக் கணக்கான வீதிகள் இன்னமும் மணல் வீதிகளாகவே உள்ளன.**

## பொதுச்சொத்துக்களை பாதுகாக்க வேண்டும்

### மாநகர சபை உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்புத்துறை,ஜன.21

யாழ்.மாநகர சபையால் வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள மின்விளக்குகளை சில இடங்களில் விஷமிகள் சேதப்படுத்துவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று மாநகர சபை உறுப்பினர் அ.கொர்னேலியஸ் கவலை தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் சில கொழும்புத்துறைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளன. பட்டப் பகலில் அந்தப் பகுதி மக்களின் எதிர்ப்பையும் மீறி சில விஷமிகள் மின்விளக்கை சேதப்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாடுகளால் இரவு வேளையில் பயணிக்கும் பொதுமக்களுக்குப் பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. பொதுச் சொத்துக்களை சேதப்படுத்துவதை விடுத்து அவற்றைப் பாதுகாக்க அனைவரும் முன்வர வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இந்தப் பகுதியில் பழுதடைந்து ஒளிராத நிலையில் காணப்படும் வீதி மின் விளக்குகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (3-135)

## பண்ணிசை, திருக்குறள் மனனப் போட்டிகள்

யாழ்ப்பாணம் சைவப் பரிபாலன சபையால் புண்ணி நாச்சியம்மையார் தினத்தில் போட்டிகள்நடத்தப்படவுள்ளன.

பண்ணிசைப் போட்டி, திருக்குறள் மனனப் போட்டி என்பன மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளன. போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி 10ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் இல.66 நீராவியடி, யாழ்ப்பாணத்தில் இயங்கும் பாடசாலை அதிபரூடாக சைவபரிபாலன சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு சபைச் செயலாளர் தி.மாணிக்க வாசகர் கேட்டுள்ளார். (3)

## காப்பெற் வீதியாகிறது சிவன் பண்ணை வீதி

யாழ்.நகரை அண்டிய சிவன் பண்ணை வீதியின் புனரமைப்புப் பணிகள் நீண்டகாலத்தின் பின்னர் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. அது காப்பெற் வீதியாக மாற்றப்படவுள்ளது.

சிவன் பண்ணை வீதி போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு பெரும் சேதத்துக்கு உள்ளாகியிருந்தது.

மழை காலங்களில் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். அந்த வீதியில் தற்போது வடமாகாண தொழில் திணைக்களம், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் போன்றவை அமைந்துள்ளன.

அதனால் திணைக்களத்துக்கு வருகை தரும் மக்கள் அதிகரித்திருப்பதனாலும் வீதியால் பயணிக்கும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. இதனை அடுத்து இந்த வீதி புனரமைக்கப்பட்டு காப்பெற் வீதியாக மாற்றப்படவுள்ளது. (3-17)

## குடிதண்ணீருக்கு புதிய கிணறுகள்

யாழ்ப்பாணம், ஜன.21

சுன்னாகத்தில் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையினர் புதிய கிணறுகளை அமைக்கவுள்ளனர். இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த காலங்களில் சுன்னாகத்தில் உள்ள நீர் நிலைகளில் கழிவு எண்ணெய் கலப்பதனால் அவை குடிதண்ணீருக்காகச் சேவையில் இருந்து இடை நிறுத்தப்பட்டன.

இதற்கு மாற்றீடாகவே புதிய கிணறுகள் விரைவில் சுன்னாகத்தில் அமைக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டம் பூர்த்தியடைந்ததுமே சங்குவேலிக் கட்டுடை, நவாலி மற்றும் பிரதேசங்களுக்கு நன்னீர், குடிதண்ணீர் வழங்கப்படும்.

தற்போது வழங்கப்படும் குழாய் மூலமான குடிதண்ணீர் குடிப்பதற்கு உகந்ததல்ல என்ற முறைப்பாட்டை அடுத்தே இந்தத் திட்டம் முன்னகர்த்தப்படவுள்ளது. (3-50)

சட்டவிரோத செயல்களுக்காக

## 337 பேருக்கு எதிராக வழக்கு ரூபா 13 லட்சம் அபராதம்

வடமராட்சி, ஜன.21

கடந்த வருடம் வடமராட்சிப் பிரதேசத்தில் சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனை, போதைப் பொருள்களை சிறுவர்களுக்கு விற்பனை செய்தல் என்பவற்றுக்காக நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

337 பேருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 13 இலட்சம் ரூபா அபராதம் அறவிடப்பட்டது.

2010 ஆம் ஆண்டிலும் பார்க்க கடந்த 2011 ஆம் வருடம் சட்ட விரோதமான போதைப் பொருள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்குகள் மிக அதிகரித்துள்ளன.

2010 ஆம் ஆண்டில் அந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக 61 பேருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 65 ஆயிரம் ரூபா மட்டுமே அபராதமாக அறவிடப்பட்டிருந்தது. (3-8)

**2010 ஆம் ஆண்டிலும் பார்க்க கடந்த 2011 ஆம் வருடம் சட்ட விரோதமான போதைப் பொருள் குற்றச்சாட்டுக்கள் மிக அதிகரித்துள்ளன.**

வைத்தியர்களினதும்/பாவனையாளர்களினதும் கவனத்துக்கு

★ நீங்கள் இளநரை, முடி உதிர்வு, வாதம், கை கால் விறைப்பு, மூட்டுவலி, முதுகுவலி, இடுப்பு வலி என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
* இந் நோய்களுக்குப் பல வழி முறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா?
* இந் நோய்களுக்கான தீர்வாக ஆயுள் வேதமுறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் எம்மிடம் உண்டு.
★ ஆயுள் வேத வைத்தியர்களின் கவனத்துக்கு!
* எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வறட்டு இருமல் போன்ற பல வகை நோய்களுக்குரிய அரிஸ்ட ஆசவங்கள் குவாதங்கள், சூரணங்கள், சிரப்வகைகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுகொள்ளலாம்.

நீங்கள் நாடவேண்டிய இடம்
"சிவா நறுமணப் பூங்கா"
இல- 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி- 021222 2567

வேலைவாய்ப்பு

காப்புறுதியின் முன்னோடியாகிய இலங்கை காப்புறுதி கூட்டுத்தானம் தனது 50 ஆவது ஆண்டு நிறைவில் துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து காப்புறுதி ஆலோசகருக்கான விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

* நீங்கள் விற்பனைத் துறையில் ஆர்வமுள்ளவரா?
* பகுதி நேர வேலைவாய்ப்பினைத்தேடி நிற்பவரா?
* துடிப்பும் ஆர்வமும் உள்ளவரா?
* 18 வயதைக் கடந்தவரா?
* குறுகிய காலத்திலேயே அதிக வருமானத்தை உழைப்பதில் ஆர்வமுள்ளவரா?
* ஒரு குழுவுடன் இணைந்து செயற்படுவதில் ஆர்வமுள்ளவரா?
* சிறந்த தொடர்பாடல் திறன் உடையவரா?
* ஓய்வூதியரா?

இன்றே காப்புறுதியின் முன்னோடியும் அரச நிறுவனமுமான எம்முடன் இணையுங்கள்

தகைமை

G.C.E. O/L 6 பாடங்களில் சித்தி. கணிதம், தமிழ் அடங்கலாக

நீங்கள் எம்முடன் இணைந்தால்

* அரச காப்புறுதியில் இணைவதன் மூலம் காப்புறுதி உலகில் ஓர் அங்கீகாரம்
* வெளி நாட்டுச் சுற்றுலா
* ஆரோக்கியமான போட்டிகளும் அதற்கேற்ப பரிசில்களும்
* இலங்கையின் மாபெரும் நட்சத்திர விடுதிகளில் பயிற்சிகள் மற்றும் விருந்துபசாரங்கள்
* வாகன கடனுதவி
* போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு வருடாந்த கௌரவிப்புகள்
* தகைமை காலத்தில் சிறப்பாக செயலாற்றியவர்களுக்கு BANK ASSURANCE, சந்தைப்படுத்தல் அதிகாரி போன்ற நிரந்தர வேலை வாய்ப்பு மற்றும் EPF, ETF வைத்தியசாலைக் கொடுப்பனவுகள்.

காப்புறுதியில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட மேலதிக சலுகைகள்

இவற்றில் ஆர்வமுள்ளவர்கள்தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 15.02.2013 முன்னர் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விற்பனை முகாமையாளர்
இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்.
இல.571, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(28554)(6.7.11)

## பொங்கல் விழாவில் பாரம்பரிய நிகழ்வுகள்

கைதடி வளர்மதி விளையாட்டு மைதானத்தில் தைப் பொங்கல் தினத்தன்று மாலை, தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்கள் நடைபெற்றன.

இரவு நிகழ்வாக யாழ். விழிப்புலனற்றோரின் "சாகித்யம்" இசை நிகழ்வும் இடம்பெற்றன. நிகழ்வில் வெற்றி பெற்றோருக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன. (3-288)

கிளி/வன்னேரிக்குளம் ம/வி.
சாதனை நாயகிகளை
பாராட்டி வாழ்த்துகின்றோம்


வ.நிதர்சனா
1ஆம் இடம்


ந. சாணுகா
5ஆம் இடம்


வ.மதுகீர்த்தனா
6ஆம் இடம்

Best Wishes

எமது பாடசாலையில் கல்விபயின்று 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசியமட்ட சமூகவிஞ்ஞான போட்டியில் பங்குபற்றி சாதனைபடைத்து பாடசாலைக்கு பெருமை தேடித்தந்த மாணவிகளையும் வெற்றிக்கு உழைத்த அதிபர், ஆசிரியர்களையும் உளமகிழ்ந்து மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

பாடசாலை சமூகம்
கிளி/வன்னேரிக்குளம் ம/வி.

4 ஆம் ஆண்டு நீங்கா நினைவு



மலர்வு
22.06.1951

உதிர்வு
04.02.2009

திருமதி
வல்லிபுரம் தங்கமலர்
(மலர்)

திதி: 21.01.2013

எறிகணையின் வேகத்தில் எங்கள் கூடுகலைந்தது
எத்தனை உறவு இருந்தும் அன்னைக்கு ஈடாகுமா
குல விளக்காய் இருந்து குடும்பத்தைக் காத்தீரே
கூடு கலைந்ததம்மா குருவிகள் ஏங்குதம்மா.

கொடுங்குளாய் வீதி,
ஆழியவளை, தாளையடி.

(28457)(4.6.7)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளுக்கு மட்டுமே...



சு.சுபா
4ஆம் கட்டை,
மானிப்பாய்.

அரவணைப்பு என்பது வாழ்க்கைக்கு ஆதாரமானது, ஆதரவளிப்பது. எல்லாவற்றையும் அரவணைத்து ஆலோசனை கூறி, வாழ்வதற்கும், வளர்வதற்கும் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் தயங்காமல் செய்யக் கூடியவள் பெண். இப்படிப் பிறருக்கு உதவி செய்து கொண்டு, அந்த உதவி செய்யும் குணத்தையே தான் வாழ்வதற்கும், பயன்படுத்திக் கொள்வதுதான் பெண்ணின் அடிப்படையான சிறப்பு குணம்.

உதவுவதன் மூலம் உயிர் வாழலாம் என்ற உண்மையை மனித வரலாற்றின் தொடக்கக் காலத்திலேயே பெண் அறிந்து வைத்திருந்தாள்.

உலகில் நிலைத்து வாழ்வதற்கு, தனது சொந்தக் காலில் நிற்க வேண்டும் என ஆணுக்கு வலியுறுத்தப்பட்டதைப் போலவே, பெண்ணுக்கும், உலகில் சுமுகமாக வாழ்வதற்கு இணக்கமாகவும், பிறருக்கு உதவும் நிலையிலும் இருக்க வேண்டும் என போதிக்கப்பட்டிருக்கிறது.

நல்ல பராமரிப்பாளனாக, நல்ல பாதுகாவலனாக, நல்ல தந்தையாக, நல்ல காதலனாக, நல்ல கணவனாக இருந்து மேற்கண்ட அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்த ஆண்தான் அவளுக்குத் தேவைப்பட்டான். இத்தகைய திறனுள்ள ஆடவனைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அவளுடைய பராமரிக்கும் திறனும், பரிவும் மிகப் பெரிய ஆயுதங்களாக இருந்தன.

திருமணத்துக்கு முன்பு வரை யாரென்றே தெரியாத ஒருவனுடன் திருமணமாகிப் புகுந்த வீடு செல்லும் போதே, புதிய சூழ்நிலையில், புதிய மனிதர்களோடு தான் இணைந்து போக வேண்டும் என்ற மனப் பக்கு வத்தை வளர்த்துக் கொண்டுதான் பெண் செல்கிறாள்.

புதிய கணவனுக்காக எதையும் விட்டுக் கொடுக்கும் நிலையையும், கணவனின் கருத்துக்களோடு ஒத்துப் போகும் பண்பையும் வளர்த்துக் கொள்கிறாள். தான் வேறு, தனது கணவன் வேறு என்ற எண்ணம் அகன்று, தன் கணவனின் விருப்பமே தன் விருப்பம், அவன் நோக்கமே தனது நோக்கம், அவனது லட்சியமே தனது லட்சியம் எனக் கருதி, அவனோடு தன்னை இரண்டற இணைத்துக் கொள்கிறாள்.

தனது கணவன் ஆறுதலாக, மகிழ்ச்சியாக இருப்பதற்கான ஒரு சூழலை பெண் உருவாக்கி தனது நிலைப்பாட்டை உறுதி செய்து கொள்கிறாள்.

தனது மென்மையான எண்ணங்களை வெளிப்படுத்த இயலாதவனாக ஆண் இருந்த போதிலும், குறிப்பால் அவனது எண்ணங்களை அறிந்து கொள்கிறாள். தன்னோடு இருப்பவர்களின் எண்ணங்களையும் குறிப்பால் அறிய கற்றுக்கொள்கிறாள்.

ஆண் எதைச் செய்தாலும் அதை அன்புடன், காதலுடன் செய்ய வேண்டும் என்று பெண் எதிர்பார்ப்பாள். வாழ்க்கையில் அரவணைப்புக்கு அடுத்து அவள் விரும்புவது அன்பையும், அன்பு செய்யப்படுவதையும் தான்.

உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவா உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது, செயல்படுவது என ஒவ்வொன்றையும் தனது தாயின் உணர்வின் மூலம் ஒவ்வொரு பெண்ணும் இயல்பாகப் பெறுகிறாள்.

ஆண் குழந்தை தனது தாயிடம் இருந்து விலகிச் செல்வதைப் போல், பெண் குழந்தை செல்வதில்லை. ஒவ்வொரு செயலையும் தாயிடம் இருந்து கற்றுக்கொள்கிறாள்

வாழ்நாள் முழுவதும் அவளது இந்த இயல்பு ஆணைக் காட்டிலும் பெண்ணுக்கு அதிக பாதுகாப்பை அளிக்கிறது. காதலிக்கவும், காதலிக்கப்படவும் அவளுக்குச் சக்தியை அளிக்கிறது. பிறரை நேசிக்கவும், பராமரிக்கவும், பாதுகாக்கவும் திறனை அளிப்பதோடு, ஆண் மகனையும் அவள்பால் கவரச் செய்கிறது.

ஆணின் இதயத்தில் மூடப்பட்ட மென்மையான உணர்வுகளை வெளிப்படுத்தி காதலுக்கும், நெருக்கத்துக்கும் அவள் காலங்காலமாக ஓர் இணைப்பு பாலமாக இருந்து வருகிறாள்.

இதனால் உணர்வு ரீதியாக அனைவரையும் கவரும் வகையில், ஆணை விட பெண் ஒரு படி மேலே போய்விடு கிறாள். ஆண்களிடம் இல்லாத பெண்களின் சிறப்புக்குணம் இது.

# செய்து பாருங்களேன்

## நீங்களும் அழகிதான்...!



பெண்கள் எப்பொழுதும் தங்களை அழகாக வைத்திருப்பதற்கு அரும்பாடுபடுவார்கள். அப்படி அழகாக இருப்பதற்கான சில வழிகள்

**கண்**

கண்ணைச் சுற்றி உள்ள கருவளையம் நீங்க வேண்டுமாயின் வெள்ளரிக்காய் சாற்றை பஞ்சில் நனைத்து கண்கள் மீது தினமும் வைத்து வரவும்.

**உதடு**

உதடு வசீகரமாக இருக்க வேண்டுமா? முட்டையின் வெண்கரு, பாதாம் பவுடர், பால் ஆகிய மூன்றையும் கலந்து உதட்டில் தடவி அது காய்ந்ததும் இளஞ்சூடான நீரில் கழுவினால் கிடைத்துவிடும் வசீகரம்.

**முகத்தின் எண்ணெய் பசை**

முட்டையின் வெண்கரு 7 தேக்கரண்டி, தேன் கால் தே.க., மாதுளைச் சாறு அரை தே.க. போன்ற மூன்றையும் கலந்து, அரை மணி நேரம் வரையில் முகத்தில் பூசிவிட்டு பின்னர் கழுவினால் எண்ணெய் பசை ஓடிவிடும்.

**முக வறட்சி**

பச்சை கொத்த மல்லி அல்லது புதினாவை நன்றாக அரைத்து முகத்தில் பூசி பிறகு சிறிது நேரம் கழித்து கழுவினால் வறட்சி நீங்கும்.

**கரும்புள்ளி**

முகப்பருவால் ஏற்படும் கரும்புள்ளிகளை நீக்க சாதிக்காயை அரைத்துப் பூசுங்கள்.

**முகப்பரு**

பூண்டு அல்லது கருந்துளசியை அரைத்துப் பூசிவர நாளடைவில் பருக்கள் மறையும்.

**வாய் நாற்றம்**

புதினா கீரையைக் காய வைத்து தூளாக்கி அதனால் பல் துலக்குவதால் வாய் நாற்றமின்றிப் பல் பளிச்சென்றிருக்கும்.

**வெண்மையான பல்**

இரவு நேரத்தில் பச்சை கரட்டை மென்று தின்றால் பல் உறுதியடைவதுடன் வெண்மையும் பெறும்.

**கை**

பாத்திரம் தேய்ப்பதால் ஏற்படும் கை வெடிப்புகளுக்கு உருளைக்கிழங்கை வேக வைத்து பொடித்து கைகளில் தேய்த்து வந்தால் கை மிருதுவாகும்.

**நகம்**

நகங்களில் சிதைவு ஏற்படாமலும் வெண்மையாகவும் இருக்க வேண்டுமாயின் சூரியகாந்தி எண்ணையை கை, கால் நகங்களில் தடவ வேண்டும்.


**உடல் பருமன்**

பப்பாளிக்காயை பொரியலோ, குழம்போ வைத்து வாரம் இரண்டு முறை சாப்பிட்டு வந்தால் உடல் பருமன் குறையும்.

**பாதம்**

பாதத்தில் உள்ள வெடிப்பு நீங்க விளக்கெண்ணை ஒரு தே.க., பன்னீர் இரண்டு தே.க., எலுமிச்சம் சாறு ஒரு தே.க. ஆகிய மூன்றையும் கலந்து வெந்நீரில் பத்து நிமிடம் காலை ஊறவிட்டு, பின்பு இக்கலவையைப் பூசிவர வெடிப்பு நீங்கும்.

# கண்மூடித் திறப்பதற்குள்



என்னை நான்
வெறுக்கிறேன்
ஏன்?
நான் பெண்ணாகப்
பிறந்தமையால்
பெண்மை
தன்னைத்தான்
காப்பாற்ற முடியவில்லை
என்ற ஏக்கம்
எனக்குள் நெருப்பாகி
கொதித் தெழுகிறது
அன்று
திரௌபதையின்
மானத்தை கண்ணன்
காப்பாற்றினான்
இன்று
எத்தனை திரௌபதைகள்
மானபங்கப்படுத்தப்படுகிறார்கள்
இவர்களை
காப்பாற்ற எந்தக்
கண்ணன்
வருவான்-மீண்டும்
எனக்குள் தீப்பிழம்பு
எழுந்து எழுந்து
ஓய்ந்து போகிறது
நான் கண்மூடித்
திறப்பதற்குள்
எத்தனையோ பெண்கள்
கற்பழிக்கப்படுகிறார்கள்.

ரமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
12 * 07 * 1927

மறைவு
02 * 02 * 2012

அமரர்
### வைத்திலிங்கம் செல்லையா

திதி-தசமி 21.01.2013 திங்கட்கிழமை

ஆண்டு ஒன்று போனாலும்
ஆறாது எங்கள் மனத்துயரம்
நித்தமும் நெஞ்சில் காத்திருக்கும்
உங்கள் நினைவலைகள்
என்றென்றும் அழிவதில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மக்கள்
செல்வறஞ்சினி(தொட்டிலடி),
செல்வலிங்கம்(கனடா),
ஞானறஞ்சிதம்(நோர்வே),
சாந்தி(குணறஞ்சினி-நோர்வே),
மனோறஞ்கினி(லண்டன்),
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

சண்டிலிப்பாய் மத்தி,
தொட்டிலடி.

(சி/5757)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
04.09.1943

மறைவு
03.02.2012

### அமரர் தண்டாயுதபாணி புஸ்பவதியம்மா

திதி: ஏகாதசி

நாளை (22.01.2013) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனநிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

கிழக்குத்தெரு, வேம்படி,
வல்வெட்டித்துறை.
(27705)(6.7.11)

- குடும்பத்தினர்.

# பொலிஸாருக்கு டிமிக்கிவிட்டவர் மாட்டிக்கொண்டார்

முன்னர் செய்த குற்றங்களுக்கு பிணையில் வெளியே வந்து பொலிஸாருக்கு டிமிக்கிவிட்ட நபர் வசமாக மாட்டிக்கொண்டார்.

சட்டவிரோத சாராய விற்பனையில் ஈடுபட்டு தண்டனை பெறாமல் தப்பிச்சென்ற இவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதமும் 6மாத சிறையும் விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்று.

வேலணை 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவருக்கே இந்தத் தண்டனை விதிக்கப் பட்டது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

வேலணையில் சட்டவிரோதமாக மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் இவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட அவர் நீதி மன்றுக்குச் சமூகமளிக்காது இருந்து வந்துள்ளார்.

இந்த நிலையிலேயே கடந்த 11 ஆம் திகதி 4 ஆம் வட்டாரம் அம்மன் கோயிலை அண்மித்த பகுதியில் வயோதிபப் பெண்ணைத்தாக்கி அவரிடமிருந்து பணம், கைத்தொலைபேசி என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுவிட்டார்.

அவற்றை பறி கொடுத்த பெண் ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய்தார். அதனடிப்படையில் அவரது வீட்டுக்கு சென்ற பொலிஸார், சந்தேக நபரை கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

அதன்போது முன்னர் சட்ட விரோதமாக சாராயம் விற்ற குற்றத்துக்காக அபராதமும், 6 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறின் மேலதிகமாக 3 மாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவிடப் பட்டது.

வயோதிபப்பெண்ணிடம் கொள்ளையடித்தமை தொடர்பான விசாரணை இடம் பெற்று அது தற்போது தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (16-4)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### வீரகத்தி இராசம்மா

எரிச்சோலை ,சமரபாகு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வீரகத்தி இராசம்மா நேற்று (20.01.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் கந்தையா- பசுபதி தம்பதியரின் அன்பு மகளும் சரவணை-லட்சுமி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வீரகத்தியின் அன்பு மனைவியும் சீதாதேவி,ரஞ்சிதாதேவி, சச்சிதானந்தம் (மத்திய கிழக்கு நாடு) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற கிருஷ்ணசாமி, சந்திரசேகரம் (நிர்வாக கிராம அலுவலர், நானாட்டான் பிரதேச செயலகம்), ஸ்ரீமலர் ஆகியோரின் அன்பு மாமியும், துரைராசா புலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2013) திங்கட் கிழமை மு.ப 11.00 மணிக்குஅவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்வெட்டித்துறை எள்ளங்குளம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சமரபாகு,
வல்வெட்டித்துறை.
(சி/5758)(6.7.4)

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

## முதலாம் ஆண்டு நினைவு



அகம் மகிழ
06 * 10 * 1932

குலம் நெகிழ
02 * 02 * 2012

### திருமதி சதாசிவம் சிவபாக்கியம்

திதி-தசமி(21.01.2013)

ஆண்டு ஒன்று சென்றதம்மா
ஆறவில்லை எம்துயர்
தூண்டா மணி விளக்காய் நின்று
ஆலய விளக்கேற்றினீர்கள்
தேறுதல் சொல்ல நீங்கள் இல்லை
திக்குத் திசையறியாது நிற்கின்றோம்
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு மாறாது அம்மா.

ஐயா கடையடி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.
(சி/5759)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை ஜெயரட்ணம்

துறைமுகம் மாதகலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஜெயரட்ணம் நேற்றுமுன்தினம் (19.01.2013) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -தங்கமணியம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி -புவனேஸ்வரியம்மா தம்பதியரின் மருமகனும், சந்திரமலரின் அன்புக் கணவரும், ஜெயச்சந்திரன், துளசி, ஜெயபிரகாஷ், ஜெயராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுவர்ணா, காலஞ்சென்ற அன்ரன் யூட் செல்வராஜா ஆகியயோரின் பாசமிகு மாமனும், ஜெயகாஸ், கவிநயா, புவிதன், தரணிகா ஆகியோரின் பேரனும், சிவபாக்கியம், காலஞ்சென்ற சண்முகசுந்தரம் மற்றும் பரமேஸ்வரியம்மா, சிவராசா, தேவாமிர்தம், ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நுணசை வீதி, மாதகல் எனும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (21.01.2013) திங்கட்கிழமை பி.ப 1.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 3.00 மணிக்கு மாதகல் போதிப்புலம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணசை வீதி, மாதகல்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கனகசுந்தரம் சிவராசா



(முன்னாள் மினிபஸ் உரிமையாளர் கொடிகாமம்- யாழ்ப்பாணம்)

கோயிலாமனை, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் சிவராசா(19.01.2013) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வை.கனகசுந்தரம் மற்றும் நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் ஆறுமுகம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக்கணவரும் சிவரஞ்சன்(கனடா), சிவரஞ்சினி (ஆசிரியை- கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்), சிவப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைவாணி(கனடா), சுபாஸ்கரன் ஆசிரியர்( கண்டி/அஷார் கல்லூரி) ஜீவநேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் சிவரூபவதி, சிவ நேசவதி (வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், யோகலிங்கம், அமிர்த லிங்கம் (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கம்சிகா (கனடா), ஷியாநிஷா (கனடா), கபிநாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கோயிலாமனை,கொடிகாமம்.
T.P:0773669620, 0779181449.
(சி/5756) (6.7.4)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்டப் பூப்பந்து சம்பியன் உடுவில்

வலி .வடக்கு, ஜன. 21

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு, வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்திய பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் பிரதேசசெயலக அணி மவட்ட சம்பியனானது.



மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணியும் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் இரண்டு நேர் தனி நபர்சுற்றுக்களையும் உடுவில் பிரதேச செயலக அணி கைப்பற்றியதால் இலகுவாக மாவட்ட சம்பியனாகத் தெரிவானது.

முதல் தனிநபர் சுற்று ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர்.நிஷாதாரணியும் உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜே.நிவர்சிவாவும் மோதிக் கொண்டனர்.

முதல் சுற்றை யாழ்ப்பாணம் பிரதேச செயலக வீராங்கனை 21:19 புள்ளிகள் என்ற நிலையில் தனதாக்கினார். எனினும் இரண்டாம், மூன்றாம் சுற்றுக்களை உடுவில் பிரதேச செயலக வீராங்கனை முறையே 21 : 11 ,21 : 17 புள்ளிகள் என்ற அடிப்படையில் கைப்பற்றி வாகை சூடினார்.

இரண்டாம் தனிநபர் சுற்றில் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி.மதுதாரணியும் உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சி.கோபிகாவும் மோதிக் கொண்டார்கள்.

முதல் இரண்டு நேர் சுற்றுக்களையும் உடுவில் பிரதேச செயலக வீராங்கனை 21: 15, 21 : 14 என்ற புள்ளிகள் அடிப்படையில் சுவீகரித்தார். இவ்வாறு தனி நபர் சுற்றுக்களை வெற்றி கொண்டதால் உடுவில் பிரதேச அணி பூப்பந்தாட் டத்தில் மாவட்ட சம்பியனா கியது.

இந்தப் போட்டிக ளுக்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட பதில் விளையாட்டு அதிகாரி எம்.ஆர். மோகனதாஸ் ஏற்பாடு செய்திருந்தார்.

(ங-86)

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி

★ நவஜீவன் விளையாட்டுக் கழகம் எதிர் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக 'ஏ' அணி

மாலை 4.30 மணி

★ மனோகரா விளையாட்டுக் கழக 'ஏ' அணி எதிர் உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக 'பி'அணி.

★ ★ ★

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமான 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

மாலை 6 மணி

★ சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் அல்-இக்பால் விளையாட்டுக்கழகம். (த-23)

## கழகங்களுக்கான கலந்துரையாடல்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான 2013 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கழங்கங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரை தவறாது கலந்துகொள்ளும்படி விளையாட்டு அலுவலர் பிரசன்னா அறிவித்துள்ளார். (ங-86)

# கொலின்ஸ் கிரிக்கெட் முடிவுகள் சில

கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் குஞ்சர் கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் நாள் நடைபெற்ற முதல் 4 போட்டிகளினதும் முடிவுகள் வருமாறு,–


கவிதரன்

### ஆட்டம்- 1

**இமையாணன் இளைஞர் கழகம்**
**எதிர்**
**உடுப்பிட்டி யுத் அணி**

முதலில் துடுப்பெடுத்தாடிய இமையாணன் இளைஞர் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில், 7இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது.

இமையாணன் இளைஞர் அணி சார்பாக மகிந்தன் 25 ஓட்டங்களையும், கவிதாஸ் 17 ஓட்டங்களையும் பெற்றனர். உடுப்பிட்டி யுத் அணி சார்பாக தர்சன் , டிக்சன் , சங்கர் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், ராகுலன் ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யுத் அணி 9.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 39 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுத் தோல்வியடைந்தது. இதில் அந்த அணி சார்பாக லவன் 9 ஓட்டங்களை அதிக பட்சமாக எடுத்தார்.

பந்து வீச்சில் இமையாணன் அணி சார்பாக கவிதரன், சைமன் ஆகியோர் தலா 4 இலக்குளை வீழ்த்தினர்.

ஆட்டநாயகன் - கவிதரன் (இமையாணன் அணி)


அபி

### ஆட்டம்-2

**யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம்**
**எதிர்**
**ஞானவைரவர் விளையாட்டுக் கழகம்**

முதலில் துடுப்பெடுத்தாடிய யங்கம்பன்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 99 ஓட்டங்களை விளாசியது. இதில் யங்கமன்ஸ் அணி சார்பாக அபி-24 ஓட்டங்களையும், தர்சன்-15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஞானவைரவர் அணி சார்பாக திருக்குட்டி 3 இலக்குகளையும், அருள் 2 இலக்குகளையும் சாய்த்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஞானவைரவர் அணி 9.1 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 78 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதால் யங்கம்பன்ஸ் அணி 11 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இதில் திருக்குட்டி 22 ஓட்டங்களையும், அருள் 19 ஓட்டங்களையும், பெற்றனர். பந்து வீச்சில் யங்கம்பன்ஸ் அணி சார்பாக தர்சன் 3 ஓட்டங்களையும், சுஜீபன் 2 ஓட்டங்களையும் பிரகாஷ் 2 ஓட்டங்களையும், பவி 2 ஓட்டங்களையும், அபி 1 இலக்கையும் கைப்பற்றினர்.

இதில் ஆட்டநாயகனாக யங்கம்பன்ஸ் அணி வீரர் அபி தெரிவு செய்யப்பட்டார்.


அச்சுதன்

### ஆட்டம்-3

**மைக்கல் விளையாட்டுக் கழகம்**
**எதிர்**
**நெடியகாடு விளையாட்டுக் கழகம்**

முதலில் துடுப்பெடுத்தாடிய நெடியக்காடு அணி 10 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அதிக ஓட்டமாக சதீஸ்காந் 36 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் மைக்கல் அணி சார்பாக வேனுகாந்தன் 2 இலக்கினையும், கொலிங்டன் 4 இலக்கினையும், வினோயன் 2 இலக்கினையும், தர்சன்-1 இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 9.5 பந்துபரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இதில்அச்சுதன்-32 ஓட்டங்களையும், ரகு 12 ஓட்டங்களையும், பந்து வீச்சில் நெடியக்காடு அணி சார்பாக பார்த்தீபன் 3 இலக்கினையும் ,தனுராஜ் மற்றும் [illegible] இலக்கினையும் கைப்பற்றினர்.

இதில் ஆட்ட நாயகனாக மைக்கல் அணியைச் சேர்ந்த அச்சுதன் தெரிவு செய்யப்பட்டார.


பிரகாஷ்

### ஆட்டம்-4

**நியூபவர் விளையாட்டுக் கழகம்**
**எதிர்**
**பிங்பொங் விளையாட்டுக் கழகம்**

பிங்பொங் அணியை எதிர்த்து நியூபவர் அணி மோதியது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பிங்பொங் அணி 9.1 பந்துப் பரிமாற்றத்தில் சகல இலக்குகளையயும் இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த அணி சார்பாக சயந்தன் 7 ஓட்டங்களை மாத்திரம் பெற்றார். பந்துவீச்சில் நியூபவர் அணி சார்பாக பிரகாஷ் 3 இலக்குகளையும், கோபி 3 இலக்குகளையும் , கிரி மற்றும் ராம்குமார் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூபவர் அணி 5 பந்துப் பரிமாற்றத்தில் 4 இலக்குகளை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இதில் பபி 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் பிங்பொங் அணி சார்பாக மனோ, குமார் ஆகியோர் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.


இதில் ஆட்டநாயகனாக நியூபவர் அணியின் பிரகாஷ் தெரிவு செய்யப்பட்டார்.

(ங-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையில் கரைந்த வெற்றி





ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்கும் இடையிலான நான்காவது போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டுள்ளது.

சிட்னி மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க், முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 50 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது இலக்கை 4 ஓட்டங்களுக்கே இழந்த அந்த அணி, அதன் பின்னர் 2ஆவது இலக்குக்காக 46 ஓட்டங்களைப் பகிர்ந்த போதிலும் அதன் பின்னர் இலக்குகள் இழக்கப்பட்டு 8 இலக்குகளை இழந்து 166 ஓட்டங்களையும் 9 இலக்குகளை இழந்து 182 ஓட்டங்களையும் பெற்றுத் தடுமாறியது.

எனினும் இறுதி வீரர்கள் சிறப்பாக ஆடியிருந்தனர். துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக டேவிட் வோணர் 73 பந்துகளில் 60 ஓட்டங்களையும் மிற்சல் ஸ்ரார்க் 37 பந்துகளில் 52 ஓட்டங்களையும் மத்தியூ வேட் 53 பந்துகளில் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக நுவான் குலசேகர 10 பந்துப்பரிமாற்றங்களில் 30 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் லசித் மலிங்க, ரங்கன ஹேரத் மற்றும் திஸர பெரேரா ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

223 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 3.2 பந்துப் பரிமாற்றங்களில் இலக்கு இழப்பின்றி 14 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டதன் காரணமாகப் போட்டி இடைநிறுத்தப்பட்டது.

எனினும் மழை தொடர்ந்ததன் காரணமாக போட்டியை மீள ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டதால் போட்டி கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் இலங்கை அணி 4 போட்டிகளின் நிறைவில் 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டெழுந்தது நியூசிலாந்து



தென்னாபிரிக்காவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் நியூஸிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது.

போலன்ட் பார்க் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 46.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது இலக்கை 25 ஓட்டங்களுக்கு இழந்த தென்னாபிரிக்க அணி, அதன் பின்னர் தொடர்ச்சியாக இலக்குகளை இழந்து தடுமாறியிருந்தது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக டு பிலெஸெஸ் 72 பந்துகளில் 57 ஓட்டங்களையும் றயன் மக்லரன் 39 பந்துகளில் 33 ஓட்டங்களையும் கொலின் இன்க்ராம் 58 பந்துகளில் 29 ஓட்டங்களையும் ரோறி கிளெய்ன்வெல்ட்ற் 20 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக மிற்சல் மக்லநகன் 10 பந்துப் பரிமாற்றங்களில் 20 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் கேன் வில்லியம்ஸன் 7.2 பந்துப்பரிமாற்றங்களில் 22 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் ஜேம்ஸ் ஃபிராங்ளின், கைல் மில்ஸ் ஆகியோர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

209 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 45.4 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவதுஇலக்கை ஓட்டமேதும் பெறாமலேயே ரன் அவுட் முறையில் இழந்த நியூஸிலாந்து அணி, தொடர்ச்சியாக இலக்குகளை இழந்து 7 இலக்குகளை இழந்து 105 ஓட்டங்களையும் 8 இலக்குகளை இழந்து 140 ஓட்டங்களையும் 9 இலக்குகளை இழந்து 187 ஓட்டங்களையும் பெற்றுத் தடுமாறிய போதிலும், ஜேம்ஸ் ஃபிராங்ளின் இறுதி நேரத்தில் சிறப்பாக ஆடி நியூஸிலாந்து அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் ஃபிராங்ளின் 61 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும் பஜே.வற்லிங் 78 பந்துகளில் 45 ஓட்டங்களையும் பிரெண்டன் மக்கலம், கைல் மில்ஸ் ஆகியோர் தலா 26 ஓட்டங்களையும் நேதன் மக்கலம் 21 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபரிக்க அணி சார்பாக றயன் மக்லரன் 8.4 பந்துப் பரிமாற்றங்களில் 46 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் ரோறி கிளெய்ன்வெல்ட்ற், லொன்வபோ சொற்சொப ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக ஜேம்ஸ் ஃபிராங்ளின் தெரிவானார்.

# பிக்பாஷ் சம்பியனானது பிறிஸ்பேண் ஹீற்

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றுவந்த பிக்பாஷ் லீக் தொடரின் சம்பியனாக பிறிஸ்பேண் ஹீற் அணி தெரிவாகியுள்ளது.

பேர்த் ஸ்கோச்சர்ஸ் அணிக்கெதிரான இறுதிப் போட்டியில் பிறிஸ்பேண் ஹீற் அணி 34 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பேர்த் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பிறிஸ்பேண் ஹீற் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.



இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பிறிஸ்பேண் ஹீற் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது.

ஓரளவு மெதுவான ஆரம்பத்தைப் பெற்றுக்கொண்ட அந்த அணி, அதன் பின்னர் இறுதி நேரத்தில் வேகமாக ஆடி போராடத்தக்க ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் பிறிஸ்பேண் ஹீற் அணி சார்பாக ஜோ பேர்ண்ஸ் 27 பந்துகளில் 43 ஓட்டங்களையும் டானியல் கிறிஸ்டியன் 21 பந்துகளில் 37 ஓட்டங்களையும் லூக் பொமர்ஸ்பக் 38 பந்துகளில் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பேர்த் ஸ்கோச்சர்ஸ் அணி சார்பாக ஜேஸன் பெஹ்ரென்டோர்ப் 2 இலக்குகளையும் மைக்கல் பயர், நேதன் கோல்ட்டர் நீல், பரா ஹெறாக ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

168 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பேர்த் ஸ்கோச்சர்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்று 34 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது இலக்கை 5 ஓட்டங்களுக்கே இழந்த அந்த அணி, அதன் பின்னர் தேவையான வேகத்தில் துடுப்பெடுத்தாடாததோடு இலக்குகளையும் தொடர்ச்சியாக இழந்தது.

துடுப்பாட்டத்தில் பேர்த் ஸ்கோச்சர்ஸ் அணி சார்பாக அடம் வோகஸ் 32 பந்துகளில் 49 ஓட்டங்களையும் மார்க்கஸ் நோர்த் 23 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கேமர் ரோச் 18 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் அலஸ்ரர் மக்டேர்மட், பென் கட்டிங் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் டானியல் கிறிஸ்டியன், கிறிஸ் லைன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றியதோடு, நேதன் ஹொரிட்ஸ் 3 பந்துப் பரிமாற்றங்களில் 11 ஓட்டங்களை மாத்திரம் வழங்கியிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக நேதன் ஹொரிட்ஸ் தெரிவானதோடு, தொ ரின் நாயகனாக ஆரொன் ஃபின்ச் தெரிவானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. ரெனிஸ் ஆறாம் நாளில்

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றுவரும் ஆஸ்திரேலியப் பகிரங்க ரென்னிஸ் போட்டிகளின் 6ஆம் நாள் போட்டி முடிவுகள் வருமாறு-

ஆண்களுக்கான தனிநபர் போட்டிகளில் உலகின் 2ஆம் நிலை வீரரான ரோஜர் பெடரர், பேர்னாட் ரொமிகை 6 - 4, 7 - 6, 6 - 1 என்ற கணக்கில் வெற்றிகொண்டார்.

இது கிராண்ட்ஸ்லாம் வரலாற்றில் ரோஜர் பெடரர் பெற்றுக் கொண்ட 2 ஆயிரத்து500 ஆவது வெற்றியாகும்.

உலகின் 3ஆம் நிலை வீரரான அன்டி முர்ரே, ரிக்கார்டஸ் பெரன்கிசை 6-3,6-4,7-5 என்ற கணக்கிலும் 14ஆம் நிலை வீரர் கைல்ஸ் சைமன், கேயல் மொன்பல்சை 6-4,6-4,4-6,1-6,8-6 என்ற கணக்கிலும் 7ஆம் நிலை வீரர் ஜோ வில்பரட் சொங்கா, பிளாஸ் கவ்சிகை 6-2,6-1,6-4 என்ற கணக்கிலும் வெற்றி கொண்டனர்.


நேற்றைய அதிர்ச்சித் தோல்வியாக உலகின் 6ஆம் நிலை வீரரான ஆர்ஜென்டினாவின் ஜூவான் மார்ட்டின் டெல் பொட்ரோ தோல்வியடைந்தார். அவர் பிரான்ஸின் ஜெரமி கார்ட்டியிடம் 3 - 6, 3 - 6, 7 - 6, 6 - 3, 3 - 6 என்ற கணக்கில் தோல்வியடைந்தார்.


பெண்களுக்கான தனிநபர் போட்டிகளில் முதல் நிலை வீராங்கனை விக்டோரியா அஷரெங்கா, ஜேமி ஹம்ப்ரனை 6 - 4, 4-6,6-2 என்ற கணக்கிலும் 3ஆம் நிலை வீராங்கனை செரினா வில்லியம்ஸ், அயுமி மொரிட்டோவை 6-1,6-3 என்ற கணக்கிலும் வெற்றிகொண்டனர்.


10ஆம் நிலை வீராங்கனையான கரோலின் வொஷ்னியாக்கி, செஸியா சுரெங்காவை 6 - 4, 6 - 3 என்ற கணக்கிலும் 14ஆம் நிலை வீராங்கனையான மரியா கிரிலெங்கோ, 20ஆம் நிலை வீராங்கனையான யனினா விக்மயெரை 7 - 6, 6 - 3 என்ற கணக்கிலும் தோற்கடித்தனர்.

முன்னணி நட்சத்திரங்கள் கலக்கல்









எதிர்பார்க்கப்படாத முடிவாக, உலகின் 16ஆம் நிலை வீராங்கனையான இத்தாலியின் ரொபேர்ட்டா வின்ரி, ரஷ்யாவின் எலினா வெஸ்னினாவிடம் 6 - 4, 6 - 7, 4 - 6 என்ற கணக்கில் தோல்வியடைந்தார்.

(ந)






**இயந்திரம் மூலம் நெல் அறுவடை**

**தென்மராட்சிப் பிரதேசத்தில் நெல்வயல்கள் இயந்திரம் மூலமாக (Combine Harvester) அறுவடை செய்து கொடுக்கப்படும் (தண்ணீர் உள்ள வயல்களும்).**

தொடர்பு: அமேசின் என்ரபிறைசஸ்
T.P- 0777742436 (சுஜீவன்)

**மணல் விற்பனைக்குண்டு**

கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்துக்கே கொண்டு வந்து தரப்படும்.

**4 டிரக்டர்-23,000/-**

தொடர்புகளுக்கு
தீபன்
0722694462

**ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள்**

யாழ். மாவட்ட போதனா வைத்தியசாலையிலும், ஏனைய வைத்திய சாலைகளிலும் பணியாற்றி ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத் தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பிக்க விருப்பமுடைய தாதிய உத்தியோகத்தர்கள் பண்ணை சுகாதார கிராமத்தில் அமைந்துள்ள வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சில் தங்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

திரு.இ.இரவீந்திரன்
செயலாளர்
சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு
வடமாகாணம்.

# HND @ IIS CITY CAMPUS



edexcel BTEC HND

in Computing /
in Civil Engineering /
in Quantity Surveying /
in Business Management .

மாணவர்களே!!!
January 2013 பிரிவிலே மேற்குறிப்பிட்ட HND கற்கை நெறிகளுக்கு தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்களுக்கு TOSHIBA i3 Laptop கணனி ஒன்றினை IIS பரிசாக வழங்குகின்றது.

New Batch Starts on 23.01.2013


சேந்தன் யாழ்ப்பாணம்

எனது இடை நிலைக் கல்வியை இந்தியாவில் மேற்கொண்டு நாட்டில் சாதகமான சூழ்நிலையால் எனது சொந்த மண்ணில் உயர்கல்வியைத் தொடர விரும்பினேன். உயர்கல்விக்காக பொருத்தமான நிறுவனம் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. கல்வித்துறையில் அனுபவம் வாய்ந்தவர்களின் அறிவுரையின் படி IIS City Campus இல் HND in Software Development துறையைத் தேர்வு செய்தேன். இறுதியாண்டு மாணவனாகிய எனக்கு, எமது Campus பங்கு பற்றிய IT Competition ஒன்றில் கலந்து கொண்டு எனது ஆளுமைத்திறனை வெளிப்படுத்தியதன் காரணமாக இலங்கையில் Software Development துறையில் முன்னணி நிறுவனம் ஒன்றில் தொழில் வாய்ப்பைப் பெற முடிந்தது. எனக்கு கைமேல் பலன் கிடைத்தது. சரியான உயர்கல்வி நிறுவனம் ஒன்றைத் தெரிவு செய்ததே இதற்கான காரணம் என நான் கருதுகின்றேன்.

என்போன்ற மாணவர்களின் வளர்ச்சிக்கும் தொழில்வாய்ப்பிற்கும் IIS ஓர் சிறந்த வழிகாட்டி என நான் பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன்.

IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk

பல நூறு மாணவர்கள் பயணித்த இவ் வெற்றிப் பாதையில் உங்கள் காலடியையும் பதித்துக் கொள்ளுங்கள்

மேலதிக விபரங்களுக்கு:
021 4 900 900


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.